

# சிரிக்கவும் சிந்திக்கவும்

இணுவையூர்
கலாபூஷணம் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்

சுமதி பதிப்பகம்
கொழும்பு - 06

# சிரிக்கவும்
# சிந்திக்கவும்

இணுவையூர்
கலாபூஷணம் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்

சுமதி பதிப்பகம்
கொழும்பு - 06

# நூல் தரவு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | சிரிக்கவும் சிந்திக்கவும் |
| நூலாக்கம் | : | இணுவையூர் ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு 2017 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | சுமதி பதிப்பகம் வெளியீடு –5 |
| அச்சுப்பதிப்பு | : | கீதா பப்ளிகேஷன்<br>கொழும்பு – 13<br>0777–350088 |
| பக்கங்கள் | : | 160 |
| விலை | : | 500/= |
| ISBN No. | : | 978-955-43909-0-4 |


**சுமதி பதிப்பகத்தாரின் ஏனைய வெளியீடுகள்:-**

1. சானா + பரியாரி பரமர்
2. "இணுவை இரகு"வின் ஆக்கங்கள் – உரைகள் – உணர்வுகள்
3. திரைவிலகும் போது..... ஏ.ஆர்.திருச்செந்தூரன்
4. மறைந்தும் மறையாதவர்கள் – ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்


# பொருளடக்கம்


1. அணிந்துரை 4
2. என்னுரை 6
3. பகுதி I
   – நகைச்சுவைக் கதைகள் 9
4. பகுதி II
   – சிறுவர் நகைச்சுவைக் கதைகள் 77
5. பகுதி III
   – உண்மைக் கதைகள் 87
6. பகுதி IV
   – கணவன் மனைவிக் கதைகள் 97
7. பகுதி V
   – மிருகங்களின் கதைகள் 109
8. பகுதி VI
   – பைத்தியக்காரக் கதைகள் 117
9. பகுதி VII
   – வயிற்றெரிச்சல் கதைகள் 131
10. பகுதி VIII
   – ஒருபக்கக் கதைகள் 147
11. இணைப்புக்கள் 156






# அணிந்துரை



கலாபூஷணம் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களை நான் கொழும்பு நகைச்சுவைமன்றத் தலைவராக இருந்த காலத்திலிருந்து நன்கறிவேன். எப்போதும் மலர்ந்த முகத்துடனும், நகைச்சுவைப் பேச்சுடனும், மாறாத அன்புடனும் பழகுபவர். அன்னாரது நகைச்சுவைப் பேச்சே எங்களது நட்பை இறுகச் செய்தது என்றால் அது சற்றும் மிகையல்ல.

"நகைச்சுவை வேந்து" அமரர் சு.ஸ்ரீஸ்கந்தராஜா கொழும்பு நகைச்சுவை மன்றப் பொதுச் செயலாளராகவும், நான் தலைவராகவும் இருந்தபோது நானும், இரகுபதி பாலஸ்ரீதரனும் பல நகைச்சுவை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோம். குறிப்பாக "கலக்கப்போவது யாரு?" என்றொரு நகைச்சுவை நிகழ்ச்சி! இருவரும் கலந்துகொண்டு மாறி மாறி நகைச்சுவைத்துணுக்குகள் கூறிக் கூட்டத்தை மகிழ்வித்து ஒரு 'கலக்கு' கலக்கினோம்.

தொடர்ந்து அவர் நகைச்சுவைத்துணுக்குகளை பல்வேறு சஞ்சிகைகளிலும் எழுதிவந்தார். அவை வாசகரிடம்

மிகுந்த வரவேற்பைப் பெற்றன. நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் அவரது நகைச்சுவைத் துணுக்குகளையும், ஒருபக்கக் கதைகளையும் ஆவணப்படுத்தி நூலாக வெளி யிடும்படி கேட்பதுண்டு. 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று கர்மவீரர் காமராஜர் பாணியில் கூறுவார்.

எதற்கும் ஒரு நேரம் வரவேண்டுமல்லவா? இன்று அது கைகூடி உங்களின் கைகளில் தவழ்கிறது! வாசித்து மகிழுங்கள்.

இந்நூல் நூலாசிரியரின் மூன்றாவது நூல். ஏனைய இரண்டு நூல்களுக்கு நீங்கள் அளித்த பேராதரவை இந்நா லுக்கும் வழங்க வேண்டும்.

நூலாசிரியரின் எழுத்துப் பணிகள் தொடரவும், வளரவும் எமது இனிய வாழ்த்துக்கள்.!!

**க.அரசரட்ணம்** B.A. Dip.in.Human Rights

(சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர்)

# என்னுரை



பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், வானொலிகளிலும், மேடைகளிலும் வெளிவந்த, ஒலிபரப்பான எனது நகைச்சுவை நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கி ஆவணப்படுத்துமாறு எனது குடும்பத்தினரும், நண்பர்களும் நச்சரிப்புச் செய்ததின் எதிரொலியே இந்நூல் வெளியீடு!

இந்நூலில் வெளிவந்துள்ள நகைச்சுவைத் துணுக்குகளை நீங்கள் ஏற்கனவே கேட்டிருக்கலாம், வாசித்திருக்கலாம், இரசித்திருக்கலாம், மகிழ்ந்திருக்கலாம், மனம் விட்டுச் சிரித்திருக்கலாம்.

எனினும் நாங்கள் சிவாஜி, எம்.ஜி.ஆர்., ரஜனி, கமல், விஜய், அஜித் படங்களை மீண்டும், மீண்டும் பார்ப்பதில்லையா? அகிலன், கல்கி, நா.பார்த்தசாரதி, ஜெயகாந்தன் கதைகளை திரும்பத் திரும்ப வாசிப்பதில்லையா? பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டையார், கண்ணதாசன், வைரமுத்து, காசி ஆனந்தன் கவிதைகளை மனமார மீண்டும் மீண்டும் இசைப்பதில்லையா?

அதேபோல்தான் இதுவும்! மீண்டும் மீண்டும் இரசிப்போமே எனது நகைச்சுவைத் துணுக்குகளை!

இந்நூலிலுள்ள அனேக துணுக்குகள் மட்டக்களப் பிலிருந்து வெளிவந்த "செங்கதிர்" சஞ்சிகையிலும் "இணுவில் ஒலி" "தாயக ஒலி" சஞ்சிகைகளிலும் ஒரு பக்கக் கதைகள் "ஞானம்" சஞ்சிகைகளிலும், இன்னுமொரு கதை தமிழகத்திலிருந்து வரும் "தினத்தந்தி" பத்திரிகையிலும் வெளிவந்தன. இவற்றைத் தங்கள் தங்கள் சஞ்சிகைகளில் பிரசுரித்து "இன்னும் எழுதுங்கள்; இன்னும் எழுதுங்கள்" என்று என்னை ஊக்குவித்த அந்த சஞ்சிகைகளின் ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இவ்வெளியீட்டில் தங்களது பூரண ஒத் துழைப்பை நல்கிய எனது துணைவியார் சுமதி பாலஸ்ரீதரன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கும் எனது எண் ணற்ற நண்பர்களுக்கும், குறிப்பாகக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினருக்கும் உளமார்ந்த நன்றிகள்.

நூலுக்கு நல்லதொரு அணிந்துரை வழங்கி, வெளியீட்டு விழாவிற்கும் தலைமை தாங்கும் திரு.கே.அரசரட்ணம் அவர் களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

தவிர எத்தனை திருத்தங்களை நான் செய்தாலும் சளைக்காமல் உங்கள் கைகளில் தவழும் இந்த அழகான நூலை அச்சிட்டுக் கொடுத்த கீதா பப்ளிகேஷன், அதன் உரிமையாளர் திரு. வி.இராஜேந்திரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி!

சுவாரஸ்யத்தை அதிகரிக்கும் முகமாக இந்நூலை நகைச்சுவைப் பகுதிகள், சிறுவர் நகைச்சுவைக் கதைகள், உண்மைக்கதைகள், கணவன் மனைவி கதைகள், மிருகங்களின் கதைகள், பைத்தியக்காரக் கதைகள், வயிற்றெரிச்சல் கதைகள், ஒரு பக்கக் கதைகள் என எட்டுப் பகுதிகளாகப் பிரித்து வழங்கியுள்ளேன்.

எனது முதலிரண்டு நூல்களுக்கும், சுமதி பதிப்பகத்தின் ஏனைய வெளியீடுகளுக்கும் நீங்கள் தந்த அளப்பரிய ஆதரவு இந்த நூலுக்கும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன்


'ஸ்ரீமதி'
கே.கே.எஸ்.வீதி
இணுவில்

அன்புடன்
**ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன்**

LG, 4 வேலுவனராம அடுக்குமாடி
தொலைபேசி -011-2365606

பகுதி – I

# நகைச்சுவைக் கதைகள்



# பொருளடக்கம்


1. அதிர்ச்சி 12
2. ஆச்சாரம் 13
3. இரத்தம் 15
4. பெண்ணா, கொக்கா? 16
5. மந்திரியின் மதிநுட்பம் 18
6. ஒரு நடிகையின் அப்பாவிக் கணவர் 19
7. அதையும் தா 20
8. யமதர்மனையும் ஏமாற்றலாம் 22
9. காதல் படுத்தும் பாடு 24
10. இலங்கையன் இலேசுப்பட்டவனில்லை 24
11. இலங்கையன் இலேசுப்பட்டவனில்லை -2 25
12. தம்பிக்கு அரோகரா... 26
13. சம்பியன் சோம்பேறி 29
14. பென்னாம் பெரிய சோம்பேறி 29
15. மாறுதலுக்காக ஒரு மாற்றுத்திறனாளிகள் கதை 30
16. அதிர்ஷ்டசாலிப் பையன் 31
17. முன்பு நடந்தது போல நடந்துவிட்டால்.... 32
18. வீரன் 34
19. இப்பொழுது உன்னால் முடியுமா? 36
20. வேலையில்லாப் பட்டதாரி 37
21. சாப்பாட்டுப் பிரியன் 38
22. எலியைத் துரத்தப் போய்.... 39
23. பெரிய வயிற்றை இல்லாமல் செய்ய.... 40
24. பல்லும் பணமும் 41
25. பேராசிரியரும், சொற்பொழிவும் 42
26. பேச்சாளப் பெருந்தகை 44
27. ஆத்திலே பாய்ஞ்சான் செய்து தாடி 46
28. சொந்தம் எப்போதும் தொடர்கதைதான் 48

| | |
|---|---|
| 29. பதிலடி | 50 |
| 30. பரிசுப்பொருள் | 51 |
| 31. அதிர்ச்சி வைத்தியம் | 52 |
| 32. இது ஒரு தூஷணக்கதை! | 54 |
| 33. புஷ்ஷோ புஷ் | 55 |
| 34. பழக்கவழக்கமும் பரவணியும் | 57 |
| 35. என்னை விடப் பெரியவன் யார்? | 58 |
| 36. உயிர்த்த முயல் | 59 |
| 37. முதல் உதவி | 60 |
| 38. காதலன் | 61 |
| 39. இல்லை நான் குடிக்கவில்லை | 61 |
| 40. எப்படியும் தோல்விதான் | 62 |
| 41. சந்தோசம் | 62 |
| 42. எனது மனைவி | 63 |
| 43. அதிர்ஷ்ட இலக்கம் | 63 |
| 44. "சூரியனா? சந்திரனா?" | 64 |
| 45. இரண்டு பெண்டாட்டிக்காரன் | 64 |
| 46. கெட்டிக்காரன் | 65 |
| 47. சபாஷ்! சரியான போட்டி | 66 |
| 48. செவிட்டு மெசின்! | 67 |
| 49. ஏன் ஓடுகிறார்கள்? | 67 |
| 50. வயது ஒரு பிரச்சனையல்ல | 68 |
| 51. கோப்பி குடிப்போமா? | 68 |
| 52. அந்த வழி வேண்டாம்! | 69 |
| 53. பெரிய முகாமையாளரும், சின்ன முகாமையாளரும் | 70 |
| 54. நூல் | 72 |
| 55. கண்டிப்பான அப்பா | 73 |
| 56. 5000 ரூபாய் | 74 |

# நகைச்சுவைக் கதைகள் - 1

## "அதிர்ச்சி"

விநாயகமூர்த்தி தமது பள்ளித்தோழரும், பால்யகால நண்பருமான சோமசுந்தரத்தை நீண்ட நாட்களின் பின் சந்திக்க விரும்பினார். நண்பர் வீடு மாறியிருந்ததையும் அறிந்து கொண்டவர் அவரது புதுவிலாசத்தை ஒருமாதிரி அறிந்து கொண்டு வீட்டுக் கதவைத் தட்டினார்.

கதவு திறக்கப்பட்டது! என்ன அதிர்ச்சி! நண்பரின் மனைவி விதவைக் கோலத்தில்! பூவில்லை! பொட்டில்லை! வெள்ளைச் சேலையில் காட்சியளித்தார்.

அதிர்ச்சியடைந்த விநாயகமூர்த்தி, "இதென்ன கோலம்? என்ன நடந்தது? எனக்கு ஒன்றும் தெரியாதே?" என்று கேட்டார்.

திருமதி சோமசுந்தரம் கேவிக் கேவி அழுதபடி, "நாங்கள் முன்பு இருந்த வீடு தெரியும் தானே, அந்த வீட்டு வளவின் மூலையில ஒரு முருங்கை மரமிருந்து நல்லாய்க் காய்க்கும்!"

விநாயகமூர்த்தியும் "ஓமோம்" என்று தலையாட்டி "ஒரு சீசனில் எனக்கும் ஆய்ந்து தந்தவர்; நல்ல ருசி" என்றார்.

சோமசுந்தரத்தின் மனைவி, " அன்றும் அப்படித்தான்- மரம் நல்லாய்க் காய்ச்சுக் கிடக்கு! இரண்டு, மூன்று காய்கள் பிடிங்கித்தாங்கோ- இண்டைக்கு சமைப்பம்" எண்டன். "பாவி மனுசன் மரத்தில ஏறினவர், கொப்பு முறிஞ்சு விழுந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக முதலே!." முகத்தை மூடிக் கதறி அழுதார்.

பதறிய விநாயகமூர்த்தி, "அழாதையுங்கோ, பிறகு என்ன நடந்தது?" என்று கேட்டார்.

“பேந்து என்ன செய்யிறது? வீட்டில கிடந்த கத்தரிக் காயையும், வெண்டிக்காயையும் சமைத்து சாப் பிட்டம்” என்றாரே திருமதி சோமசுந்தரம்!

விநாயகமூர்த்தி சிலையானார்!

செங்கதிர்- மாசி- 2008

**வீச்சு - 2**

# நகைச்சுவைக் கதைகள் - 2

## “ ஆச்சாரம் ”

ஒருவர் மிகவும் ஆச்சாரம் பேணுபவர்- மிகவும் தேர்ந்து, தேர்ந்து ஒரு ஆச்சாரம் மிகுந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

ஓரிரு ஆண்டுகள், அருமையாகத் தாம்பத்திய வாழ்வு நடைபெற்றது. ஒருதினம் - ஒரு விரத திருநாள். வழமைபோல் அருகிருந்து வாழை இலையில் உணவருந்தினார்கள். என்னே பரிதாபம்? மனைவியின் ஒரு அரிசிப்பாகு தப்பித்தவறி ஆச்சாரம் மிகுந்த கணவரின் வாழை இலையில் வீழ்ந்துவிட்டது. வீரிண்டு எழுந்தார் ஆச்சார்யவாதி ! வீட்டை விட்டகன்றார்.

ஓடினான்; ஓடினான்; ஊரின் எல்லைக்கே ஓடினான். என்ன இருந்தாலும் மனிதன்தானே! பல மைல்தூரம் கடந்த பின் பசி வயிற்றைக் கவ்வியது. பசிமயக்கத்தில் மயங்கி ஒரு வீட்டின் திண்ணையில் சாய்ந்தார்.

அந்த வீட்டு இல்லாள் இவரது நிலைமை அறிந்து வீட்டிற்குள் அழைத்து உணவு பரிமாற ஆரம்பித்தார். இவரோ சிக்கலான பேர்வழிதானே! ‘ஆச்சாரம்’ பற்றி யோசித்தார்.!

அந்த வீட்டு அன்னையோ வாழை இலை ஒன்றைக் கடுமையாகக் கழுவிக் கொண்டு வந்து உணவு பரிமாறினார். ஆகா! அருமை! பசிதீர்ந்தது! உணவு அருந்தி முடித்து, வாழை இலையை வீசி எறியப்புறப்பட்டார்.

உணவு கொடுத்த அந்த அம்மா! " ஐயா இந்த இலையை எறியாதியுங்கோ ! அந்த இலை ஒன்று தான் எமது வீட்டில் உள்ளது. அந்த இலையில்தான் எனது கணவர் சாப்பிட்டு, நான் சாப்பிட்டு, இப்போது உங்களிடம் தந்தோம்!" என்றார்.

ஆச்சாரம் பேணியவருக்கு குமட்டிக்கொண்டு வந்தது. சாப்பிட்ட அனைத்தையும் வாந்தி எடுத்தார்.

மீண்டும் ஓட்டம் பிடித்தார் - சாப்பாடும் வேண்டாம்! ஒன்றும் வேண்டாம் என்று தீர்மானம் எடுத்தார்.

எனினும் குமட்டல், வயிற்றெரிச்சல் அவரைக் குழப்பிக் கொண்டே இருந்தது.

வழியில் ஒரு பாட்டியைச் சந்தித்தார். பாட்டி வலியவே "என்ன குமட்டி வாந்தி எடுக்கிறீர்களா? இந்தாங்கோ ஒரு பாக்கு சாப்பிடுங்கோ" என்று பாக்கு ஒன்றைக் கொடுத்தார். இவரும் குமட்டலுக்கும், வாந்திக்கும் பாக்கைச் சுவைத்தால் நல்லாயிருக்குமென விரும்பி பாக்கைக் கடித்துச் சுவைத்தார்.

பாட்டியோ பார்த்து இரசித்தார். இவரோ பாக்கைச் சாப்பிட்டு மிகுதியைத் துப்பினார். பாட்டி இவரது முதுகில் தட்டி பாராட்டி "நான் நான்கைந்து நாட்களாக இந்த பாக்கை கடித்து உடைக்க முடியவில்லை, நீ ஒரு நிமிடத்தில் பாக்கை கடித்து சாப்பிட்டு விட்டாயே!" என்றாரே பார்க்கலாம்

ஆச்சார மனிதன் மயங்கி விழுந்தான்!

நன்றி : 'தாயக ஒலி' - 21

# நகைச்சுவைக் கதைகள் - 3

## "இரத்தம்"

ஒரு கோடீஸ்வர வெள்ளைக்காரனுக்கு குறிப்பிட்ட அரிதான 'குரூப்' இரத்தம் அவசரமாகத் தேவைப்பட்டது. உடனே பத்திரிகையில் விளம்பரம் செய்தார். எவ்வளவு தொகையாயினும் தருவதாக. அரிதான 'குரூப்' என்பதால் ஒரே ஒரு விண்ணப்பம் வந்தது. அது ஒரு தமிழ்க் கஞ்சனின் விண்ணப்பம்.

இரத்தம் சோதிக்கப்பட்டது! வைத்திய அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டது! இரத்தம் கொடுக்கப்பட்டது. 10,000 யூஎஸ் டொலரை எமது தமிழருக்குக் கொடுத்தார் அந்த வெள்ளைக்காரக் கனவான்.

மூன்று மாதங்கள் சென்றன. அதே வியாபாரி! அதே இரத்தம்! எமது தமிழருக்குக் கொடுக்கப்பட்ட தொகையோ 5000 டொலர்.

இன்னமும் 6 மாதங்கள் சென்றன. மீண்டும் வியாபாரி, வேறு ஒருவரிடமும் அந்த 'குரூப்' இரத்தம் இல்லாததால் அந்த குறிப்பிட்ட தமிழரே வந்தார். 2000 யூஎஸ் டொலர் கொடுக்கப்பட்டது.

சற்றுக் காலம் சென்றபின் தமிழர் இரத்தம் கொடுக்கத் தாமாகவே சென்றார். வெள்ளைக்காரனோ ஒரு சதமும் கொடுக்கவில்லை.

எம்மவர் டாக்டரை அணுகி "என்ன இது? 10,000 டொலரிலிருந்து தற்போது ஒரு சதமும் தரவில்லையே? என்ன விடயம்?" என்று வினாவினார்.

டாக்டர் கூறிய பதிலினால் எம்மவர் மயக்கமடைந்தார்.

"நீங்கள் முதலில் கொடுத்த போது, 10,000 டொலர் கிடைத்தது. போகப்போக உங்கள் இரத்தம் அவருக்கேற்றி, உங்கள் ஒறிஜினல் தமிழ் இரத்தம் முழுக்க அவருக்கு ஏறி உங்கள் பிறவிக் கஞ்சத்தனத்தால் தான் இந்த நிலைமை" என்றார்.

நன்றி- 'தாயக ஒலி' -22

## நகைச்சுவைக் கதைகள் - 4

### "பெண்ணா, கொக்கா?"

தீபாவளிச் சமயம்; அண்மையில் மணம்முடித்த ஒரு இளம் அழகிய பெண் கடைகளுக்குச் சேலைவாங்கச் சென்றாள். நிறையப் பணமும் வைத்திருந்தாள். கணவன் வெளிநாடல்லவா?

ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினாள். பலவிதமான, வர்ணவர்ண சேலைகளைப் பார்த்தாள். தவிர்த்தாள்.

இறுதியாக, ஒரு பெரிய கடைக்குச் சென்றாள். இவளது ஆடம்பரத்தைக் கண்டு விற்பனையாளர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

விதம், விதமான புடவைகளை எடுத்துக்காட்டச் சொன்னாள். விற்பனையாளர்களும் சளைக்காமல் எடுத்துக் காட்டினார்கள். பெண்ணுக்கு குளிர்பானம் கூட முகாமையாளரால் எடுத்துவரப்பட்டது. அலட்டிக் கொள்ளவில்லை. அனுபவித்து ஆறுதலாகக் குடித்தார். நூற்றுக்கு மேற்பட்ட

சேலைகள், ஆறு ஏழு விற்பனையாளர்களால் குவிக்கப் பட்டன. கண்ணபெருமான் திரௌபதைக்கு அனுப்பினாரே! அப்படி வர்ண, வர்ணச் சேலைகள்! இவளோ ஒவ்வொன்றாக ஒதுக்கினாள்.

காலை 10 மணிக்கு வந்தவள். நேரமோ தற்போது 1 மணி பாவம் விற்பனையாளர்கள். மதிய உணவு அருந்தவுமில்லை.

அம்மையாரோ, கால்மேல் கால்போட்டு மிகவும் கம்பீரமாக, அழகாகவும் கூட அமர்ந்திருக்கிறாள்.

தனது ஆட்காட்டி விரலைச் சுண்டி முதலாவதாக தனக்கு சேலை காட்டிய விற்பனையாளரை அழைத்தார். நேரம் 2 மணிக்கு மேல் (பாவம் - அவர் ஒரு அப்பாவி) விழுந்தடித்துக் கொண்டு வந்தார். ஏதாவது 'ரிப்ஸ்' கிடைக்குமென்று!

அம்மணி சொன்னார்,

"நீ நான் காலையில் வந்தபோது காட்டினாயே முதலாவது சேலை! அதை எடுத்துத்தா?" என்றார்.

பாவம் அப்பாவி! நூற்றுக்கணக்கான சேலைகள்! எங்கே தேடுவான்?

"அம்மா, அதை பிறிம்பாக எடுத்து வைத்திருக்கலாமே?" என்றார் விற்பனையாளர் ஆதங்கத்துடன்.

"உங்கடை 'கஸ்ரமர் சேவிஸ்' சரியில்லை" என்று கூறி வெளியேறினார் எமது கதாநாயகி.

முகாமையாளர், விற்பனையாளர்கள் அனைவரும் மயங்கி விழுந்தனர். அதன்பிறகு ஒரு விற்பனையும் நடைபெறவில்லை. கடைக்கு நட்டம் ஒரு குளிர்பானம்!

# நகைச்சுவைக் கதைகள் - 5

## "மந்திரியின் மதிநுட்பம்"

ஒரு நாட்டின் முக்கிய அமைச்சர் ஒருவர் உள்ளூர் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி ஒன்றுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். மாலை, மரியாதை; மேள, தாளங்களுடன் அழைத்து வரப்பட்டவர் ஆள், அம்பு, படைசூழ தமதிருக்கையில் அமர்ந்தார்.

போட்டி ஆரம்பமானது. இறுதிப்போட்டி என்பதால் இரண்டு தரப்பினருக்கும் கடுமையான போட்டி.

உதைபந்தாட்டம் பற்றி எதுவும் தெரியாவிட்டாலும் சனக்கூட்டம் கரகோசம் செய்யும் போதெல்லாம் அமைச்சரும் கைதட்டி, ஆரவாரம் செய்தார். தமது உதவியாளர்களையும் கைதட்டப் பணித்தார்.

தொண்ணூறு நிமிட விளையாட்டு; தலைக்கு மேல் கிடந்த தமது எத்தனையோ அலுவல்களையும் விட்டு விட்டு பொறுமையாக மெட்ச்சைப் பார்த்தார்.

'மெட்ச்' முடிவுக்கு வந்ததும் தமது பிரதம உதவியாளரை அருகில் அழைத்து, "என்னடாப்பா, நீ எனக்குச் சொல்லவே இல்லையே, நாட்டில் இவ்வளவு பஞ்சமென்று! ஒரு பந்துக்கு இருபத்தி இரண்டு பேர் விழுந்து, விழுந்து சண்டை பிடிக்கிறார்களே! உடனே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பந்து வாங்கிக் கொடும்" என்று உத்தரவு போட்டுவிட்டு தமது தலைக்கு மேல் கிடந்த வேலைகளைக் கவனிக்க தமது கப்பல் போன்ற காரை நோக்கிப் புறப்பட்டார்!

இத்தனைக்கும் அன்னார் அந்நாட்டின் விளையாட்டுத் துறை அமைச்சராக்கும்!

# நகைச்சுவைக் கதைகள் - 6

## "ஒரு நடிகையின் அப்பாவிக் கணவர்"

ஸ்ரீலதா ஒரு பிரபல்யமான நடிகை! கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டாலும் தமிழ், ஹிந்தி, சிங்களம் போன்ற மொழிகளில் பல படங்களில் நடிப்பதால் பல நாடுகளுக்கும் சென்றுவருவாள்.

கணவனோ அப்பாவி! மனைவிக்குத் தொண்டு செய்து, கூஜா தூக்கி, அவள் செல்லமாக வளர்க்கும் பூனை, அணில், கிளி, நாய் போன்றவைக்கு உணவு வைப்பதே அவரது தொழில்! அன்றாடக் கடமை! பாவம்! ஒரே ஒரு "வீக்னஸ்"! மனையாளுக்குத் தெரிந்தும் தெரியாமலும் "தண்ணி" நன்றாக அடிப்பார். மனைவியும் கண்டும், காணாத மாதிரியும் விட்டுவிடுவார்! தனது காரியங்கள் ஆக வேண்டுமே!

அப்படித்தான் ஒருநாள்! ஸ்ரீலதாவுக்கு சென்னையில் சூட்டிங்! காலை பதினொரு மணிக்கு பிளைற்! எட்டு மணிக்கு விமானநிலையத்தில் நிற்கவேண்டும்! அவசர அவசரமாகப் புறப்பட்டாள்! கணவனையும் கெதிப்படுத்தினாள். எயர் போர்ட் போகும் வரை கணவனுக்கு அட்வைஸ்! நச்சரிப்பு என்றும் சொல்லலாம்! "கவனமப்பா! தண்ணி வெந்நீர் பாவிக்காதையுங்கோ! பாரிலே விழுந்து கிடக்காதையுங்கோ! நாய், பூனை, கிளி, அணில் கவனம்! நேரத்துக்கு சாப்பாடு வையுங்கோ" இத்யாதி! இத்யாதி!

அப்பாவிக் கணவரும் கோயில் மாடு போல் தலை யாட்டினார். எயர் போர்ட் வந்தது! கணவன் மனைவியை இறக்கிவிட்டு உடனேயே திரும்பிவிட்டார். வீட்டு வேலைகள் கவனிக்க வேண்டுமே!

திரும்பி வரும் போது ஆபிஸ் நேரம் ஆரம்பமாகி விட்டது! வாகன நெரிசல்! மிகவும் மெதுவாக, கவனமாக வாகனத்தை ஓட்டிவந்து வீடு சேர்ந்தார். காரை ஷெட்டில் விட்டு வீட்டுக் கதவைத் திறந்தார். தொலைபேசி அலறிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக ஓடிச்சென்று எடுத்தார். மறுபக்கம் மனைவி கர்ச்சித்தாள். "என்னப்பா நான் இங்கு வந்து மூன்று மணிநேரம் ஆகிறது. நீர் எந்த பாரில் கிடந்து விட்டு வருகிறீர்? எத்தனை தரம் தொலைபேசி எடுக்கிறது?"

அப்பாவிக் கணவர் அதிர்ந்து போய் நின்றார்!

## நகைச்சுவைக் கதைகள் - 7

### "அதையும் தா"

அதிகாலை நேரம் - அந்த குடை வியாபாரி தனது கடையைத் திறந்தான். மழைக்காலம் ஆரம்பித்துவிட்டபடியால் தனது குடை வியாபாரம் நன்றாக நடைபெறும் என்ற நம்பிக்கையுடன் தனது இஷ்ட தெய்வத்தை மனமார வணங்கி விட்டு வாடிக்கையாளர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

சரியாக நேரம் ஒன்பது மணி! முதலாவது வாடிக்கை யாளராகக் கஞ்சப்பிரபு கனகலிங்கம் கடைக்குள் நுழைந்தார். கடைமுதலாளி அவரை முகம் மலர வரவேற்றார். முதலாவது வாடிக்கையாளர் அல்லவா?

கனகலிங்கத்தார் "ஒரு நல்ல லேடீஸ் குடை வேண்டும்" என்றார்.

"எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார் முதலாளி.

சிகப்பு நிறக் குடையொன்றைத் தெரிவு செய்தவர் “என்ன விலை?” என்று கேட்டார்.

முதலாளி “நூறு ரூபா” என்றார்.

“சின்னக் குடை விலை அதிகமாக உள்ளது!” - இது கனகலிங்கம்.

“சரி! எழுபத்தைந்து ரூபா தந்து விட்டு குடையை எடுத்துச்செல்லுங்கள்”- முதலாளி.

“ம் ஹூம்! சரிவராது! இன்னும் குறையுங்கள்!”

அன்றைய முதலாவது வாடிக்கையாளரை இழக்க விரும்பாத முதலாளி “சரி! ஐம்பது ரூபா தந்து விட்டு கொண்டு போங்கோ!”

“கூடிப்போச்சு எனக்கு வேண்டாம்” என்று புறப்பட்டார் கனகலிங்கம்.

அவரை தடுத்து நிறுத்தி, நட்டப்பட்டாலும் பரவாயில்லை என்று எண்ணிய முதலாளி “சரி இருபத்தைந்து ரூபா எடும்” என்றார்.

வேண்டாம் என்று கூறி கனகலிங்கம் புறப்பட்டார்.

முதலாளிக்கு கடும் கோபம் வந்துவிட்டது. காலையில் முதலாவது வாடிக்கையாளரே சாவுக் கிராக்கி தானா என்று எண்ணிவிட்டு கடும் சினத்துடன் “ஐயா பெரியவரே இந்தாரும் குடை! சும்மா கொண்டு போம்!” என்றார் கிண்டலாக!

“சும்மாவா, அப்படியென்றால் இன்னொன்றும் தாரும்!” என்றாரே எமது கஞ்சப்பிரபு!

# நகைச்சுவைக் கதைகள் - 8

## "யமதர்மனையும் ஏமாற்றலாம்"

ஒரு ஊரிலே மதுரநாயகம் என்ற மகா கஞ்சப்பிரபு ஒருவன் இருந்தான். அவன் எச்சில் கையால் காகம் கூட ஓட்ட மாட்டான் - பஞ்சமா பாதகன்.

அவன் முதுமை அடைந்து ஒரு நாள் இயற்கை எய்தினான். யமதூதுவர்கள் அவனை யமலோகத்திற்கு அழைத்துச் சென்று யமதர்மன் முன்னிலையில் நிறுத்தினார்கள்.

சித்திரகுப்தன் அவன் செய்த பாவங்களை ஒவ்வொன்றாக விபரித்தார். யமதர்மன் மதுரநாயகத்தின் உடலெல்லாம் அழுகி யமலோகத்தில் இன்னல் அனுபவிக்குமாறு பணித் தான். அவ்வாறே மதுரநாயகமும் உடலெல்லாம் அழுகி யமலோகத்தில் படாதபாடு பட்டான். ஆனால் அவனது ஆள்காட்டி விரல் மட்டும் அழுகாது நல்லபடியாக இருந்தது.

ஒரு நாள் சித்திரகுப்தனார் அந்த வழியே சென்ற போது மதுரநாயகம் அவரை அழைத்து "இது என்ன அதிசயம்? எனது உடலெல்லாம் அழுகியுள்ளதே! இந்த வலது கை ஆள்காட்டி விரல் மட்டும் அழுகாதுள்ளதே! அது எப்படி?" என்று கேட்டான்.

சித்திரகுப்தரும், "எமது யமதர்மராஜா லேசுப்பட்டவரா? எதையும் காரணம் இல்லாமல் செய்யமாட்டார்; பூலோகத்திலிருந்தபோது நீ ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் வந்து பிச்சை கேட்டபோது "என்னிடம் ஒன்றுமில்லை; ஆனால் அதோ தெரிகிறதே அன்னதான மடம்! அங்கு மகேஸ்வர பூசை நடக்கிறது; அங்கே போய்ச் சாப்பிடு" என்று உனது வலது கை ஆள்காட்டி விரலைக் காட்டினாயே! அது தான் அந்த விரலை மட்டும் அழுகாமல் விட்டு விட்டார் எங்கள் அரசர்!" என்றார்.

மறுநாள் மதுரநாயகம் யமதர்மராஜனைச் சந்தித்து, "பிரபு, நான் திருந்திவிட்டேன்; தயவு செய்து எனக்கு மறுபிறப்பு தாருங்கள்; அடியேன் பூலோகம் சென்று நன்மைகள் பல செய்து நல்லவனாக வாழ்வேன்; இது சத்தியம்!" என்று கெஞ்சிக் கூத்தாடினான்.

யமதர்மன் முதலில் மறுத்தாலும் அவன் அழுது கெஞ்சுவதைப் பார்த்து, "ஒரு சந்தர்ப்பம் கொடுத்துத்தான் பார்ப்போமே!" என மதுரநாயகத்தை மீண்டும் பூலோகத்திற்கு அனுப்பி வைத்தான்.

மதுரநாயகம் பூலோகம் வந்தது தான் தாமதம் - வேதாளம் முருங்கைமரம் ஏறிய கதையாயிற்று; கொலை, கொள்ளை, கற்பழிப்பு உட்பட பஞ்சமா பாதகங்களையும் செய்யத் தொடங்கினான். யமதர்மனுக்கு உறுதியளித்தபடி தான தர்மங்கள் செய்யவில்லை.

என்றாலும் எப்போதும் அவன் வீட்டு வாசலிலிருந்தபடியே வீதியைப் பார்த்தபடி இருந்தான். அவன் எதிர்பார்த்த அந்த நல்ல நாளும் வந்தது.

அன்று, ஒரு பிச்சைக்காரன் மதுரநாயகத்தை அணுகி பிச்சைக்கேட்டான். மதுரநாயகம் தூரத்தில் தெரிந்த கோயில் மண்டபத்தை தனது உடல் முழுவதாலும் பாய்ந்து காட்டி, "அங்கு அன்னதானம் நடைபெறுகிறது; போய்ச் சாப்பிடு" என்றான்.

உடல் முழுவதும் பாய்ந்து அன்னதான மடத்தைக் காட்டியதால் அவன் அங்கம் ஒன்றும் அழுகாதுதானே!

## நகைச்சுவைக் கதைகள் - 9

### "காதல் படுத்தும் பாடு"

தாடி வளர்த்து நன்றாகத் 'தண்ணி' அடிக்கும் மூன்று பேர் ஒரு நாள் ஒரு 'பாரில்' சந்தித்தார்கள்.

'பார்கீப்பர்' அவர்களைப் பார்த்து "ஏன் இப்படி தண்ணி அடிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

முதலாமவர் :- நான் லலிதாவைச் சந்தித்தேன்; பழகினேன்; ஆனால் அவள் என்னைக் காதலிக்கவில்லை!

இரண்டாமவர் :- நான் லலிதாவைச் சந்தித்தேன்; பழகினேன்; காதலித்தேன்; அவளும் என்னைக் காதலித்தாள்! ஆனால் மணம் முடிக்கவில்லை!

மூன்றாமவர் :- அந்த லலிதாவைத்தான் நான் மணம் முடித்தேன்!

'பார்கீப்பர்' ஒன்றும் பேசாமல் தனது கணக்கில் மூவருக்கும் ஒரு 'டிரிங்' கொடுத்தார்!

## நகைச்சுவைக் கதைகள் - 10

### "இலங்கையன் இலேசுப்பட்டவனில்லை"– 1

ஒரு ரஷ்யன், ஒரு அமெரிக்கன், ஒரு ஸ்ரீலங்கன் மூன்று பேரும் ஓரிடத்தில் சந்தித்து தங்கள், தங்கள் வீரப்பிரதாபங்களை அளந்து கொண்டிருந்தார்கள்.

ரஷ்யன் :- நாங்கள் சந்திரனுக்குப் போய்விட்டோம்!

மற்ற இருவரும் :- என்ன? சந்திரனுக்குப் போய்விட்டீர்களா?

ரஷ்யன்:- சந்திரனுக்குக் கிட்ட போய்விட்டுத் திரும்பிவிட்டோம்!

அமெரிக்கன் :- எமது கட்டிடங்கள் எல்லாம் வானத்தைத் தொடுகின்றன!

மற்ற இருவரும்:- என்ன உங்களது கட்டிடங்கள் வானத்தைத் தொடுகின்றனவா?

அமெரிக்கன் :- கிட்டத்தட்ட வானத்தைத் தொடுமளவுக்கு உயரமாக உள்ளன!

விடுவானா ஸ்ரீலங்கன்?

"நாங்கள் எங்கள் ஊரில் மூக்கால் தான் சாப்பிடுவோம்!"

மற்ற இருவரும் :- என்ன மூக்கால் சாப்பிடுவீர்களா?

ஸ்ரீலங்கன் :- இல்லை, இல்லை; மூக்கிற்கு கிட்ட உள்ள வாயால் சாப்பிடுவோம்!

## நகைச்சுவைக் கதைகள் - 11

### "இலங்கையன் இலேசுப்பட்டவனில்லை" –2

அமெரிக்கன் :- எங்கள் நாட்டில் பழைய தோல், பட்டி எல்லாவற்றையும் ஒரு மெசினில் போட்டால் புத்தம்புதிய சூற்கேஸ் மறுபக்கத்தில் வந்துவிழும்!

ஸ்ரீலங்கன் :- உதென்ன பிரமாதம்! எங்கள் ஊர் மெசினில் பழைய தோல், பட்டி எல்லாவற்றையும் மெசினில் போட்டால் ஒரு கன்றுக் குட்டியே மறுபக்கத்தில் விழும்!

# நகைச்சுவைக் கதைகள் - 12

## "தம்பிக்கு அரோகரா..."

ஒரு ஊரில் ஒரு தாயும், இளைஞனும் வாழ்ந்து வந்தார்கள்; வசதியான, நடுத்தரக் குடும்பம். அனைத்து மிருந்தும் தாய்க்கு ஒரே ஒரு கவலை. மகனுக்கு வயதேறிக்கொண்டிருந்த போதும் திருமணம் செய்கிறான் இல்லையென்பது தான் அவளது மனக்கவலை.

எத்தனையோ நல்ல வரன்கள் வந்த போதும் அவன் திருமணம் செய்ய மறுத்தான். மிகவும் அழகான பெண் கிடைத்தாலே மணப்பேன் என்றும் சபதம் எடுத்தான்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஒருமுறை அந்த இளைஞன் மணிவண்ணன் அயலூர் சென்றுவர வேண்டியிருந்தது. அயலூரில் மணிவண்ணன் ஒரு அழகான பெண்ணைக் கண்டான். அவளை மணக்க விரும்பினான். அவளை அணுகி தனது விருப்பத்தைத் தெரிவித்தான். அவளோ முன்பின் தெரியாத மணிவண்ணனைத் திருமணம் செய்ய இயலாது என ஒரேயடியாக மறுத்தாள்.

அவளைத்தான் மணப்பது என்று திடசங்கற்பம் பூண்டிருந்த மணிவண்ணன் அவளைத் தனது நண்பர்களின் உதவியுடன் கடத்திச் செல்லத் திட்டமிட்டான். அவ்வாறே ஒரு நல்ல நாளாகப் பார்த்து அவளைக் கடத்தினார்கள்.

ஒருவருக்கும் சந்தேகம் வராமலிருக்க அவளை ஒரு சாக்கிற்குள் போட்டுக் கட்டினார்கள். பின்னர் நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தனது 'எதிர்காலத் துணைவி'

அடங்கிய சாக்குடன் தனதூருக்குப் புறப்பட்டான். தன்னைப் போலவே தனது தாயாரும் மகிழ்வடைவார் என் றெண்ணி அதிக கற்பனைகளுடன் களிப்புற்றான்.

ஊருக்கு வரும் வழியில் காடொன்று குறுக்கிட்டது. சாக்கு மூட்டையைச் சுமந்து கொண்டு வந்தவனுக்கு களைப்பேற்பட்டது. தண்ணீர் அருந்தும் நோக்குடன் காட்டின் மத்தியில் இருந்த கிணற்றருகே சாக்கு மூட்டையை வைத்து விட்டு தண்ணீர் அருந்தப்போனான்.

அதே சமயம் அந்த அடர்ந்த காட்டில் வேட்டையாட வந்த இளைஞன் ஒருவன் கரடி ஒன்றை மிகவும் சிரமப்பட்டுப்பிடித்து உயிருடன் சாக்கு மூட்டையொன்றுள் வைத்துக் கட்டிச் சுமந்துக் கொண்டு வந்தான். அவனும் வேட்டையாடிக் களைப் புற்றிருந்தமையால் மணிவண்ணன் தண்ணீர் அருந்திய அதே கிணற்றடிக்கு வந்து மணிவண்ணன் வைத்திருந்த சாக்கு மூட்டைக்கருகில் தனது சாக்கு மூட்டையை வைத்து விட்டு தண்ணீர் அருந்தச் சென்றான்.

தண்ணீர் அருந்திவிட்டு வந்த மணிவண்ணன் சாக்கு மூட்டைகள் இரண்டும் ஒரே மாதிரியாக இருந்தமையால் மற்ற இளைஞன் வேட்டையாடிக் கொண்டுவந்த கரடி அடங்கிய சாக்கு மூட்டையைத் தூக்கிக் கொண்டு தனதூரை நோக்கி மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

வீட்டை அடைந்தவன் தனது தாயாரை அழைத்து, "அம்மா உனது நீண்டநாள் கனவு இன்று நிறைவேறப் போகிறது. அயலூரிலிருந்து ஒரு அழகான பெண்ணை அழைத்து வந்துள்ளேன். அந்தப்படுக்கையறைக்குள் நான்

அந்தப் பெண்ணுடன் போகப்போகிறேன். கதவை வெளியில் தாழ்ப்பாள் போட்டுக் கொள். நான் அவளைத் தொடும்போது, அணைக்கும் போது, முத்தமிடும் போது நீ வெளியில் நின்று "தம்பிக்கு அரோகரா" சொல்லவேண்டும். "எக்காரணம் கொண்டும் கதவைத் திறக்கக் கூடாது" என்று கூறி மூட்டையுடன் அறைக்குள் நுழைந்தான். தாயும் தனயனின் கட்டளைப்படி அறைக் கதவை மூடிக்கொண்டாள்.

அறைக்குள் நுழைந்து சாக்கு மூட்டையைத் திறந்தவனுக்கு பேரிடி! அதிர்ச்சி!! மூட்டைக்குள்ளிருந்து கரடி புறப்பட்டது.

தனயன் சத்தமிட்டான் "ஆச்சி கரடி எணை!"

தாய் ஒன்றும் புரியாமல் "தம்பிக்கு அரோகரா" சொன்னாள்.

மணிவண்ணன் அலறினான் "ஆச்சி கரடி பிறாண்டுது எணை!"

தாய் மகிழ்ச்சியுடன் "தம்பிக்கு அரோகரா!"

இளைஞன் அழுதான் "கரடி கடிக்குது எணை!"

தாய் ஆனந்தக் கூத்தாடினாள் "தம்பிக்கு அரோகரா!"

அருமைத் தாயார் தனயனின் ஆணையை மீறாமல் அறைக் கதவையும் திறக்காமல், தம்பி கூறியபடியே "தம்பிக்கு அரோகரா" கூறிக் கொண்டிருந்தாள்.

மிகவும் பிரயத்தனப்பட்டு கதவை உடைத்துக் கொண்டு கரடித் துரத்த அறையை விட்டு மணிவண்ணன் வெளியே வந்தபோது தான் அப்பாவி அன்னைக்கு உண்மை புரிந்தது!

## நகைச்சுவைக் கதைகள் - 13

### "சம்பியன் சோம்பேறி"

உலகத்திலேயே அதிசிறந்த சோம்பேறியின் மனைவி தனது அருமைக் கணவரை உறக்கத்திலிருந்து மிகவும் பாடுபட்டு எழுப்ப பகீரதப் பிரயத்தனம் செய்கிறாள்.

மனைவி:- அப்பா, என்னப்பா, எழும்புங்கோப்பா; சோம்பேறித்தனத்தில் உங்களுக்கு 'கின்னஸ்' சாதனை கிடைத்திருக்காம். 'சாம்பியன் சோம்பேறி' என்று முதலாம் பரிசும், 'கோல்ட் மெடலும்' தரப்போறாங்களாம். தயவுசெய்து எழும்பிப் போய் வேண்டிக்கொண்டு வாங்கோவேன்!

சோம்பேறிக் கணவன்:- என்னைக் குழப்பாமல் சும்மா இரும்! எனக்கு பஞ்சியாயிருக்கு நீர் போய் வேண்டிக் கொண்டு வாரும்! அல்லாட்டி வேண்டாமென்று சொல்லிவிடும்!

## நகைச்சுவைக் கதைகள் -14

### "பென்னாம் பெரிய சோம்பேறி"

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு சோம்பேறி இருந்தான். அவன் வேலைக்குப் போவதே இல்லை; நித்திரையால் எழும்புவதே காலை பத்துமணிக்கு. அதுவும் மனைவி சத்தம் போட்டு எழுப்புவார். அந்நேரத்தில் குழந்தைகள் அனைவரும் பாடசாலை சென்றிருப்பார்கள்.

ஒருமாதிரி சோம்பல் முறித்துக்கொண்டு எழும்புவார் எமது கதாநாயகன். பின்னர் முகம் கழுவியும், கழுவாமலுமாக காலைச் சாப்பாட்டை ஒருபிடிபிடிப்பார். பிறகு மீண்டும் ஒரு குட்டித் தூக்கம். அதேபோல் மதிய உணவு. மாலைநேர

உறக்கம். பின்னேர தேநீர், ஒரு வடையுடன். மீண்டும் நண்பர்களுடன் சீட்டாட்டம் - பணம் வைக்காமல். பையில் பணமிருந்தால் தானே! ஓசியில் நண்பர்களுடன் 'தண்ணி'. மீண்டும் நன்றாகப் போர்த்துக் கொண்டு குறட்டை விட்டு உறங்குவார்.

இவற்றையெல்லாம் தினமும் பார்த்துக் களைத்து விட்ட மனைவி ஒருநாள் பொறுக்காமல், மிகுந்த கோபத்துடன் "உங்களுக்கு வெட்கமாயில்லையா? எனக்காகவும், குழந்தைகளுக்காகவும் எனது அப்பா, அம்மா மூட்டை மூட்டையாக அரிசி, மா, சீனி, பருப்பு என்று மாதம், மாதம் அனுப்புகிறார்கள், எனது தங்கையோ துணி, மணி, பணம் என்று அவ்வப்போது அனுப்புகிறாள். உங்களுக்கு துளியேனும் மானம், ரோசமில்லையா!" என்று கேட்டாள்.

அதற்கு சோம்பேறி, "உனது தம்பிமாரையும் ஏதாவது அனுப்பச்சொல்லும்!" என்றாரே பார்க்கலாம்!!

மனைவி விக்கித்து நின்றார்!

## நகைச்சுவைக் கதைகள் - 15

### "மாறுதலுக்காக ஒரு மாற்றுத்திறனாளிகள் கதை"

முதலாம் செவிடர் :- "குளிச்சிட்டே வாறிங்கள்?"

இரண்டாம் செவிடர் :- "ஓம்! குளிச்சுட்டுத் தான் வாறன்!"

முதலாமவர் :- "சொறி! குளிச்சிட்டு வாறியளோ எண்டு நினைச்சன்!"

# நகைச்சுவைக் கதைகள் -16

## "அதிர்ஷ்டசாலிப் பையன்"

அது ஒரு பெரிய கம்பனி. ஏற்றுமதி, இறக்குமதி செய் பவர்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள், எழுது வினைஞர்கள், உதவி முகாமையாளர்கள், ஆண், பெண் பாலார் என்ற வித்தியாசமின்றி தொழில் புரிந்தார்கள்.

அந்தக் கம்பனியின் பிரதான முகாமையாளர் விஜயசிங்கம்! வயது நாற்பத்தைந்திருக்கும். கண்டிப்பிற்குப் பேர் போனவர். நேரக்கட்டுப்பாட்டை கடுமையாக கடைப்பிடிப்பவர். அலு வலக ஊழியர்கள் சிறுதவறு செய்தாலும் கடுமையான தண்டனைகள் வழங்குவார். பலரை 'வீட்டிற்கும்' அனுப்பி யுள்ளார். இவற்றுக்கெல்லாம் திரு.விஜயசிங்கத்தின் கம்பனியின் மேலிடம் அன்னாருக்கு பரிபூரணசுதந்திரம் வழங்கியிருந்தது. சுருக்கமாகச் சொல்லப்போனால் தண் டனை வழங்குவதென்பது அவருக்கு 'அல்வா' சாப்பிடுவது போலாகும்.

ஒருநாள்! காலை 8.30 மணிக்கு வேலைகள் ஆரம்பமாக வேண்டிய கம்பனிக்கு 8.25 மணிக்கு 'டாண்' என்று கம்பீரமாக நுழைந்தார் விஜயசிங்கம். நுழைந்தவர் கண்களில் வராந்தா மூலையில் பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் கம்பீரமாக நின்று கொண்டு 'சிகரெட்' புகைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

இவரைக் கண்டும் அந்த இளைஞன் தான் பத்திக் கொண்டிருந்த சிகரட்டை வீசாமல் சிகரட் புகையை மாலை மாலையாக வாயாலும், மூக்காலும் அலட்சியமாக விட்டுக் கொண்டிருந்தான். விஜயசிங்கத்தாருக்கு 'விசர்' வந்தது.

கோபத்தை அடக்கிக் கொண்டு அவனை வேலையிலிருந்து நீக்கும் நோக்கத்துடன் அவனருகில் வந்து "உனது மாத உழைப்பு என்ன?" என்று கேட்டார். அவன் மிகவும் அலட்சியமாக, "என்ன, கூடிப்போனால் ரூபா ஐயாயிரம் வரும்" என்றான்.

விஜயசிங்கம் கோபத்துடன் தனது பர்சைத் திறந்து ரூபா அறுபதினாயிரம் எடுத்தெறிந்துவிட்டு, "இதோ உனது ஒரு வருட சம்பளம், உனக்கு இன்றுடன் வேலையில்லை; நீ வீட்டிற்குப் போகலாம்" என்றார். காசை எண்ணி எடுத்த இளைஞன் வியப்புடன் அலுவலகத்தை விட்டு வெளியேறினான்.

தனது விசாலமான அறைக்குள் நுழைந்த விஜயசிங்கம் தன்னை ஆசுவாசப்படுத்தும் நோக்குடன் ஒரு கிளாஸ் தண்ணீர் குடித்து விட்டு மேசையிலிருந்த மணியை அடித்து தனது உதவியாளரை அழைத்து, "நான் வரும்போது வராந்தாவில் நின்றுகொண்டு மரியாதையில்லாமல் 'சிகரெட்' பத்திக் கொண்டு நின்றானே! அவன் யார்?" எனக் கேட்டார்.

உதவியாளரின் பதில் விஜயசிங்கத்தை தூக்கி வாரிப் போட்டது! "ஐயா, அவன் இங்கு எமக்கு காலையில், மாலையில் தேனீர் தரும் ஒரு வெளியாள்"

## நகைச்சுவைக் கதைகள் -17

### "முன்பு நடந்தது போல நடந்துவிட்டால்...."

ஏழை விறகுவெட்டியின் கதை உங்கள் அனைவருக்கும் தெரியும் தானே? அவனது மரக் கோடரி குளத்தில் தவறி விழ, அவன் அழுது, குழற, கடவுள் அவன் முன் தோன்றி முதலில் தங்கத்தாலான கோடரியைக் காட்ட அவன்

அது தனது கோடரி அல்ல என்று கூற, அடுத்து கடவுள் வெள்ளிக் கோடரியைக் காட்ட, அதுவும் தன்னுடைய கோடரி இல்லை என்று சொல்ல, கடவுள் இறுதியாக விறகுவெட்டியின் உண்மையான பழைய கரள் பிடித்த இரும்புக் கோடரியைக் காண்பிக்க, அதுதான் தனது கோடரி என ஏழை விறகு வெட்டி கூற, கடவுள் அவனது நேர்மையை மெச்சி மூன்று கோடரிகளையும் அவனுக்குப் பரிசாக வழங்கியது தான் அந்தக் கதை!

இனி புதுக்கதை! நாட்கள் கடந்தன. எமது கதாநாயகனுக்கு திருமணம் நடந்தேறியது. மணமகளோ ஒரு அடங்காப்பிடாரி. அழகும் அப்படி இப்படித்தான்.

ஒருநாள் விறகு வெட்டி தனது மனைவியை அழைத்துக் கொண்டு அயலூரில் உள்ள ஒரு கோயிற்திருவிழாவிற்குச் சென்றார். ஆலய தரிசனம் முடித்துக்கொண்டு வெளி வீதியிலிருந்த கடைகளை மனைவியுடன் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தவன் சனநெரிசலில் மனைவியைத் தவறவிட்டு விட்டான். அந்த சனநெரிசலில் எங்கு தேடியும் அவனால் தனது மனைவியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அப்போது கடவுள் அவன் முன் தோன்றினார். “என்ன விடயம்?” என்றுக் கேட்டார். விறகுவெட்டி, “எனது மனைவியைக் காணவில்லை. தேடுகிறேன்” என்றான்

கடவுள் முன்பு போல் அவனைச் சோதிக்கும்முகமாக உலக அழகி நடிகை ஐஸ்வர்யாராயைக் காட்டி “இவள் தானே உனது மனைவி?” என்று கேட்டார்.

விறகுவெட்டி உடனே, “ஆம்! இவள் தான் எனது மனைவி!” என்றான். கடவுளுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. “அடப்பாவி, நீ இவ்வளவு ஆசைக்காரனாக இருப்பாய் என எதிர்பார்க்கவில்லை; இது உன் மனைவி இல்லையே! ஏன் இப்படிப் பொய் சொன்னாய்?” என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

விறகுவெட்டியின் பதில் ஆனானப்பட்ட கடவுளையே தூக்கிவாரிப் போட்டது. "அப்பனே, நீர் இப்போது ஐஸ் வர்யாராயை காட்டினீர்; நான் அவள் எனது மனைவி இல்லையென்றால் நீர் ஸ்ரீதேவியைக் காட்டுவீர்; நான் உண்மையைச் சொன்னால் நீர் மீனாவைக் காட்டுவீர்; பின்பு எனது மனைவியைக் கடைசியாகக் காட்டுவீர்; நான் உண்மையைச் சொல்லுவேன், அவள்தான் எனது மனைவி என்று, நீர் முன்பு மூன்று கோடரிகளையும் என்னிடம் தந்த மாதிரி இப்போது நான்கு பேரையும் எனது தலையில் கட்டிவிட்டு போய்விடுவீர்; அவதிப்படுவது நானாச்சே! அதுவும் ஐயனே, என்னால் அல்லாடமுடியாது; அதுதான் முதல்முதல் காட்டிய ஐஸ்வர்யாராயை எனது மனைவி என்றேன்" என்றான்!

அவனது கூற்றிலிருந்த உண்மையைக் கடவுளும் ஒத்துக் கொண்டார்!

## நகைச்சுவைக் கதைகள் - 18

### "வீரன்"

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் ஒருவர் "வீரன்" என்ற நூலை எழுதி முடித்தார். நூல் வெளியீட்டு விழாவை விமர்சையாகக் கொண்டாட விரும்பி நூற்றுக் கணக்கானோருக்கு அழைப்பிதழ்களை அனுப்பிவைத்தார்.

நூலை வெளியிட்டு வைத்து விமர்சனம் செய்வதற்கு ஒரு பிரபல பேச்சாளரையும் ஒழுங்கு செய்துவிட்டு அவரிடம் "வீரன்" நூலையும் கொண்டு போய்க் கொடுத்தார்.

விழாநாளும் வந்தது. மண்டபம் நிறைந்த கூட்டம்; மண்டபமும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மங்கல

விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை என விழா களைகட்டியது. சிற்றூண்டியும் பரிமாறப்பட்டது.

இப்போது நூலை வெளியிட்டு வைத்து விமர்சனம் செய்யும் கட்டம். அந்தப்பிரபல பேச்சாளர் எழுந்தார். அவருக்கு நூலாசிரியரால் மலர்மாலை சூட்டப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டது.

பேச்சாளர் நூலை வெளியிட்டு வைத்து முதற்பிரதியை ஒரு பிரபல வர்த்தகருக்கு வழங்கிய பின் தமது விமர்சன உரையை ஆரம்பித்தார்.

முதலில் நூலாசிரியரைப் புகழ்ந்து பேசிய அன்னார், " வீரன்" நூலை விமர்சிக்கத்தொடங்கினார். " 'வீரன்' நாட்டிற்கும் வீட்டிற்குமாக போராடுபவன்; நாட்டையும் வீட்டையும் நேசிப்பவன். எதிரிகளை பந்தாடுபவன். புறமுதுகு காட்டி ஓடமாட்டான்; வீரத்தழும்புகளை தனது மார்பில் தாங்கியவன். புறநானூற்று வீரர்களுக்கு ஒப்பானவன்" என்றெல்லாம் 'வீரனைப்' புகழ்ந்து பேசி "இப்படிப்பட்ட நூலை நீங்கள் அனைவரும் பணம் கொடுத்து வாங்க வேண்டும்" என்று பேசிமுடித்தார்.

கரகோசத்தால் மண்டபம் அதிர்ந்தது. பேசிமுடித்தவர் அடுத்த கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக மேடையில் இருந்தவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட ஆரம்பமானார். எனினும் அவர் தமக்கு வழங்கப்பட்ட பொன்னாடையையும், மாலையையும் எடுத்துச் செல்லத் தவறவில்லை!

மேடையை விட்டிறங்கியவர் வீதியில் நிறுத்தப் பட்டிருந்த காரை நோக்கிச்சென்றார்.

அவரைத்தொடர்ந்து அவரின் பின்னால் ஓடிவந்த நூலாசிரியர், “ஐயா, என்ன சொதப்பிவிட்டீர்களே! நான் “வீரன்” என்ற தலைப்பில் நான் செல்லமாக வளர்க்கும் நாய்க்குட்டி பற்றி அல்லவா நூலில் எழுதியிருந்தேன்; அந்த நாய்க்குட்டி எங்களுடன் விளையாடும் விதம், வீட்டையும் பொருட்களையும் பாதுகாக்கும் தன்மை, முன்பின் அறியாதவர்களையும் கள்வர்களையும் கண்டால் குரைப்பது போன்றவை பற்றியல்லவா எழுதியிருந்தேன்!நீங்கள் வேறெதெல்லாமல்லவா பேசினீர்கள்?” என்று குறைப்பட்டுக் கொண்டார்.

பேச்சாளருக்கு அப்போதுதான் ‘வீரன்’ நூலைத் தாம் துப்பரவாக வாசிக்கவில்லை என்பது உறைத்தது!

## நகைச்சுவைக் கதைகள் - 19

### “இப்பொழுது உன்னால் முடியுமா?”

இரண்டு நண்பர்கள் ஒருநாளிரவு நன்கு மது அருந்திவிட்டு தமது அறையை நோக்கிச் சென்றார்கள். குறுகிய வீதி; நெரிசலான போக்குவரத்து. வாகனங்கள் ‘அறம்புறமாகப்’ போய் வந்துக்கொண்டிருந்தன. நண்பர்கள் இருவரும் ஒரு வாகனத்தில் அடிபடக் கூடப்பார்த்தார்கள். அதனால் வெறி சற்றுத் தெளிந்த ஒருவன் மற்றவனைப்பார்த்து, “எங்களது அறை வரைக்கும் இங்கிருந்து ஒரு நேர்கோடு கீறுகிறேன். அதன் மீது தளம்பாமல் சரியாக நடந்து எங்களது அறைக்குச் செல்லமுடியுமா?” என்று கேட்டான். நண்பனிடமிருந்து உடன் பதில் வந்தது, “இப்போது உன்னால் நேர்கோடு கீற முடியுமா?”

மற்றவன் திகைத்து நின்றான்!

# நகைச்சுவைக் கதைகள் -20

## "வேலையில்லாப் பட்டதாரி"

பலவருடங்களாக வேலை தேடித்திரிந்தான் பட்டதாரி இளைஞன் ஒருவன். பல அலுவலகங்கள் ஏறி இறங்கினான். பலனில்லை. பத்திரிகைகளில் வந்த வேலைவாய்ப்புகளுக்கு எல்லாம் விண்ணப்பித்துப்பார்த்தான். அனைத்தும் விழலுக் கிறைத்த நீராயின.

வீதி வீதியாக அலைந்து திரிந்து இளைஞனுக்கு ஒரு சர்க்கஸ் கம்பனி கண்ணில் பட்டது. அங்கு வேலை ஏதும் கிடைக்கும் என்ற எண்ணத்தில் அதன் முதலாளியை அணுகி வேலைகேட்டான்.

முதலாளிக்கு பெரிய சந்தோசம்! அன்று சர்க்க ஸில் சிங்கத்தின் வாய்க்குள் தனது தலையை வைப்பவன் சுகவீனம் காரணமாக லீவு. அந்தக்காட்சி தான் சர்க்கஸிற்கு பெரிய வருமானத்தைத் தேடித்தந்தது. 'என்ன செய்வது?' என்று யோசித்து, கவலைப்பட்டுக் கொண்டிருந்த சர்க்கஸ் முதலாளிக்கு இப்படி வலிய ஒருவன் வந்து மாட்டிக்கொண்டது மகிழ்ச்சியைத் தராமலிருக்குமா?

"சிங்கத்தின் வாய்க்குள் தலையை வைக்க வேண்டும்; நிறையப் பணம் தருகிறேன்" என்றார் முதலாளி. வாழ்வா, சாவா என்று பல நாட்கள் பச்சைத் தண்ணீருடன் காலந்தள்ளியவன் "ஓம்" என்று உடன் ஒத்துக்கொண்டான்.

சர்க்கஸின் கடைசிக் காட்சி. சிங்கத்தின் வாய்க்குள் தலையை வைப்பது. வந்திருந்த சனத்திரள் அனைத்தும் எதிர்பார்க்கும் காட்சி. சர்க்கஸ் முதலாளிக்கு பணத்தை அள்ளிக் கொட்டும் காட்சி!

கலங்கிய கண்களுடனும், கனத்த இதயத்து டனும் பட்டதாரி இளைஞன் சிங்கத்திற்கருகே சென்றான். சிங்கம் கம்பீரமாகக் காத்துக் கொண்டிருந்தது. சிங்கத்தை நெருங் கிய இளைஞன், “சிங்கமே, சிங்கமே நான் ஒரு பட்டதாரி இளைஞன்; வேலை ஒன்றும் கிடைக்காமல் உன்னிடம் எனது தலையைக் கொடுக்கவந்துள்ளேன். தயவு செய்து என்னை ஒன்றும் செய்து விடாதே!” என்று கண்ணீர் மல்க கெஞ்சினான்.

இளைஞனின் அருகில் வந்த சிங்கம், அவனது காதருகில், “நானும் வேலை இல்லாத பட்டதாரி இளைஞன் தான்! பலகாலம் வேலை கிடைக்காததால் இந்த சிங்கத்தின் வேஷத்தைப் போட்டுள்ளேன். பயப்படாதே! நான் ஒன்றும் செய்யமாட்டேன்!” என்றது!

## நகைச்சுவைக் கதைகள் - 21

### “சாப்பாட்டுப் பிரியன்”

பீமராவ், பெயருக்கேற்றப்படி சாப்பாட்டுப்பிரியன். அதுவும் ஓசிச்சாப்பாடு என்றால் ஒரு பிடிபிடித்துவிடுவான்.

அவ்வாறுதான் - ஒருநாள் ஒரு கல்யாண வீடு; தனது நண்பர்கள் சிலருடன் பீமராவ் திருமண வீட்டிற்குச் சென்றான். தாலி கட்டியாயிற்று; எப்போது உணவு பரிமாறுவார்கள் என்று காத்துக் கொண்டிருந்த பசிக்காத நண்பர்களையும் நச்சரித்து ஒருமாதிரி முதற்பந்தியிலேயே அமர்ந்து கொண்டு ஒரு பிடிபிடித்தான். நண்பர்களும் பொறுத்துக்கொண்டார்கள்.

தலைவாழை இலையில் இரண்டு, மூன்று முறை பருப்பு, நெய், தயிர், சாதம் என்று வெளுத்து வாங்கியவன் ஒருமாதிரியாக வடை பாயாசத்துடன் முடித்துக்கொண்டான்.

அதுவும் வடை பாயாசத்துடன் மூன்று அப்பளம், வாழைப்பழம் என்று கேட்டு வாங்கி பிசைந்து உண்டான்.

இறுதியாக இரண்டு நண்பர்கள் இரண்டு பக்கமும் அவனின் கைகளைத் தூக்கிப் பிடித்துவிட ஒருமாதிரியாக வெளியே வந்தான்.

மிகவும் இட்டு முட்டாக பீமராவ் இருப்பதைக் கண்ணுற்ற அவனது மிகவும் நெருங்கிய நண்பன் "ரொம்பவும் கஷ்டமாக இருந்தால் வாய்க்குள் இரண்டு விரல்களை ஓட்டி கொஞ்சத்தை வெளியே எடுத்து விடேன்!" என்றான்.

கோபமடைந்த பீமராவ் "அடே மடையா! வாய்க்குள் இரண்டு விரல்களை ஓட்ட முடிந்தால் இன்னும் இரண்டு வாழைப்பழங்கள் சாப்பிட்டிருக்க மாட்டேனா?" என்றானே பார்க்கலாம்!

நண்பர்கள் மயங்காத குறைதான்!

## நகைச்சுவைக் கதைகள் - 22

### "எலியைத் துரத்தப் போய் ......"

முற்காலத்தில் சாமியார் ஒருவர் நடுக்காட்டுக்குள்ளே ஒரு குடிசை அமைத்துக் கொண்டு தவமியற்றிக் கொண்டிருந்தார்.

நாட்கள் செல்ல குடிசையுள் எலிகள் பெருகத் தொடங்கின. எலிகளின் தொல்லை தாங்கமுடியாமல் போக சாமியார் ஒரு பூனையை வளர்க்கத் தொடங்கினார்.

பூனைக்குத் தாம் சமைத்த சாதத்தையும், தாம் உண்ணும் பழங்களையும் வைத்தார். பூனையோ அவற்றை அவ்வளவாக விரும்பி உண்ணவில்லை. பசிக் களைப்பால் 'மியாவ், மியாவ்' என்று கத்திக் கொண்டு குடிசையை வலம் வந்தது.

சாமியார் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார். அவருக்கு அவரின் சீடன் ஒருவன் கைக்கொடுக்க முன் வந்தான். "பூனைக்குப் பசுப்பால் வைத்தால் சரிவரும்" என்று கூறி சாமியாரிடம் தானமாக ஒரு பசுவையும் கையளித்தான்.

காலப்போக்கில் பசுவும் கருத்தரித்து கன்றையும் ஈன்றது. இப்போது பால் கறக்க வேண்டுமே! சாமியாருக்கோ பால்கறக்கத் தெரியாது! மீண்டும் அதே சீடன் உதவி செய்ய முன்வந்தான். ஒரு அழகான இளம் பெண்ணை அழைத்துவந்து பால் கறக்க வைத்தான்.

நாட்கள் செல்லச் செல்ல பால் கறக்க வந்த பெண்ணிடம் சாமியாருக்கு காதல் பிறந்து, அவளையே திருமணம் புரிந்துகொண்டார்.

எலியும் போ! பூனையும் போ! பசுவும் போ! கன்றும் போ!

## நகைச்சுவைக் கதைகள் - 23

### "பெரிய வயிற்றை இல்லாமல் செய்ய...."

'சாப்பாட்டுப் பிரியன்' பீமராவ் பற்றி முன்பே குறிப் பிட்டிருந்தோம். அவன் விரும்பியவற்றையெல்லாம் கண்டபடி சாப்பிட்டு பெரிய வயிறு படைத்தவனானான். குனிய, இருக்க, இருந்தால் எழும்ப, படுத்தால் எழும்ப முடியாமல் தவித்தான். இறுதியில் தனது 'வண்டியை' எப்படியாவது குறைக்க, அல்லது துப்பரவாக இல்லாமல் செய்ய முடிவெடுத்தான்.

தேடித்திரிந்து நல்ல ஒரு வைத்தியரைக் கண்டு பிடித்து, தனது பிரச்சனைகளை ஆதியோடு அந்தமாகத் தெரிவித்தான். வைத்தியரும் நன்கு கவனித்துவிட்டு தமது அறைக்குள்ளே

சென்று திரும்பி வரும்போது ஆயிரத்திற்கு மேற்பட்ட குளிசைகள் அடங்கிய பெரிய போத்தலுடன் பீமராவை அணுகினார்.

பீமராவ் திகைத்துவிட்டான். "என்ன டாக்டர், இவ்வளவு மாத்திரையுமா நான் சாப்பிட வேண்டும்?" என்று கவலையுடன் கேட்டான்.

டாக்டர் சிரித்தபடி அமைதியாகக் கூறினார், "கவலைப் படாதேயும்; இவைமாத்திரைகள் அல்ல; சின்னச் சின்ன மாபிள்கள். நீர் செய்ய வேண்டியது இவ்வளவும் தான். இந்த மாபிள்கள் அடங்கிய கூஜாவை ஒரு உயரமான மேசையில் வையுங்கள். காலையிலும், மாலையிலும் கூஜாவை கவிழ்த்துக் கொட்டுங்கள். நிலத்தில் அவை அங்குமிங்கும் சிதறுமல்லவா? பின்பு நீங்கள் குனிந்து, குனிந்து ஒவ்வொரு மாபிளாகப் பொறுக்கி மீண்டும் கூஜாவில் போடுங்கள். குனிந்து எடுத்து ஒவ்வொன்றாகப் போடவேண்டும். அதுதான் முக்கியம்! ஒரு மாதத்தில் உமது 'வண்டி' எங்கே போகிறது என்றுபாருங்கள்" என்றார்.

பீமராவின் முகத்தில் ஈயாடவில்லை!

## நகைச்சுவைக் கதைகள் - 24

### "பல்லும் பணமும்"

தன்னுடைய பழுதான சொத்தைப்பல்லொன்று மிகுந்த வேதனை தந்ததால் நாதன் அதனைக் காட்டுவதற்கு ஆபிஸில் லீவு போட்டுவிட்டு தனது பல்டாக்டரிடம் சென்றான். அங்கு தத்தமது பற்களைக் காட்டுவதற்காக, டாக்டரை பார்ப்பதற்கு ஏற்கனவே மூன்று பேர் காத்திருந்தார்கள்.

எனினும் முற்கூட்டியே வந்திருந்த நோயாளிகள் நாதன் படும் அவஸ்தையை அவதானித்துவிட்டு நாதனை

டாக்டரிடம் உடனே செல்ல அனுமதித்தார்கள். டாக்டரும் நாதனுக்கு ஏற்கனவே அறிமுகமானவரானதனால் நாதனை உடன் பரிசோதித்துவிட்டு அவனுக்கு வேதனை தந்த சொத்தைப் பல்லைப் பிடுங்கி எடுத்தார்.

டாக்டரின் 'பில்'லைப் பார்த்து நாதன் அதிர்ச்சி அடைந்தான். வழக்கமாக ஒரு பல்லைப் பிடுங்க ரூபா ஐநூறு வசூலிக்கும் டாக்டர் அன்று ரூபா இரண்டாயிரத்துக்கு பில் வழங்கினார்.

நாதன், "என்ன டாக்டர், வழக்கமாக ஐநூறு ரூபா தானே 'சார்ஜ்' பண்ணுவீர்கள்; இன்று இரண்டாயிரம் ரூபா 'சார்ஜ்' பண்ணியிருக்கிறீர்களே?" என்று கேட்டான்.

டாக்டர் அளித்த பதில் நாதனுக்கு பல் பிடுங்கிய வலியை விடப் பெரிதாக வலித்தது!

"என்ன செய்வது நாதன்? நான் உங்களது பல்லைப் பிடுங்கியபோது நீங்கள் போட்ட கூச்சலில் என்னிடம் வந்திருந்த மூன்று நோயாளிகள் ஓடி விட்டார்களே!" என்றாரே பார்க்கலாம்!

## நகைச்சுவைக் கதைகள் - 25

### "பேராசிரியரும், சொற்பொழிவும்"

அவர் ஒரு பிரபல்யமான பேராசிரியர்; சிறந்த சொற் பொழி வாளர். அவர் தமது கல்லூரியில் வகுப்புகளை எடுப்பதோடு பல்வேறு இடங்களுக்கும் சென்று பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவாற்றுவதுண்டு.

அவரது வாழ்க்கையில் ஒரு அதிசயம்; அவரது கார் சாரதி உருவ ஒற்றுமையில் அவரைப் போலவே அமைந்திருந்தார். பேராசிரியர் போகுமிடங்கள் அனைத்திற்கும் இந்த சாரதியும்

சென்று அவரது சொற்பொழிவுகள் அனைத்தையும் கவன மாகக் கேட்பார். அவ்வாறு தினமும் சென்று வந்ததினால் பேராசிரியரது சொற்பொழிவுகள் சாரதிக்கு அத்துப்படியாகி விட்டன.

சொற்பொழிவுகளின் பின்னர் மாணவர்கள், கூடியிருப்போர் கேட்கும் ஆயிரமாயிரம் கேள்விக் கணைகளுக்கு பேராசிரியர் கொடுக்கும் பதில்கள், விளக்கங்கள் அனைத்தும் கூட சாரதிக்கு தண்ணீர்பட்ட பாடாகிவிட்டது.

ஒருநாள் பேராசிரியருக்கு நகரிலிருந்து வெகுதொலை விலுள்ள ஊரில் சொற்பொழிவு. சாரதியின் காரில் சென்று கொண்டிருந்தார். பின் சீற்றிலிருந்து தனது சொற்பொழிவைத் தயாரித்துக் கொண்டிருந்த பேராசிரியரைத் திரும்பிப் பார்த்த சாரதி, “சேர், இன்றைய தங்களது சொற்பொழிவை நான் செய்யட்டுமா? தயவு செய்து அனுமதி தருவீர்களா?” என்று பணிவுடன் கேட்டான்.

உருவ ஒற்றுமையைப் பயன்படுத்திக் கேட்கிறானோ என்று பேராசிரியர் எண்ணினாலும் சாரதியின் திறமையில் நம்பிக்கையிருந்த பேராசிரியர் அவனது கோரிக்கைக்கு ஒத்துக்கொண்டார். எனினும் மனதின் ஒரு மூலையில் “எங்கே சொதப்பிவிடுவானோ?” என்ற பயமும் இருந்தது.

ஊரை அடைந்தாயிற்று; உடுப்புகள் மாற்றப்பட்டன. ‘ஒரிஜினல்’ பேராசிரியர் சாரதியாகப் பின்வரிசையில் இருந்தார். ‘டுப்ளிகேற்’ பேராசிரியர் தனது சொற்பொழிவை ஆரம்பித்தார். சொற்பொழிவு கன கச்சிதம்! பேராசிரியர் எதிர்பார்க்கவில்லை! அவ்வளவு அற்புதம்!

கேள்விநேரம் ஆரம்பமானது! கேள்விக் கணைகள் அறம்புறமாகத் தொடுக்கப்பட்டன. போலி பேராசிரியரும்

அனைத்துக் கேள்விகளுக்கும் 'டாண், டாண்' என்று பதில் கூறிக் கொண்டு வந்தார்.

திடீரென ஒரு திருப்பம்! ஒரு கெட்டிக்கார இளைஞன் ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்டுவிட்டான்.

ஒரு கணம், 'ஒரிஜினலும்', 'போலியும்' திகைத்துப் போய் விட்டனர்.

ஒரே நொடியில், சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த 'பேராசிரியர்' சுதாரித்துக் கொண்டார்.

"ஐசே, இந்த இலகுவான கேள்விக்கு நான் ஏன் பதில் கூறி எனது நேரத்தை வீணாக்க வேண்டும்? எனது டிரைவர் பதில் கூறுவார்" என்று கூறி தனது 'டிரைவரை' அழைத்துப் பதில் கூறச் சொல்லிவிட்டு பின் வரிசையில் சென்று அமர்ந்துக் கொண்டார். உண்மைப் பேராசிரியர் சரியான, அழகான பதில் கூறி 'டிரைவர்' உட்பட அனைவரையும் மகிழ்வித்தார்.

## நகைச்சுவைக் கதைகள் - 26

### "பேச்சாளப் பெருந்தகை"

பெரிய இலக்கியக் கூட்டமொன்றுக்கு உரையாற்றுவதற்கு ஒரு இலக்கியச் சொற்பொழிவாளர் அழைக்கப்பட்டிருந்தார். மண்டபம் நிறைந்த கூட்டம். விழாவிற்கு தலைமை வகித்த கூட்டத்தலைவர் மண்டபம் நிறைந்த சனக்கூட்டத்தைக் கண்டு பிரதம பேச்சாளரின் சொற்பொழிவைக் கேட்கத்தான் போலும் இத்தனை சனத்திரள் வந்துள்ளதாக்கும் எனக் கருதித் தனது தலைமையுரையைச் சுருக்கமாக முடித்துக் கொள்வதாகக் கூறி அமர்ந்து விட்டார்.

பலத்த கரகோசத்தின் மத்தியில் எமது கதாநாயகர் சொற்பொழிவாற்றத் தொடங்கினார். அன்னாரது பேச்சு அவ்வளவாக வாய்க்கவில்லை; 'அவ்வளவு' என்ன? துப்பரவாக அமையவில்லை. 'போரடித்தது' சனம் பொறுமையிழந்தது. கரகோசம் செய்தால் பேச்சை நிறுத்தி தமதிருக்கையில் அமர்ந்து விடுவார் என எண்ணி திரண்டிருந்த மக்கள் ஒன்றாகச் சேர்ந்து கைதட்டினார்கள். பேச்சாளரோ தமது பேச்சை இரசித்துத்தான் மக்கள் கைதட்டுகிறார்கள் என்று எண்ணி தொடர்ந்து மணிக்கணக்கில் உரையாற்றினார்.

சுமார் இரண்டரை மணி நேரத்தின் பின்னர் அவர் ஒருவழியாக தமது சொற்பொழிவை முடிவுக்கு கொண்டு வந்தார். சனக் கூட்டமும் ஆறுதலடைந்தது. அப்போதுதான் அந்த அதிர்ச்சிச் சம்பவம் நடைபெற்றது. ஒரு இளைஞன் துப்பாக்கி ஒன்றுடன் மேடையேறினான். சொற்பொழிவாளர் மிகுந்த அச்சத்துடன், "நான் இனிமேல் கூட்டங்களில் பேசமாட்டேன்; பேசவே மாட்டேன்; என்னைத் தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்று கூக்குரலிட்டார்! மன்னிப்புக் கேட்டார்!

துப்பாக்கியுடன் மேடையேறிய இளைஞனோ, "நான் உம்மை ஒன்றும் செய்யமாட்டேன்; உம்மை இன்று இங்கு பேசுவதற்கு ஒழுங்கு செய்தாரே, அவரைத்தான் தேடுகிறேன்!" என்றானே பார்க்கலாம்!

சனக்கூட்டம் மகிழ்ச்சியுடன் கரகோசம் செய்தது!

நன்றி - 'தாயகஒலி'-16

# நகைச்சுவைக் கதைகள் - 27

## "ஆத்திலே பாய்ஞ்சான் செய்து தாடி"

ஒரு கிராமத்திலே ஒரு குடியானவனும், அவனது மனைவியும் மிகவும் அன்னியோன்யமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு குழந்தைகள் இல்லாமையால் ஒருவர்மேல் ஒருவர் மிகுந்த அன்பும் பாசமும் வைத்திருந்தார்கள். இத்தனைக்கும் குடியானவன், சற்று அப்பாவி; அவ்வளவாகப் படிக்கவில்லை.

அந்தக் குடியானவனின் மைத்துனர் ஒரு செல்வ மகன் அடங்கலாக பக்கத்து ஊரிலே சற்று வசதியாக வாழ்ந்து வந்தான். அந்தச் செல்வமகன் விதுரனுக்கு ஐந்தாவது பிறந்த தினம் வந்தது. அதை அவர்கள் வெகுவிமர்சையாகக் கொண்டாட விரும்பினார்கள். தமது குடியான மைத்துனர் குடும்பத்திற்கும் அழைப்பு விடுத்தார்கள்.

ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! குடியானவனின் மனைவிக்கு சுகமில்லாததால் அவளால் அந்தப் பிறந்த தின விழாவிற்குப் போக முடியவில்லை. கணவனும் போக மறுத்தான். மனைவியோ தனது ஒரே ஒரு அண்ணனின் மகனின் பிறந்த தினமென்றும், அவர்கள் அதனை விமர்சையாகக் கொண்டாடுவதால் கட்டாயம் சென்று வருமாறு கணவனை வற்புறுத்தி விலையுயர்ந்த பரிசுப் பொருட்களையும் கொடுத்து கெஞ்சிக் கூத்தாடி அனுப்பி வைத்தாள்.

குடியானவனும் சமாதானமடைந்து பரிசுப் பொருட் களுடன் மைத்துனனின் ஊரிற்குப் புறப்பட்டான். அந்த ஊரிற்கு செல்வதற்கு பெரிய ஒரு ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். பரிசுப் பொருட்களுடன் குடியானவனும் ஆற்றைக்கடந்து

பத்திரமாக பக்கத்து ஊர் சென்று பிறந்தநாள் விழாவிலும் கலந்துக் கொண்டான்.

விழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விதம் விதமான சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. அவற்றுள் கேக், வடை, முறுக்கு, லட்டு, ஜிலேபி, கொழுக்கட்டை என்பனவும் அடங்கும்.

எமது குடியானவனோ தமது வாழ்நாளில் முதல் தடவையாக கொழுக்கட்டை சாப்பிட்டான். அவனுக்கு மிகவும் பிடித்துக் கொண்டது. ஐந்து, ஆறு கொழுக்கட்டை என ஒரு பிடி பிடித்தான். வீட்டிற்குப் போய் தனது அருமை மனைவி மூலம் செய்து சாப்பிடுவதற்காக மைத்துனனிடம் அதன் பெயரையும் கேட்டுத் தெரிந்துக் கொண்டான்.

அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு திரும்பி வரும் வழிபூராகவும் "கொழுக்கட்டை, கொழுக்கட்டை" என்று பாடமாக்கிக் கொண்டு வந்தான். வரும் வழியில் அந்த ஆறு குறுக்கிட்டது.

ஆற்றின் கரையிலே ஒரே சனக்கூட்டம்; என்னவென்று விசாரித்தால் ஒரு இளைஞன் ஏதோ விரக்தி காரணமாக ஆற்றிலே பாய்ந்து தற்கொலை செய்து கொண்டானாம். இறந்தவன் குடியானவனுக்குச் சற்று அறிமுகமானவன். எனவே அங்கிருந்தவர்களிடம் துக்கம் விசாரித்துவிட்டு தனது பயணத்தை தொடர்ந்தான்.

வீட்டிற்கு வந்தவன் தனது இல்லாளிடம் வந்ததும், வராததுமாக "ஆத்திலே பாய்ஞ்சான் செய்து தா" என்று கேட்டான். மனையாளோ தான் அப்படி ஒரு பலகாரத்தின் பெயரைக் கேள்விப்பட்டதில்லை என்று கூறினாள். மனைவி

பொய் சொல்கிறாள் என நினைத்து அவளுக்கு அடி அடி யென்று அடித்துவிட்டான்.

இரவு வந்தது. குடியானவனுக்கோ மனைவியைச் சரியாக அடித்து விட்டோமென்ற கவலை; மனைவிக்கோ அருமைக் கணவன் கேட்ட பலகாரத்தை தன்னால் செய்து கொடுக்க முடியாமல் போய் விட்டதே என்ற துன்பம்!

இருவரும் படுக்கைக்கு போனார்கள். கணவன் மனைவி யிடம் மன்னிப்புக் கேட்கும் முகமாக இறுக அணைத்தான். மனைவி கலங்கிய கண்களுடன் தனது அடிபட்ட இடத்து வீக்கத்தைக் காட்டி "இஞ்சை பாத்தியளே நீங்கள் அடிச்சது கொழுக்கட்டை மாதிரி வீங்கிப் போச்சு" என்ற கூறி கேவிக் கேவி அழுதாள்.

"அடிப்பாவி அது தான்ரி நான் செய்யச் சொன்ன பலகாரம்!" என்று ஆனந்தக் கூச்சல் போட்டான் குடியானவன்!

மனைவிக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை!

நன்றி - 'தாயகஒலி'- 17

## நகைச்சுவைக் கதைகள் -28

### "சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்..."

ஒரு ஊரிலே ஒரு வெகுளிப்பெண்; வெகுளிப் பெண்ணானா லும் பேராசை கொண்டவள். அவளுக்கு அவளுடைய முறைப்பையனை திருமணம் முடிக்க ஏற்பாடு செய்தார்கள் பெரியவர்கள். அவளோ முறைப்பையனை மணக்க மறுத் தாள். பேதையின் மனதில் ஒரு ஆசையிருந்தது. உல கிலேயே சிறந்த ஆண்மகனைத்தான் திருமணம் செய்து

கொள்வதென்று உறுதி பூண்டு கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள். அந்த ஊர் அரசன் தான் உலகிலேயே சிறந்த ஆண்மகன் என்பது அவளுடைய எண்ணம்!

அதனால் அரசனைச் சந்தித்து தனது விருப்பத்தைத் தெரிவிக்க அந்த அரசன் செல்லும் வழியிலேயே நடந்து கொண்டிருந்தாள். அப்போது எதிரே ஒரு சாமியார் வந்து கொண்டிருந்தார். அரசனோ சாமியாரைக் கண்டதும் தனது பல்லக்கிலிருந்து இறங்கி சாமியாரை வணங்கிவிட்டு சென்றான். இந்தப் பெண்ணுக்கு தூக்கிவாரிப் போட்டது! "அரசன் தான் உலகிலேயே உயர்ந்த மனிதன் என்று நினைத்தால் அவன் பாவி இந்தச் சாமியாரை வணங்குகிறானே!" என நினைத்துக் கொண்டு சாமியார் தான் பெரிய மனிதரென சாமியாரைப் பின் தொடர்ந்தாள்.

அப்போது பிள்ளையார் கோயில் ஒன்று குறுக்கிட்டது. சாமியார் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று பயபக்தியுடன் தலையில் குட்டிக் கும்பிட்டார். தோப்புக்கரணமும் போட்டார்! எமது பெண்ணுக்கு வியப்பு தாங்கவில்லை! சாமியாரை விட பிள்ளையார் தான் உயர்ந்தவர் என எண்ணி கோயிலில் அமர்ந்து விட்டாள். அப்போது அந்த வழியே வந்த நாயொன்று பிள்ளையார் கோயில் படிக்கட்டில் தனது காலைத் தூக்கி சிறு நீர் கழித்து விட்டுச் சென்றது. அதைக்கண்ட பெண் பிள்ளை யாரைக் காட்டிலும் நாய்தான் உயர்ந்ததென்று நாயைப் பின் தொடர்ந்தாள்.

அந்த வழியே சென்ற ஒரு சிறுவன் நாயைக் கல்லால் அடிக்க நாய் காலையும் தூக்கிக் கொண்டு ஊளையிட்டுக் கொண்டு ஓட நாயைக் காட்டிலும் அந்தச் சிறுவனே உயர்ந்த வனென்று சிறுவனைப் பின்தொடர்ந்தாள்.

நாயைக் கல்லால் அடித்த சிறுவனைத் துரத்திப் பிடித்த ஒரு வாலிபன் சிறுவனின் காதைப் பிடித்துத் திருகிக் கண்டித்தான்.

சிறுவனைக் கண்டிக்கும் வாலிபன் தான் உலகத்திலேயே உயர்ந்தவன் என்று நினைத்து அந்த இளைஞனைப் பின் தொடர்ந்தாள் பேதை.

கடைசியில் அந்த இளைஞன் வேறுயாருமில்லை; அவளுக்கு நிச்சயம் செய்த முறைப்பையன்தான் அவன்!

நன்றி ; 'தாயகஒலி'-20

## நகைச்சுவைக் கதைகள் - 29

### "பதிலடி"

வழக்கம்போல் அந்தப் பெரியவர் அதிகாலையில் தமது நாயுடன் 'வாக்கிங்' போனார். பெரியவரைக் கிண்டலடிக்கும் முகமாக ஒரு இளைஞன் "என்ன நாயோடு 'வாக்கிங்' போறீங் களோ?" என்று கேட்டான். பெரியவர் காதில் வாங்கிக் கொள் ளாமல் நடந்தார்.

இளைஞனோ விடவில்லை; அவரை மேலும் சீண்டும் முகமாக "நான் உங்களைக் கேட்கவில்லை; நாயைத் தான் கேட்டேன்" என்றான். பெரியவர் கோபப்படவில்லை. சிரித்தபடியே, "இனம் இனத்தோடு பேசுகிறது; எனக்கொன்றும் புரியவில்லை" என்றார்.

இளைஞன் அசந்துவிட்டான். பெரியவரைச் சொல்லா லடிக்க காத்திருந்தான்.

பெரியவர் ஒருநாள் சுகயீனமுற்று படுக்கையில் சாய்ந்தார்.

'இதுதான் சந்தர்ப்பம்' என்றெண்ணிய இளைஞன் பெரியவரை சுகம் பார்க்கும் சாக்கில் வந்து, "ஐயா பெரியவரே, நீங்கள் இறந்ததும் போய் என் தாத்தாவிடம் நான் சுகமாக இங்கே இருப்பதாகக் கூறுங்கள்" என்றான் நக்கலாக!

அந்த நிலையிலும் பெரியவர் விடவில்லை! "தம்பி நான் சொர்க்கத்திற்கல்லா போகப் போகிறேன்" என்றாரே பார்க்கலாம்!

இளைஞனுக்கோ மயக்கம் வராதகுறை!

பெரியவர் பெரியவர்தான்!

நன்றி ; 'தாயகஒலி' 23

## நகைச்சுவைக் கதைகள் - 30

### "பரிசுப்பொருள்"

அவர் ஒரு பிரபல்யமான வங்கியின் பிரதான முகாமையாளர். வசதி படைத்தவராக இருந்தாலும் பேராசை யாரை விட்டது?

அவரிடம் கணக்கு ஆரம்பிக்க வரும் வாடிக்கையாளரிடம் "உங்களது கம்பனியின் தயாரிப்பின் 'சாம்பிள்' ஒன்றை வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்" என்று நயமாகக் கூறி தமது 'விசிற்றிங்' கார்டையும் மறக்காது கொடுத்து விடுவார்.

இவ்வாறு அவரது வீட்டில் சேர்ந்த பொருட்கள் ஏராளம். கமரா, டி.வி, வானொலி, சோபாசெட், மிக்சி, எலெக்றிக் குக்கர் என இத்யாதி; இத்யாதி. அத்தனையும் புத்தம் புதியவை! பரிசுப் பொருட்களால் வீடு நிரம்பி வழிந்தது!

அப்படித்தான் ஒருநாள்; ஒரு புதிய வாடிக்கையாளர் புதிய கணக்கொன்றை ஆரம்பிக்க வந்தார். கம்பீரமாகக்

காட்சியளித்த அந்த வாடிக்கையாளர் பத்துலட்சம் ரூபாவுடன் கணக்கை ஆரம்பித்தார். பிரமித்துப்போன முகாமையாளரும் வழக்கம்போல தமது 'விசிற்றிங் கார்டை' கொடுத்து, "உங்களது தயாரிப்பு 'சாம்பிள்' ஒன்றை வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்" என்று தயவாகக் கூறினார்.

அன்று வேலை சற்று அதிகமாக இருந்ததினால் முகாமை யாளர் சற்று தாமதமாகவே வீடு செல்ல நேர்ந்தது.

அன்னாரது இல்லத்தின் முன்றலில் ஒரே சனக் கூட்டம்; உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என குழுமி இருந்தார்கள். அனைவரும் சோகத்துடன் காட்சியளித்தார்கள். சிலர் அழுது கொண்டும் இருந்தார்கள்.

அவர்களை விலத்திக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்த வருக்கு அதிர்ச்சி! வீட்டு ஹாலில் ஒரு புத்தம்புது பிரேதப் பெட்டி காட்சியளித்தது!

அப்போது தான் மனேஜருக்கு உறைத்தது அன்று கணக்கு ஆரம்பித்த புதிய வாடிக்கையாளரின் தயாரிப்பு என்ன என்பது!

நன்றி ; 'தாயகஒலி' 24

## நகைச்சுவைக் கதைகள் - 31

### "அதிர்ச்சி வைத்தியம்"

அது ஒரு பெரிய வைத்தியசாலை; எழுபது வயது மதிக்கத்தக்க வயோதிப மாது ஒருத்தி ஓடோடிச் சென்று பெரியவைத்தியரிடம் எள்ளும் கொள்ளும் வெடிக்க முறை யிட்டார். "உங்கள் உதவிடாக்டர் என்னைப் பரிசோதித்து விட்டு நான் நான்கு மாதக் கர்ப்பிணி என்று கூறுகிறார். அவரை

அழைத்து தகுந்த தண்டனை கொடுங்கள்" என்று கூயோ, மாயோ என்று கூப்பாடு போட்டார்.

பெரியடாக்டர் பெரிய அதிர்ச்சி அடைந்து மணியடித்து, பியூனை அழைத்து சின்ன டாக்டரை எத்தனை அவசர வேலை இருந்தாலும் நிறுத்திவிட்டு உடன் வரச்சொன்னார்.

சின்ன டாக்டர் வந்ததும், "என்ன மிஸ்ரர் சேகர், இந்த அம்மா கர்ப்பிணி என்று சொன்னீர்களாமே, உண்மையா?" என்று கோபமாகக் கேட்டார்.

சின்ன டாக்டர், "மன்னிக்க வேண்டும் சேர்; ஒருமுறை தயவு செய்து இந்தப்பக்கம் வருகிறீர்களா?" என்று மன்றாட்டமாகக் கேட்டார்.

பெரிய டாக்டரும் வேண்டாவெறுப்பாக எழுந்து சின்ன டாக்டருடன் அந்த பெரிய அறையின் ஒரு மூலைக்குச் சென்றார்.

சின்ன டாக்டர் பெரிய டாக்டரிடம் இரகசியமாக, "அந்த மாது தனக்கு ஓயாத விக்கல்; நிற்கவேயில்லை! என்ற முறைப் பாட்டுடன் என்னை அணுகினார். என்னுடன் கதைத்துக் கொண்டிருந்த போதும் சரி; நான் அவரை நீண்ட நேரமாகப் பரிசோதித்துக் கொண்டிருந்த போதும் சரி விடாமல் விக்கிக் கொண்டிருந்தார். அதுதான் அதிர்ச்சி வைத்தியமாக அவர் நான்கு மாதக் கர்ப்பிணி என்று கூறினேன்" என்றார்.

பெரிய டாக்டர், சின்ன டாக்டரின் தோளை செல்லமாகத் தட்டிக் கொடுத்து "பாராட்டுக்கள்" என்று கூறிவிட்டு வயோதிப மாதை நோக்கிப் பெருமிதத்துடன் நடை போட்டார்.

நன்றி ; 'தாயகஒலி' 25

# நகைச்சுவைக் கதைகள் - 32

## "இது ஒரு தூஷணக்கதை!"

பாதிரியார் ஒருவர் ஒரு கிளியைச் செல்லமாக வளர்த்தார். அதற்கு 'வணக்கம்', 'நன்றி', 'போய்வாருங்கள்' என்ற நல்ல, நல்ல வார்த்தைகளையும், ஜெபத்தையும் பேசக் கற்றுக்கொடுத்தார்.

அந்தக் கெட்டிக்காரக்கிளியும் ஒருசில நாட்களிலேயே பாதிரியார் கற்றுக்கொடுத்த அனைத்தையும் கற்றுக்கொண்டு அழகாய்ப் பேசவும் தொடங்கியது.

பாதிரியாரின் நண்பர்கள் சிலர் கப்பலில் ஒரு உல்லாசப் பயணம் மேற்கொள்ளவிருந்தனர். அவர்கள் பாதிரியாரிடம் வந்து "நாங்கள் ஒரு உல்லாசப் பயணம் மேற்கொள்ள உள்ளோம். ஓரிரு நாட்களில் திரும்பி வந்துவிடுவோம். தங்கள் கிளியைத் தந்துதவினால் கப்பலில் எங்களது பொழுது மிகவும் உற்சாகமாகக் களியும்" என்று மிகவும் வினயமாக் கேட்டார்கள்.

பாதிரியாரும் மிகவும் சந்தோசமாகக் கிளியை கொடுத்தார். நண்பர்கள் சந்தோசத்துடன் கிளியுடன் புறப்பட்டார்கள். கப்பல்பயணம் புறப்பட்டது. கப்பலில் இன்னொரு கிளியும் இருந்தது. அந்தக் கிளியோ பொழுது விடிந்தால், பொழுதுபட்டால் ஒரே தூசணம் தான் பேசும். போதாக்குறைக்கு உல்லாசப் பயணத்தை மேற்கொண்ட நண்பர் குழாமும் படுதூசணம் பேசுவார்கள். பாதிரியாரின் கிளி அனைத்து தூசண வார்த்தைகளையும் 'டக், டக்' கென்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டது.

ஒருமாதிரி உல்லாசப்பயணம் முடிவுக்கு வந்தது. நண்பர்களும் கிளியைப் பத்திரமாக பாதிரியாரிடம் ஒப்படைத் தார்கள்.

வந்த மாத்திரத்திலேயே கிளி தூசண வார்த்தைகளைப் பேசத்தொடங்கியது. வந்ததே பாதிரியாருக்கு கோபம். ஒரே மூச்சில் கிளியை கெட்டியாகப் பிடித்து குளிர்சாதனப் பெட்டிக்குள் அடைத்துவிட்டார். குளிர்சாதனப் பெட்டிக் குள்ளோ மீன், கோழி என்பன இருந்தன.

சிறது நேரம் சென்றபின் பாதிரியார் 'கிளி திருந்தியிருக்கும்' என்ற நம்பிக்கையுடன் குளிர்சாதனப் பெட்டியைத் திறந்தபோது பாதிரியாரைப் பார்த்து கிளி, "ஐயா இந்தப் பெட்டியினுள்ளே மீன், கோழி எல்லாம் நீண்ட காலமாக இருப்பது போல் தெரிகிறதே அவை என்ன, என்ன தூசண வார்த்தைகள் பேசின என்று அறியலாமா?" என்று கேட்டது.

பாதிரியாரும், "ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்று கேட்டார். கிளி, "வேறொன்றுக்குமாக இல்லை! அடுத்தமுறை உங்கள் நண்பர்களுடன் உல்லாசப்பயணம் போகும் போது அவற்றையெல்லாம் பேசி மற்றக் கிளிக்கும் சொல்லிக் கொடுக்கலாம் என்றுதான்" என்றது.

பாதிரியார் கடும் சினத்துடன் குளிர்சாதனப்பெட்டியை மீண்டும் அறைந்து மூடினார்.

## நகைச்சுவைக் கதைகள் - 33

### "புஷ்ஷோ புஷ்"

இலங்கையைச் சேர்ந்த இந்து மதத்தவர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியை அமெரிக்காவில் சந்தித்தார். புஷ் எம்மவரைப் பார்த்து, "இலங்கையில் என்ன புதினம்?" என்று கேட்டார். இவர் எல்லாப் புதினங்களையும், நாட்டு நடப்புகளையும் விபரமாகவும், சுவார்சியமாகவும் கூறினார்.

பேச்சு இந்துசமயப் பக்கமாகத் திரும்பியது. புஷ்ஷிற்கு இந்துசமயத்தைப் பற்றி அறிய பெருமாவல். நம்மவரும் நாயன்மார், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், கந்தசஷ்டி, கந்தபுராணம் இத்தியாதி பற்றி புகழோ புகழென்று போற்றிப் புகழ்ந்துவிட்டு இந்திரலோகத்தைப் பற்றியும், நரகலோகத்தைப் பற்றியும் விலாவாரியாகக் கூறினார்.

"நல்லது செய்தவர்கள் இறந்தபின் சொர்க்கலோகம் போவார்கள், தீயசெயல்கள் புரிந்தவர்கள் நரகலோகம் செல்வார்கள்" என்று புனைந்தும், பெரிதுமாகக் கூறினார். நரகலோகத்தில் எமதர்மன் உத்தரவுப்படி சித்திரகுப்தனாரால் தண்டனை வழங்கப்படுமென்றும் கூறினார். அதிகபட்ச தண்டனையாக என்ன தண்டனை கிடைக்குமென்று ஜனா திபதி புஷ் ஆவலுடன் வினாவ, புஷ்ஷிடம் சென்றவர் மிகவும் கொடுமை செய்தவர்களை கொதிக்கும் எண்ணெய்ச் சட்டி களில் போட்டு வாட்டி எடுப்பார்கள் என்று கூறினார்.

புஷ் நிமிர்ந்து உட்கார்ந்தார். பின் மிகுந்த ஆவலுடன், "அங்கு எத்தனை எண்ணெய்ச்சட்டிகள் இருக்கும்?" என வினாவினார்.

வந்தவர் எண்ணற்ற பல இலட்சக்கணக்கான எண்ணெய்ச் சட்டிகள் இருக்குமெனக் கூறினார்.

புஷ் மேசையில் ஓங்கி அடித்துவிட்டு ஆக்ரோசம் ஒருபுறம் கவலை ஒருபுறமாக உரத்த குரலில் அரற்றலானார். "இவ்வளவு நாளும் எண்ணெய்க்காக அரபுநாடுகளுடன் வீணாகப் போராடி எனது படையினரையும் ஆயிரக்கணக்காக இழந்து, அமெரிக்கமக்களினதும், ஏன் உலக மக்களினதும் ஏச்சுப் பேச்சையும் திட்டுக்களையும் கேட்க வேண்டியதாயிற்றே!

இன்றே, இப்போதே அந்தச் சண்டையை நிறுத்திவிட்டு உங்களது நரகலோகத்துடன் போராடி அத்தனை எண்ணெய்ச் சட்டிகளையும் கைப்பற்றி வெற்றி வாகை சூடப்போகிறேன்" என்று உரத்தகுரலில் சவால் விடலானார்.

இலங்கையிலிருந்து சென்றவர் அடுத்த விமானத்தைப் பிடிக்க விரைந்து ஓடினார்!

## நகைச்சுவைக் கதைகள் - 34

### "பழக்கவழக்கமும் பரவணியும்"

ஒரு இராஜாவும் அவரது மந்திரியும் அரண்மனையின் மொட்டைமாடியிலிருந்து ஒரு மாலை வேளையில் வெகு சுவாரசியமாக அளவளாவிக் கொண்டிருந்தார்கள். வளர்ப்புப் பிராணிகளின் பழக்கவழக்கங்கள் பற்றி கதை எழுந்தது.

இராஜா "எந்தப்பிராணியையும் எந்தவிதப்பழக்கத்தையும் பழக்கி எடுத்து விடலாம்" என்று கூறினார்.

அதற்கு மந்திரியோ, "பழக்கவழக்கத்தை விட 'பரவணிக்' (பரம்பரைக்) குணமே மேலானது" என்றார்.

இராஜா அதனை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, ஒரு பூனையை வளர்க்கத் தொடங்கினார். சிறிது காலத்தின் பின் பூனையை இருக்கச்சொன்னால் இருக்கும்; ஓடச்சொன்னால் ஓடும்; கத்தச் சொன்னால் உடனே 'மியாவ்' என்று கத்தும். இப்படிப் பல்வேறு வித்தைகள் காட்டத் தொடங்கியது. இராஜாவிற்கு பரம திருப்தி. மந்திரியை அழைத்து வரச் சொன்னார். மந்திரிக்கு புரிந்துவிட்டது ஏன் அரசர் தன்னை அழைக்கிறார் என்று.

பூனைக்குத் தாம் பயிற்றுவித்த வித்தைகளை எல்லாம் காட்டி, "மந்திரியாரே எப்படி? பூனை தனது பரம்பரையை மறந்து நான் கற்பித்த வித்தைகளை எல்லாம் செய்கிறதே கவனித்தீரா?" என்றார்.

உடனே மந்திரி தான் மறைத்து வைத்திருந்த ஒரு குஞ்சு எலியை தனது சட்டைப் பையிலிருந்து எடுத்து தனது கையில் வைத்துக் கொண்டு பூனைக்குக் காட்டினார்.

உடனே இராஜாவின் தோளிலிருந்த செல்லப்பிராணி இராஜாவின் தோளை விட்டுக் குதித்தோடி மந்திரியின் கையிலிருந்த எலிக் குஞ்சைக் கௌவிக் கொண்டு குதித்தோடியது.

இராஜா திகைத்து நின்றார்.

## நகைச்சுவைக்கதைகள் - 35

### "என்னை விடப் பெரியவன் யார்?"

ஒரு பணக்கார முதலாளி பெரிய பாசாங்குக்காரர். தன்னைவிடப் பெரியவன், பணக்காரன் உலகில் இல்லை என்று எண்ணம் உடையவர். திமிரும் அதமமும் பிடித்தவர்.

அவரது அலுவலகத் தொலைபேசி வேலை செய்ய வில்லை. தொலைபேசி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தொலை பேசியைத் திருத்தக் கேட்டுக்கொண்டார்.

அன்னாரது அலுவலகம் திறக்கப்பட்டது. அவர் ஆடம்பர மாக அமர்ந்திருந்தார். இவரை விட ஆடம்பரமாக உடை அணிந்து கோர்ட், டை, உடன் ஒருவன் உள்ளே நுழைந்தான்.

முதலாளியோ உடன் தொலைபேசியைத் தூக்கி "ஒரு மில்லியன் தரமுடியுமா? இரண்டு மில்லியன் தான் கணக்கு!

உனக்காகக் குறைத்து விடுகிறேன்", என்று பாசாங்கு செய்துவிட்டு "வருக! நீங்கள் யார்?" என்று கேட்டார்.

வந்தவர் சொன்னார், "நான் தொலைபேசி திருத்த வந்தவன்; உங்கள் தொலைபேசி தற்போது சரிதானே!" என்று கூறி வெளியேறினான். முதலாளி விக்கித்து நின்றார்.

## நகைச்சுவைக் கதைகள் - 36

### "உயிர்த்த முயல்"

அவன் வேலை முடிந்து களைத்துப்போய் வீடு திரும்பினான். வீட்டு வாசலில் அதிர்ச்சி காத்துக்கிடந்தது. அவனது நாயின் வடிவில்! ஏன் நாயின் வாயில் என்று கூடச் சொல்லலாம்.

ஆம், அவனது நாயின் வாயில் பக்கத்து வீட்டான் அன்பாக வளர்த்த முயல் செத்துக்கிடந்தது. அவன் திகில டைந்தான். அக்கம், பக்கத்தவர் ஏசிப் பேசியே தன்னையும், தனது செல்லப்பிராணி நாயையும் சாகடித்து விடுவார்களே என அஞ்சினான்.

நாயின் வாயிலிருந்து மெதுவாக செத்த முயலை மீட்டெடுத்து, குளிக்கவார்த்து, ஒட்டியிருந்த மண்ணெல்லாம் துடைத்தெடுத்து, இயற்கையான மரணம் போல் காண்பித்து, அயலவனின் முயற்கூட்டிற்குள் செத்த முயலைப் போட்டுவிட்டு நிம்மதியாக நல்லபிள்ளை போற் தூங்கினான்.

நான்கைந்து நாட்கள் சென்றன. அயலவனுடன் ஒளித்துப் பிடித்து விளையாடினான். அவனை நேரில் பார்ப்பதைத் தவிர்த்துக்கொண்டான்.

எனினும் ஒருநாள் நேருக்கு நேர் சந்திக்க வேண்டி நேர்ந்தது. அயலவன், "மச்சான், இந்த ஏரியாவில் என்ன

நடக்கிறது என்று புரியவில்லை; நான் வெளியூர் சென்று திரும்பி வந்தபோது எனது முயல் கூட்டுக்குள் இறந்து கிடந்தது. அதை எடுத்து எனது தோட்டத்தில் புதைத்துவைத்தேன். மீண்டும் அந்த முயலை யாரோ தோண்டி எடுத்து, குளிக்க வார்த்து கூட்டுக்குள் போட்டிருக்கிறார்கள்; பேய் பிசாசு உலாவுகிறதோ தெரியவில்லை" என்றானே பார்க்கலாம்.

இவன் மயக்கமடையாத குறைதான்!

எல்லாம் நாய் செய்த திருவிளையாடல்!

## நகைச்சுவைக் கதைகள் -37

### "முதல் உதவி"

ஒரு சாரதி ஓட்டிவந்த மோட்டார் வண்டி வீதியிலிருந்து தவறி நடைபாதையில் உள்ள சுவருடன் மோதியது. சாரதி மயக்கமானார்.

வீதியில் சென்ற ஒருவர் சனத்தை விலத்தி சாரதியைப் பார்க்க முற்பட்டார்.

பின்னால் வந்த இளம் பெண்ணொருத்தி அவனைத் தோளில் தட்டி விலத்தி விட்டு முன்னேறப்பார்த்தார்.

இளைஞனோ "நான் முதல் உதவிப் பயிற்சி பெற்றவன்; இந்தச் சாரதியை என்னால் காப்பாற்ற முடியும்" என்றான்.

அவளோ, "நீ முதல் உதவி பயிற்சி பெற்றிருக்கலாம். எனினும் இறுதியாக என்னிடம் தான் அவனை அழைத்து வரவேண்டும். ஏனெனில் நான் அவசரசிகிச்சை வைத்தியர்" என்றாளே பார்க்கலாம்.

முதல் உதவி பயிற்சி பெற்றவன் பக்குவமாக விலத்திக் கொண்டான்.

## நகைச்சுவைக் கதைகள் - 38

### "காதலன்"

ஒருத்தி : "எனக்குத்தான் உலகத்திலேயே மிகச் சிறந்த காதலன் கிடைத்துள்ளான்."

மற்றவள் : "என்ன கட்டிய புடவையுடனேயே வரச் சொன்னானா?"

முதலாமவள்: "இல்லை; இல்லை; கட்டின புருஷனுடன் வந்தாலும் பரவாயில்லை; ஏற்றுக் கொள்ளுவேன் என்கிறான்"

## நகைச்சுவைக் கதைகள் -39

### "இல்லை நான் குடிக்கவில்லை"

நன்கு குடித்திருந்த சாரதி ஒருவன் வீதியில் நின்ற பொலிஸ்காரனிடம் அகப்பட்டுக் கொண்டான்.

பொலிஸ்காரர் சாரதி மது அருந்தியுள்ளாரா என்பதை அறிய பலூனை ஊதச் சொன்னார். சாரதி மறுத்து "நான் ஆஸ்த்மா வியாதிக்காரன், மூச்செடுத்து ஊதினால் இறந்துவிடுவேன்" என்றான்.

பொலிஸ்காரரும் அக்காரணத்தை ஏற்றுக்கொண்டு "உமது சலத்தை தாரும்; அவதானித்துப் பார்ப்போம்" என்றார்.

சாரதியோ "அதுவும் தரமுடியாது ; நான் சலரோகக்காரன் - செத்துப் போய்விடுவேன்" என்றான்.

பொலிஸ்காரரும் சளைக்கவில்லை "ஒரு சொட்டு இரத்தம் தாரும் - பரிசோதித்துப் பார்க்கலாம்" என்றார்.

சாரதியா, கொக்கா - "இரத்தத்தைக் கண்டால் நான் மயக்கமடைந்து இறந்துவிடுவேன்" என்றான்.

இறுதியாக பொலிஸ்காரர் ஒரு நேர்கோடு கீறி சாரதியை அக்கோட்டில் நடக்கச் சொன்னார்.

அவன் அதற்கும் மறுத்துவிட்டான். பொலிஸ்காரர் "ஏன் மறுக்கிறாய்?" என்று கேட்டார்.

"என்னால் முடியாது, ஏனென்றால் நான் நன்றாகக் குடித்திருக்கிறேன்" என்றான்.

பொலிஸ்காரர் அவனைக் கைதுசெய்தார்!

## நகைச்சுவைக் கதைகள் - 40

### "எப்படியும் தோல்விதான்"

சேகர்: நீ ஆதரிக்கும் வேட்பாளர் தேர்தலில் வென்றாலும் உனக்கும் ஒரு பிரயோசனமில்லை; உங்களது தொகுதிக்கும் ஒரு பிரயோசனமில்லை. எப்படியும் தோல்விதான்!

பாலு: ஏன் அப்படிச் சொல்கிறாய்?

சேகர்: அவர்தான் வென்றபிறகு தொகுதிப் பக்கமே வரமாட்டாரே!

பாலு: ??????

## நகைச்சுவைக் கதைகள் - 41

### "சந்தோசம்"

தனது மனைவியைக் காணவில்லை என்று புகார் செய்யக் கணவர் பொலிஸ் ஸ்ரேசனுக்கு வந்திருந்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் கணவரிடம் கேட்டார் "எவ்வளவு காலமாக காணவில்லை?"

கணவரோ சாவதானமாக “இரண்டு வருடங்களாக!” என்றார். இன்ஸ்பெக்டர் திகைப்படைந்து, “என்ன இரண்டு வருடங்களா? இவ்வளவு நாளும் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?” என்றார்.

கணவரோ மிகவும் அமைதியாக, “சந்தோசத்திலே காலம் போனதே தெரியவில்லை!” என்றார்.

## நகைச்சுவைக் கதைகள் - 42

### “எனது மனைவி”

ஒருவர் : “என்ன மச்சான், எப்ப பார்த்தாலும் எனது மனைவி முகத்தில் அறைந்த மாதிரி பேசுகிறாளே! என்ன செய்வது என்றே தெரியவில்லை!”

மற்றவர்: “அட, உன்பாடு பரவாயில்லை; என்ரை மனிஷி எனது முகத்தில் அறைஞ்ச பிறகு தானே பேசவே தொடங்குகிறா!”

## நகைச்சுவைக் கதைகள் - 43

### “அதிர்ஷ்ட இலக்கம்”

ஒரு வயோதிபர் சிறு வயதிலிருந்தே அதிர்ஷ்ட இலக்கத்தில் நம்பிக்கையுள்ளவர்; 3வது எண்ணில் மிகவும் நம்பிக்கை உள்ளவர். நம்பிக்கையின் பேரில் 33வது வயதில் திருமணம் செய்தார். மூன்று பிள்ளைகள் மட்டுமே பெற்றுக்கொண்டார்.

அன்னார் வேலை செய்த கொம்பனியில் ரூ.40,000 சம்பள உயர்வு கொடுக்க முனைந்த போது, அவர் அதை

வேண்டாமென்று கூறி, ரூ.33,333 சம்பளம் தரும்படி கூறினார். கம்பனி மகிழ்ச்சியுற்றது.

அவரது குணத்தை அறிந்த நண்பர் ஒருவர், "இன்று ஒரு குதிரை ரேஸ் உள்ளது; நிறைய குதிரைகள் வருகின்றன. பந்தயம் பிடித்துப் பாருமேன்" என்றார். நண்பர் சளைக்கவில்லை. இல 3, இல 33 ஆகிய குதிரைகளில் தனது, தனது மனைவியின் சேமிப்பு அனைத்தையுமிட்டு இரண்டு குதிரைகளில் (இல 3, இல 33) 33,000,000 பந்தயம் இட்டார்.

இரண்டு குதிரைகளும் 33ம் இடத்திலே வந்து வெற்றி (?) பெற்றன.

## நகைச்சுவைக் கதைகள் - 44

### "சூரியனா? சந்திரனா?"

இரண்டு பெரும் குடிகாரர்கள் இரவு பூராவும் குடித்துவிட்டு 'பாரை' விட்டு வெளியே வந்தார்கள்.

முதலாமவர் : (வானத்தைப் பார்த்து) அது என்ன சூரியனா? சந்திரனா?

இரண்டாமவர்: எனக்கு எப்படி தெரியும்? நான் இந்த ஊரைச் சேர்ந்தவனில்லையே!

## நகைச்சுவைக் கதைகள் - 45

### "இரண்டு பெண்டாட்டிக்காரன்"

ஒரு கணவர் தனது டாக்டருக்கு 'போன்' செய்து "டாக்டர், டாக்டர் உடனடியாகப் புறப்பட்டு எனது வீட்டிற்கு வரவும். எனது மனைவி வயிற்றுவலியால் கூயோ மாயோ என்று கூக்குரலிடுகிறாள். கெதியாக வரவும்; 'அப்பெண்டிசைற்றிஸ்' ஆக இருக்குமோ எனப் பயப்படுகிறேன்" என்றார்.

டாக்டரோ கடகட என சிரித்துவிட்டு " 'அப்பெண்டிசைற்றிஸ்' ஆக இருக்கமுடியாது. ஏனெனில் நான் தான் அவருக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னால் அப்பெண்டிசைற்றிஸிற்கு ஒப்பரேசன் பண்ணி விட்டேனே! ஒருவருக்கு ஒருமுறைதான் அப்பெண்டிசைற்றிஸ் வரும்" என்று அடித்துக் கூறினார்.

அதற்கு அந்த அருமைக் கணவர், "டாக்டர் எனக்கும் தெரியும் ஒருவருக்கு ஒருமுறைதான் 'அப்பெண்டிசைற்றிஸ்' வருமென்று. ஆனால் ஒருவனுக்கு இரண்டு பெண்டாட்டி இருக்கக்கூடாதா?" என்றார்.

டாக்டர் ஒன்றுமே பேசாமல் தொலைபேசியை வைத்துவிட்டு நண்பரின் வீட்டுக்குப் போகப் புறப்பட்டார்.

## நகைச்சுவைக் கதைகள் -46

### "கெட்டிக்காரன்"

அந்தத் தம்பதியருக்கு ஒரே ஒருமகன். செல்லப் பிள்ளை யானதால் படிப்பில் படுமொக்காக இருந்தான்.

தம்பதியருக்கு "படி, படி" என்று சொல்லி அலுத்துப் போய்விட்டது. க.பொ.த.(சாதாரண) வகுப்பு இரண்டுமுறை சித்தியெய்தவில்லை.

தம்பதியரும் அலுத்துக்களைத்துப் போயிருந்தனர். அருமை மகனுக்கும் மனம் கேட்கவில்லை.

"அம்மா, இலங்கையில் பல்லாயிரக்கணக்கான மாணவர் களில் நானொருவன் படிக்காவிட்டால் இந்த நாடென்ன கெட்டா போய்விடும்?" என்று கேட்டானே பார்க்கலாம்.

தம்பதியர் ஒன்றும் பேசாமல் விக்கித்து நின்றார்கள்.

# நகைச்சுவைக் கதைகள் -47

## "சபாஷ்! சரியான போட்டி"

ஒரு ஜவுளி வியாபாரியின் கடை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இன்னுமொருவன் அவரது கடைக்கருகில் இன்னுமொரு ஜவுளிக் கடை திறக்குமட்டும். அத்துடன் புதிய வியாபாரி "இங்கு மிகவும் புதிய டிசைன்களில் ஜவுளி கிடைக்கும்" என விளம்பரப்பலகை ஒன்றையும் வைத்திருந்தான். முதல் வியாபாரி சற்றுக் கலங்கிவிட்டான். தனது வியாபாரம் குறைந்து விடுமோ என்று. அவன் எதிர்பார்த்தது போலவே அவனது வியாபாரம் சற்று 'டல்'லடித்தது.

சிறிது காலம் சென்றது. இன்னுமொரு வியாபாரியும் பிறிதொரு ஜவுளிக் கடையைத் திறந்து, "இங்கு மலிவு விலையில் ஜவுளி தினுசு, தினுசாக விற்கப்படும்" என மிக அகலமான விளம்பரப்பலகை ஒன்றை வைத்தான்.

முதல் வியாபாரியோ அதிர்ந்துவிட்டான்.

மாலை வீடு திரும்பிய கணவன் என்றுமில்லாதவாறு கவலையுடன் இருப்பதைப் பார்த்த மனைவி, "என்ன விடயம்? ஏன் கவலையாக இருக்கிறீர்கள்?" என அன்பாக வினாவினாள். கணவனும் விடயத்தைக் கூறினார். மனைவி, "இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்?" என்று சாவகாசமாகக் கூறி, ஒரு யோசனை கூறினாள். கணவனும் மிகுந்த மகிழ்சியுடனும், அமைதியான மனத்துடனும் படுக்கைக்குப் போனான்.

அடுத்தநாள் காலை அவனது கடையின் முன்னால் மிகப்பெரிய அளவில் "ஜவுளிக் கடைகளின் பிரதான வாயில் இங்குதான் உள்ளது" என்ற அழகிய விளம்பரப்பலகை காணப்பட்டது.

## நகைச்சுவைக் கதைகள் - 48

### "செவிட்டு மெசின்!"

ஒரு பணக்காரப் பெண் அந்தத் தபாற்கந்தோருள் வேகமாக நுழைந்தாள். நேராக தபாலதிபரின் அறைக்குள் நுழைந்தாள். தபாலதிபர் தனது ஆச்சரியத்தைக் காட்டிக்கொள்ளாமல் அப்பெண்ணை தனக்கு முன்னால் உள்ள ஆசனத்தில் அமரச்சொன்னார்.

அப்பெண்ணோ கோபத்துடன் அவர் காட்டிய ஆசனத்தில் அமரமறுத்து அவரை நோக்கி, "எனக்கு ஒரு பார்சல் வர வேண்டும். மிகவும் முக்கியமான பார்சல் அது" என்று கர்ச்சித்தார்.

தபாலதிபர் தானே சென்று பெண்மணியின் பார்சலை தேடி எடுத்து வந்து கொடுத்துவிட்டு, "எனது தபால்பியூன் இரண்டு, மூன்று தடைவ தங்கள் வீட்டிற்கு வந்து மணி அடித்தானே! ஒருவரும் வீட்டிலில்லையா?" என்று கேட்டார்.

பார்சலை வாங்கிக் கொண்ட பெண்மணி, "ஏன் இல்லை? எனது கணவர் இருந்தாரே!" என அதட்டலாகக் கூறிக்கொண்டே தபாலதிபர் முன்னிலையிலேயே பார்சலை உடைத்துப் பார்த்தார். பார்சலின் உள்ளே 'செவிட்டுமெசின்'!

தபாலதிபருக்கு அனைத்தும் புரிந்தது!

## நகைச்சுவைக் கதைகள் - 49

### "ஏன் ஓடுகிறார்கள்?"

அது ஒரு ஓட்டப்பந்தயம். பத்துப்பேர் பங்கேற்று ஓடுகிறார்கள்.

ஒருவர் : ஏன் அனைவரும் ஓடுகிறார்கள்?

மற்றவர்: இது ஒரு ஓட்டப்பந்தயம். அதோ அந்தக் கிண்ணத்தைப் பெறத்தான் அத்தனை பேரும் ஓடுகிறார்கள்!

முதலாமவர்: (அப்பாவித்தனமாக) ஒருவருக்குத்தான் அந்தக் கிண்ணமென்றால் ஏன் அனைவரும் ஓடவேண்டும்?

## நகைச்சுவைக் கதைகள் - 50

### "வயது ஒரு பிரச்சனையல்ல"

பையன்: (தந்தையிடம்) என்னப்பா செய்றது? நான் காதலிக்கும் பெண்ணுக்கு ஒரு வயது கூட!

தந்தை: அதற்கென்ன பரவாயில்லை. அடுத்த வருடம் கல்யாணம் செய்துகொள்ளலாம்.

## நகைச்சுவைக் கதைகள் - 51

### "கோப்பி குடிப்போமா?"

காதலன், காதலி கூட கோப்பி குடிக்கப் போனான் வெயிற்றர் சொன்னார், "சூடான கோப்பி ரூபா 20, ஐஸ் கோப்பி ரூபா 35". காதலன் சூடான கோப்பி ஓடர் பண்ணி காதலிக்குச் சொன்னான் "சீக்கிரமாகக் குடி; குளிர்ந்து போனால் ரூபா 15 நட்டம்!"

காதலியும் அவசர அவசரமாக சூடான கோப்பியைக் குடித்தாள்.

# நகைச்சுவைக் கதைகள் -52

## "அந்த வழி வேண்டாம்!"

ஒரு கணவனும், மனைவியும் திருமணம் முடிந்த காலந் தொட்டு கீரியும், பாம்பும் போலச் சண்டை பிடித்தபடியே இருப்பார்கள்.

ஒருநாள் திடீரென மனைவி இறந்து போய்விட்டாள். மனதுள் சந்தோசப்பட்டாலும் உற்றார் உறவினருக்குக் கவலைப்படுவது போல் காட்டிக்கொண்டு நண்பர்களையும், உற்றார் உறவினரையும் அழைத்து, பணம் கொடுத்து, இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார் அந்த உத்தமக் (?) கணவர்.

நண்பர்களும் அன்றைய கால முறைப்படி அவசர அவசரமாக பாடைகட்டத் தொடங்கினார்கள்.

பாடைகட்டி முடிந்து, இறுதிக்கிரியைகளும் செய்யப்பட்டு பிரேதம் பாடையுள் வைக்கப்பட்டு மரண ஊர்வலம் புறப்பட்டது.

அருமைக் கணவரின் கஷ்டகாலமோ என்னவோ பிரேத ஊர்வலம் ஒரு ஒற்றையடிப்பாதையால் காட்டுப்பகுதியினூடே சென்றது. இருபக்கமும் மருத்துவ மூலிகைகள். இறந்த மனையாள் மூக்கில்பட்டு, சுவாசித்ததின் பலனாக மனைவி உயிர்த்தெழுந்துவிட்டார். கணவர் அதிர்ச்சிக்குள்ளானாலும் அதை வெளியிற்காட்டிக் கொள்ளாமல் வேண்டா வெறுப்பாக உயிர்த்தெழுந்த மனைவியைக் கட்டியணைத்துக் கொண்டார்.

சிறிது காலம் சென்றது. மனைவி மீண்டும் மரணமானார்.

நண்பர்கள், உற்றார் உறவினர்களை அழைத்த கணவர், "பாடைகட்டுங்கள் சரி; இறுதிக்கிரியைகள் செய்யுங்கள்

சரி; ஆனால் சென்றமுறை சென்ற ஒற்றையடிப்பாதையாலே ஊர்வலம் செல்லாமல், மெயின்றோட்டால் போக வேண்டும்" என்று கண்டிப்பான உத்தரவு போட்டார்!

நன்றி ; 'தாயகஒலி' 41

## நகைச்சுவைக் கதைகள் - 53

### "பெரிய முகாமையாளரும், சின்ன முகாமையாளரும்"

அது ஒரு பெரிய கம்பனி. மூன்று மாடிகள் கொண்ட கட்டிடம். நூற்றுக்கணக்கான ஊழியர்கள் தொழில் புரிந்தார்கள். கீழ்த் தட்டில் வரவேற்பறை, கணக்குவழக்கு பார்க்கும் ஊழியர்கள், காசாளர்கள். அவர்களுக்குப் பொறுப்பாக ஒரு மனேஜர்.

இரண்டாம் தட்டில் அந்தக் கம்பனியினால் தயாரிக்கப்படும் பொருட்களின் 'சாம்பிள்கள்'. அவற்றின் உபயோ கங்களை விளக்கும் ஊழியர்கள்.

மூன்றாவது மாடியில் தான் பெரிய முகாமையாளரும், அவரது ஊழியர்களும்.

கீழ்மாடியில்தான் குழப்படிகார ஊழியர்கள் தொழில் புரிந்து வந்தார்கள். பெரிய அலுமாரி ஒன்றுக்குள் சாராய போத்தல், சோடா, கிளாஸ் இத்தியாதி பொருட்களை வைத்து தினமும் பகலில் 'அடித்துவிட்டு' உணவருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்குப் பொறுப்பான மனேஜரிற்கு இந்தவிடயம் மணத்திருந்தாலும், அவரும் அலுவலகம் முடிந்து மாலை வேளைகளிலும், இரவு நேரங்களிலும் மது அருந்துபவராக

இருந்ததாலும் சகாக்களின் கம்பனி வேலை 'கப்சிப்'பாக இருந்தமையால் அந்தத் 'தொழிலை' கண்டும் காணாதவராக விட்டுவிட்டார்.

ஆனால் மூன்றாம் தட்டில் இருந்த பெரிய முகாமையாள ருக்கு யாரோ ஒருவன் இவ்விடயத்தைக் கோள்மூட்டிவிட்டான்.

பெரிய முகாமையாளர், முதலாம் தட்டிற்குப் பொறுப்பான முகாமையாளரை அழைத்து இதுபற்றி விசாரித்தார். அவரோ அப்படி ஒன்றும் நடைபெறுவதாகத் தெரியவில்லை என்று கூறிவைத்தார்.

பெரிய முகாமையாளர் சின்னவரைப் பார்த்து, "எதற்கும் எல்லா அலுமாரிகளையும் திறந்து 'செக்' பண்ணுங்கள். பெரிய இடத்திற்கு தெரியவந்தால் எல்லோருக்கும் அதோகதிதான்" என எச்சரித்தார்.

சின்ன மனேஜர் கீழேவந்தார். பியூன் பரமசாமியை அழைத்தார். எல்லா அலுமாரிகளையும் ஒவ்வொன்றாகத் திறக்கச்சொன்னார். பரமசாமியும் பயந்து, பயந்து ஒவ்வொரு அலுமாரியாகத் திறந்தார். எல்லா அலுமாரி களிலும் பழைய கோப்புகளும், கணக்குப் புத்தகங்களுமாகக் கிடந்தன.

குறிப்பிட்ட அலுமாரி வந்தது. மனேஜர் திறக்கச் சொன்னார். பரமசாமியும் திறந்தான். அங்கே அரைகுறையாகக் குடிக்கப்பட்ட சாராயப் போத்தல் ஒன்று, சோடாப்போத்தல்கள் இரண்டு, மூன்று. நான்கைந்து கிளாஸ், இறைச்சி, மீன், முட்டைப்பொரியல் இத்தியாதி, இத்தியாதி. பரமசாமி திகைத்து நின்றான்.

"ஐயா! சேர்!" வார்த்தைகள் வரவில்லை. மனேஜர்

அங்குமிங்கும் பார்த்தார். ஒரு கிளாசை எடுத்தார். பரமசாமியிடம் கொடுத்துக் கழுவிக் கொண்டு வரச்சொன்னார். பரமசாமியும் அப்படியே செய்தான்.

மனேஜர் பரமசாமி கொடுத்த கிளாசை வாங்கிக்கொண்டார். பரமசாமியைத் தவிர ஒருவரும் பார்க்கவில்லை என்பதை உறுதிசெய்து கொண்டு சாராயப்போத்தலை எடுத்து அளவான 'டிரிங்' ஒன்றை வார்த்தார். அதற்குள் சற்றுச் சோடா விட்டார். ஒருமடக்கில் குடித்தார். ஒரு இறைச்சித்துண்டை ருசித்துச் சாப்பிட்டவாறே லிப்ட் இருந்தும் மெதுவாக மாடியேறி மூன்றாம் மாடிக்குப் போய் எட்டநின்றபடியே பெரிய மனேஜரிடம், "எல்லா அலுமாரிகளையும் திறந்து நன்றாகச் 'செக்' பண்ணிவிட்டேன். அப்படி ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டு விசிலடித்தபடி லிப்டில் தன்னிருக்கைக்கு வந்தார்.

பெரிய மனேஜரும் திருப்தியுடன் தனது வேலையைத் தொடர்ந்தார்.

## நகைச்சுவைக் கதைகள் - 54

### "நூல்"

ஒரு பிரபல எழுத்தாளர் ஒரு செல்வந்தரைத் தமது புதிய நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்க அழைத்திருந்தார். செல்வந்தருக்கோ நூலைப் பற்றி எதுவும் தெரியாத படிப்பறிவற்றவர்.

தமது தலைமையுரையில், பட்டுப்பூச்சிகளைக் கொண்டு பட்டுச்சேலை தயாரிக்கும் அவலத்தையும், பஞ்சு நூல்

ஆடைகளையே அணியவேண்டும் என்றும் கதராடையின் மகத்துவம் பற்றியும் தலைமையுரையாற்றி "நூல்" பற்றிய தமது தலைமையுரையை நிறைவு செய்தார்.

நூலாசிரியரும், அவையோரும் அசந்துபோய் நின்றார்கள்!

## நகைச்சுவைக் கதைகள் - 55

### "கண்டிப்பான அப்பா"

பதினாறு வயது நிரம்பிய ஸ்ரீதரனின் தந்தை மிகவும் கண்டிப்பான பேர்வழி. பிரசித்தி பெற்ற கல்லூரி அதிபர். ஸ்ரீதரனோ அவனது வயதிற்கேற்ற சிறுசிறு குழப்படிகள் செய்பவன்.

ஒருநாள், "விளையாட்டுப் போட்டிப் பயிற்சிக்குப் போகிறேன்" என பெற்றோரிடம் கூறிவிட்டு, படம் பார்க்கப் போய் விட்டான்.

தந்தையார் அதிபரல்லவா? ஸ்ரீதரன் விளையாட்டு போட்டி என்று பொய்சொல்லிவிட்டுப் படம் பார்க்கப் போனதை எப்படியோ அறிந்துவிட்டார்.

மகனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க எண்ணி வீட்டுக் கதவைத் தாழ்ப்பாள்ப் போட்டு பூட்டிவிட்டு தனக்கே உரித்தான சாய்மனைக் கதிரையில் சாய்ந்து கொண்டு வழக்கம்போல் அன்றைய மாலைத் தினசரி மேல் கண்ணோட்டம் விடலானார். ஆனால் கவனம் கதவிலும், சிந்தனை மகனைப் பற்றியுமே இருந்தது.

இரவு ஏழுமணி இருக்கும். படம் பார்த்துவிட்டு திரும்பி வந்த ஸ்ரீதரன் பயந்தபடியே வீட்டுக் கதவைத் தட்டினான்.

மகனுக்குப் பாடம் படிப்பிக்க எண்ணிய தந்தையார் வீட்டுக் கதவைத் திறந்தவர் ஸ்ரீதரன் நிற்பதைக் கண்டு சற்றும் அலட்டிக் கொள்ளாமல், முன்பின்னறியாத ஒரு பையனைக் காண்பதுபோல், "ஸ்ரீதரனையா தேடி வந்திருக்கிறீர்கள்? அவன் தனது அப்பா, அம்மாவிடம் எங்கே போவது என்று சொல்லிக்கொள்ளாமல் உலாத்தப் போய்விடுவான். வெரி சொறி!" என்று கூறிவிட்டு மீண்டும் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாரே பார்க்கலாம்!.

## நகைச்சுவைக் கதைகள் - 56

### "5000 ரூபாய்"

ஒரு வைத்தியர் புத்திசாலித்தனமாக சற்று அதிகம் சம்பாதிக்க ஆசைப்பட்டார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட புதிய வைத்தியசாலையின் வாயிலில் அனைத்து நோய்களுக்கும் வைத்திய ஆலோசனைக்கு ரூபா 2000/= அறிவிடப்படும்; நோய் குணமாகாவிட்டால் ரூபா 5000/= திருப்பியளிக்கப்படும" என்ற அறிவித்தலை தொங்கவிட்டார்.

இந்த அறிவிப்பை அவதானித்த புத்திசாலி? ஒருவன் டாக்டரை மடக்கி பணம் பறிக்க எண்ணினான். டாக்டரிடம் சென்றுதனக்குசுவைக்கும்தன்மைமரத்துவிட்டதாகவும்,எந்த உணவுப் பதார்த்தத்தின் ருசியையும் உணரமுடியவில்லை

எனவும் கூறினான்.

உடனே வைத்தியர் ஒரு போத்தலைத் திறந்து அதிலிருந்த திரவத்தில் இரண்டொரு துளிகளை அவனது வாய்க்குள் விட்டார். வந்தவன் "இது பெற்றோல்" என்று கூறி "தூ" என்று காறித் துப்பினான்.

டாக்டர் "உனக்கு சுவை உணர்வு உள்ளது" என்று கூறி ரூபா இரண்டாயிரம் அறிவிட்டார்.

கோபத்துடன் வெளியேறிய விந்தன் டாக்டரைப் பழிவாங்கி ரூபா 5000/= அறவிட தீர்மானித்து பொருத்தமான தருணத்திற்காக காத்திருத்தான்.

இரண்டு வாரங்கள் கழித்து விந்தன் டாக்டரிடம் வந்து தனக்கு மறதி ஏற்பட்டுள்ளதாகவும், பழையன அனைத்தையும் மறந்து விட்டதாகவும் "புருடா" விட்டான்.

டாக்டர் "எம்டன்" அல்லவா? சென்ற தடவை போலவே இரண்டு துளி பெற்றோலை விந்தனின் வாயில் விட்டார். "தூ" என்று துப்பியவன் "சென்றமுறை போலவே இந்த முறையும் பெற்றோலை வாய்க்குள் விட்டிருக்கிறீர்கள்" என்றான். டாக்டரும், "பார்த்தீரா உமக்கு ஞாபக சக்தி அதிகம்" என்று கூறி தமது வழமையான கட்டணமான ரூபா இரண்டாயிரத்தைப் பெற்றுக்கொண்டார்.

நாட்கள் நகர்ந்தன. விந்தன் அடுத்த திட்டத்துடன் டாக்டரை அணுகினான். "டாக்டர் எனக்கு கண்பார்வை துப்பரவாகத் தெரியவில்லை" என்று கூக்குரலிட்டான்.

டாக்டரும் விந்தனின் கண்களை நன்கு சோதித்துப் பார்த்தார். கண்களில் ஒரு குறையுமில்லை என்பதும் விந்தனின் சதித்திட்டமும் டாக்டருக்குப் புரிந்தது.

"சாரி விந்தன், உங்கள் கண்களை என்னால் சுகப்படுத்த முடியவில்லை; நான் தோல்வியடைந்து விட்டேன். ஒப்பந்தப்படி இந்தா ரூபா ஐயாயிரம்" எனக்கூறி ஒரு நோட்டை விந்தனிடம் கொடுத்தார்.

"டாக்டர், இது 5000/= நோட்டல்ல; 2000/= அல்லவா?" என்று வீரிட்டான் விந்தன்.

"உமது கண்பார்வை ஓகே. எடும் எனது கட்டணத்தை" என்றார் டாக்டர்.

விந்தன் மயங்கி விழுந்தான்!

பகுதி – II

# சிறுவர் நகைச்சுவைக் கதைகள்



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | குறும்புக்காரச் சிறுவன் | 79 |
| 2. | கும்பகர்ணத் தூக்கம் | 82 |
| 3. | குழப்படிக்காரச் சிறுவன் | 82 |
| 4. | அதிரடிச்சிறுவன் | 83 |
| 5. | ஏன் படிக்கவேண்டும்? | 84 |
| 6. | சிறுவன் வரைந்த ஓவியம் | 85 |
| 7. | புத்திசாலிப்பையன் | 86 |
| 8. | எப்படித் தெரியும்? | 86 |

# சிறுவர் கதைகள் -01

## "குறும்புக்காரச் சிறுவன்"

ஒரு எட்டு வயதுச்சிறுவன்; செல்வந்தப் பெற்றோருக்கு ஒரேவாரிசு. ஒரு குறையுமில்லாமல் வளர்ந்தான். கல்வியிலும் பரவாயில்லை. ஆளும் படு சுட்டி. பெற்றோருக்கு மட்டும் பெரும் மனக்குறை தமது ஒரே செல்ல மகன் சரியாகச் சாப்பிடுவதில்லை என்பதுதான் அந்தக்குறை. ஏன் அவன் ஒன்றுமே சாப்பிடுவதில்லை என்றே கூறலாம். பெற்றோரும் அவனைக் கூட்டிச் சென்று காட்டாத வைத்தியர்கள் இல்லை. அனைத்து வைத்தியர்களும் அவனுக்கு ஒன்றுமில்லை என்றுகூறி 'விட்டமின்' மாத்திரைகளை மாத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். அவன் அதையும் சாப்பிட மறுத்தான். பெற்றவர்களுக்கோ கவலை அதிகரித்தது.

இது எங்கே சென்று முடியுமோ என அவர்கள் யோசித்துக் கொண்டிருந்த போது அவர்களின் தூரத்து உறவினர், வயோதிபர் ஒருவர் அவர்களின் வீட்டிற்கு வந்திருந்தார். பெற்றவர்கள் கவலையுற்றிருப்பதறிந்து காரணத்தைக் கேட்டார். "இதுதானா? கவலையை விடுங்கள்" என்று கூறி அருகிலிருந்த பிறிதொரு நகரத்தின் பிரசித்தமான மனோதத்துவ வைத்தியரின் விலாசம், தொலைபேசி இலக்கம் முதலியவற்றை கொடுத்து அவரிடம் காட்டச் சொன்னார்.

வைத்திலிங்கம் தம்பதிகளும் ஒரு நல்ல நாளாகப் பார்த்து மகன் திலீபனை அந்தப் பிரசித்தி பெற்ற மனோதத்துவ வைத்தியரிடம் அழைத்துச் சென்றார்கள். ஏற்கனவே வைத்தி யரிடம் முன்னேற்பாடு செய்திருந்தமையால் உடனடி யாக வைத்தியரைப் பார்வையிட முடிந்தது. வைத்தியர் மிகவும் சாந்தமானவராகவும், நல்லவராகவும் தோற்றமளித்தார். வைத்திலிங்கம் தம்பதியினர் தமது குறைகள் அனைத்தையும் கொட்டித் தீர்த்தார்கள். அனைத்தையும் ஆறுதலாகக் கேட்ட

வைத்தியர் திலீபனை தமது அருகில் அன்புடன் அழைத்து அமரச் செய்தார்.

"தம்பிக்கு என்ன பெயர்? என்ன வயது? எந்த வகுப்பு? எங்கே படிக்கிறீர்கள்?" என அன்புடன் கேட்டார்.

திலீபனும் 'டக், டக்'கென்று சாமர்த்தியமாகப் பதில் அளித்தான். அடுத்து, டாக்டர் தனது பரிசோதனைகளை ஆரம்பித்து, "தம்பி, உமக்கு என்ன செய்கிறது? எங்கே வலிக்கிறது?" என்று கேட்டார். சிறுவன் படக்கென்று "எனக்கொன்றும் செய்யவில்லை ஒரு இடத்திலும் வலிக்க வில்லை" என்றான்.

"அப்போ ஏன் ஒன்றும் சாப்பிடுகிறீர் இல்லை?" - இது டாக்டர்

"எனக்குப் பசியில்லை!" - இது பையன்.

பையனுக்கு உடம்பில் ஏதும் கோளாறு இல்லை என்பதை டாக்டர் தெரிந்து கொண்டார். "சரி பரவாயில்லை இப்போ பிஸ்கட் கொண்டுவரச் சொல்கிறேன். சாப்பிடும்"

"வேண்டாம்!"

"சொக்லேட்" - "வேண்டாம்!"

"ஐஸ்கிறீம்" - "வேண்டாம்!" பையன் சற்றுக் காட்டமாகவே பதில் சொன்னான்.

வைத்திலிங்கத்தாருக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "ஏய்! டாக்டரிடம் பணிவாகப் பேசவேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறினார். டாக்டர் வைத்திலிங்கம் தம்பதிகளை அடங்கிப் போகும்படி அன்புடன் கேட்டுக்கொண்டார். மனோதத்துவ நிபுணர் அல்லவா?

பையனைப் பார்த்து, "சரி தம்பி, இங்கே வந்ததற்காக தயவு செய்து ஏதாவது சாப்பிடும்!" என்று பெற்றோரும் வற்புறுத்தினார்கள்.

எமது கதாநாயகன் திலீபன் சற்று யோசித்தான்.

"ஒரு மண்புழு கொண்டு வாருங்கள். சாப்பிடுகிறேன்!" என்றான். டாக்டரை அவன் கேலி செய்கிறான் என்று வைத்திலிங்கம் அவனை அடிக்கப்போனார். டாக்டர் வைத்திலிங்கத்தாரை இடைமறித்து "சற்றுப்பொறுங்கள் இப்படித்தான் சிகிச்சை செய்ய வேண்டும்" என்ற கூறி தமது உதவியாளனை அழைத்து ஒரு மண்புழு கொண்டு வரச்சொன்னார். மண்புழு வந்து சேர்ந்தது. டாக்டர் சிறுவனைப் பார்த்தார்.

சிறுவன் மண்புழுவிற்கு உப்பு, மிளகு போடச் சொன்னான்; போடப்பட்டது. இரண்டு துண்டாக வெட்டச் சொன்னான்; வெட்டப்பட்டது. வைத்தியர் திலீபனைப் பார்த்து சாப்பிடச் சொன்னார். "ஒரு துண்டை நீங்கள் சாப்பிட்டால் மற்றத்துண்டை நான் சாப்பிடுகிறேன்" என்றான் சிறுவன்.

வைத்திலிங்கம் வெகுண்டெழுந்து சிறுவனை அடிக்கப் போனார்.

தடுத்து நிறுத்திய வைத்தியர், "இப்போதுதான் சிகிச்சை ஆரம்பமாகிறது; சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி மண்புழுவின் ஒரு துண்டை எடுத்துச் சாப்பிட்டார் அந்தப் பிரபலமான மனோதத்துவ வைத்தியர்.

அடுத்த கணமே நிலத்தில் விழுந்து 'குய்யோ, முறையோ' எனக் கதறி அழுதான் சிறுவன் திலீபன். புரண்டு புரண்டு அழுதான்.

பெற்றோர், வைத்தியர், உட்பட உதவியாளனும் திகைத்து நின்றார்கள்.

அவனுக்கு ஆறுதல் கூறி, மற்றத் துண்டைச் சாப்பிடுமாறு கேட்டார்கள்.

அவனோ, "பெரியதுண்டை டாக்டர் அங்கிள் சாப்பிட்டு விட்டார்; எனக்கு சிறிய துண்டு வேண்டாம்" என்று கூறி மீண்டும் கதறி அழத்தொடங்கினான் அந்தக் குறும்புக்காரச் சிறுவன்!

அனைவரும் அதிர்ந்து போய் விக்கித்து நின்றார்கள்!

நன்றி: செங்கதிர் - கைவகாசி 2008 -5

## சிறுவர் கதைகள் - 02

### "கும்பகர்ணத் தூக்கம்"

ஆசிரியர் : கும்பகர்ணன் ஏன் நீண்ட நேரம் தூங்கினான்?

மாணவன் : அது நுளம்பில்லா காலம்!

## சிறுவர் கதைகள் - 03

### "குழப்படிக்காரச் சிறுவன்"

முற்றுமுழுதாகப் பையன்களைக் கொண்ட அந்த ஆறாவது வகுப்பின் வகுப்பாசிரியர் கண்டிப்பிற்கு மிகவும் பேர்போனவர். குழப்படி செய்யும் பையன்களை அவர் தண்டிக்கும் விதமே அலாதியானது. முழங்காலில் நிற்கச் சொல்வார். தனது வகுப்பு முடியும் வரை; பெஞ்சின் மேலேறி நிற்கச் சொல்வார்; அடியும் போடுவார். அத்தனை கண்டிப்பு!

அப்படித்தான் ஒருநாள் - புத்திக் கூர்மையும், நகைச்சுவை உணர்வும் மிகுந்த முகுந்தன் வகுப்பில் படிக்கும் நேரத்தில் குழப்படி செய்தான் என்று கண்ட வகுப்பாசிரியர் அவனை வகுப்பிலிருந்து வெளியே போகச் சொல்லிப் பணித்தார்.

முகுந்தனும் பணிவன்புடன் வகுப்பறையை விட்டு வெளியேறினான்.

நிமிடங்கள் பறந்தன; எப்போது வகுப்பாசிரியரின் வகுப்பு முடியும் என்ற துடிப்புடன் கால்கடுக்க நின்றிருந்தான் முகுந்தன். அவனது நல்லநேரமோ, கெட்ட நேரமோ தெரியாது அவனது தந்தையின் நண்பரும், அதே கல்லூரியில் கற்பிக்கும் பிறிதொரு ஆசிரியர் அவனது வகுப்பு வழியே வந்தார்.

தனது அருமை நண்பரின் மகன் வகுப்பிற்கு வெளியே நிற்பதைப்பார்த்து, நிலைமையை ஊகித்தபடி, “என்ன முகுந்தன், வெளியில் நிற்கிறீர்? வகுப்பில் படிக்கவில்லையா?” என்று கேட்டு வைத்தார்.

முகுந்தன் கூறிய பதில் இதுதான்!

“வகுப்பிலே உள்ள எல்லாப் பையன்களும் குழப்படி செய்கிறார்கள்; நானும் அவங்களோட சேர்ந்தால் குழப்படி செய்து கெட்டுப் போய் விடுவேனென்று கிளாஸ் ரீச்சர் என்னைப் பிடித்து வெளியில் விட்டுவிட்டார்” என்றானே பார்க்கலாம்!

விடயமறிந்த முகுந்தனின் தந்தையின் நண்பர் அவனது தோளில் செல்லமாகத் தட்டிவிட்டுத் தனது தலையைச் சொறிந்தபடி, தலைவிதியை நொந்தபடி தனது வகுப்பறைக்கு நடையைக் கட்டினார்!

## சிறுவர் கதைகள் -04

### “அதிரடிச்சிறுவன்”

பாலசுந்தரம் தம்பதிகளின் ஒரே மகன் விநோதன் படுசுட்டி; ஐந்து வயதுதான். வயதுக்கு மீறிய குறும்பு.

ஒருநாள் இருபத்தைந்து சத நாணயமொன்றை (இப்போது அதற்கு எதுவித பெறுமதியுமில்லை என்பது வேறுவிடயம்) வைத்து விளையாடிக் கொண்டிருந்தபோது தனது இடது

காதினுள் செருகிவிட்டு 'குய்யோ, முறையோ' எனக் கதறி அழுதான்.

பெற்றோரும் பதறித்துடித்து அந்த நாணயத்தை வெளியே எடுக்க முயற்சி செய்தார்கள். முயற்சிகள் பலனடிக்காத படியால் பையனை அவசர அவசரமாக அருகிலிருந்த வைத்தியரிடம் அழைத்துச் சென்றார்கள்.

பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர் நாணயக்குத்தி இடது காதினுள் இருந்து வெளியே எடுக்கப்பட்டது.

நாணயக் குத்தியை வெளியிலெடுத்த வைத்தியர் விநோதனைப் பார்த்து, அன்புடன், "எப்படியடா இந்தக் காசு காதுக்குள் போனது?" என்று கேட்டார்.

வைத்தியரிடமிருந்து நாணயத்தைப் பறித்த விநோதன் அந்தக் குத்தியை வலது காதினுள் இறுகச் செருகிவிட்டு, "இப்படித்தான்!" என்றானே பார்க்கலாம்!

பெற்றோர்,வைத்தியர் செய்வதறியாது திகைத்து நின்றனர்!

## சிறுவர் கதைகள் - 05

### "ஏன் படிக்கவேண்டும்?"

தனது பன்னிரண்டு வயது பையனிடம் தந்தை சொன்னார்:

"விளையாடுவதைக் குறைத்துக் கொண்டு நல்லாய் படி தம்பி!"

பையன் : ஏனப்பா விழுந்து, விழுந்து படிக்கவேணும்?

அப்பா: நல்லாய்ப்படித்தால் தான் டாக்டர், என்ஜினியர், லோயர், அக்கௌண்டன், பேங்கர் என்று வந்து நல்லதொழில் செய்யலாம்.

பையன் : ஏன் தொழில் செய்ய வேண்டும்?

அப்பா : நல்ல தொழில் செய்தால்தான் காசு, பணம் கிடைக்கும்!

அப்போதான் கார், வீடு வாங்கி சொகுசாக வாழலாம்!

பையன் : காசு, பணம், கார்,வீடு எல்லாம் எதற்கு அப்பா?

அப்பா: அவையெல்லாம் இருந்தால் தான் உனக்கு கல்யாணம் நடக்கும்.

பையன் : அப்ப, இப்ப எனக்கு கல்யாணம் செய்துவை!

அப்பா : ????

## சிறுவர் கதைகள் - 06

### "சிறுவன் வரைந்த ஓவியம்"

அந்தப் பாடசாலையின் நான்காவது வகுப்பு அறை.

ஓவிய ஆசிரியை பாடம் நடாத்திக் கொண்டிருந்தார். அவரது பாடம் முடியும் நேரத்தில் பிள்ளைகளைப் பார்த்து, "பிள்ளைகளே நாளைக்கு நீங்கள் வகுப்புக்கு வரும் போது ஒருமாடு புல் மேய்ந்து கொண்டிருப்பது போல் வரைந்து கொண்டு வரவேண்டும்; இது உங்களுக்கு இன்றைய ஹோம் வேர்க்" என்று கூறி தனது வகுப்பை முடித்துக் கொண்டு வெளியேறினார்.

அடுத்த நாள் வகுப்பில் அந்த ஓவிய ஆசிரியை தாம் நேற்றுக் கொடுத்த வீட்டுவேலையை கொண்டுவந்து காட்டும்படி அனைத்து மாணவர்களையும் வேண்டினார். ஒவ்வொருவராகச் சென்று தாம் வரைந்த மாடு புல் மேயும் காட்சியினைக் காட்டினார்கள். '

கடைசியாகச் சென்ற 'ஹோம் வேர்க்' செய்யாத குறும்புக்கார மாணவன் ஆசிரியைக்கு வெறும் தாளைக் காட்டினான்.

கோபம் கொண்ட ஆசிரியை, "மாடு எங்கே, கீறவில்லையா?" என்று கேட்டார்.

மாணவன் : மாடு புல்லை மேய்ந்து விட்டு வீட்டிற்குப் போய் விட்டது!

ஆசிரியை : அப்போ புல்லு எங்கே?

மாணவன் : அதைத்தான் மாடு மேய்ந்து விட்டதே!

ஆசிரியை விக்கித்து நின்றார்!

## சிறுவர் கதைகள் - 07

### "புத்திசாலிப்பையன்"

ஆசிரியர் : (ஒரு மாணவனை நோக்கி) நான் திங்கட்கிழமை உனக்கு இரண்டு முயல்கள் தந்தேன். செவ்வாய்க்கிழமை மீண்டும் உனக்கு மூன்று முயல்கள் தந்தேன். இப்பொழுது உன்னிடம் எத்தனை முயல்கள் இருக்கின்றன?

புத்திசாலிப்பையன் : ஆறு!

ஆசிரியர் : என்னடா இது? இந்தச் சுலபமான கேள்விக்குக் கூட சரியாகப் பதில் சொல்லவில்லையே! வெட்கக்கேடு! ஐந்துதான் சரியான பதில்.

புத்திசாலிப்பையன் : என்னிடம் தான் ஏற்கனவே ஒரு முயல் இருந்ததுவே! அப்போ ஆறுதானே சரியான பதில்!

## சிறுவர் கதைகள் - 08

### "எப்படித் தெரியும்?"

ஒரு எட்டு வயதுப்பையன் ஒரு சோடாப் போத்தலை உடைக்க முயற்சித்தான்.

அம்மா: நீ சின்னப் பையன் அதை உன்னால் உடைக்க முடி யாது.

பையன்: நான் எட்டு வயது பையன் என்று இந்த சோடாப் போத்தலுக்கு எப்படித் தெரியும்?

அம்மா : ????

# பகுதி - III

# உண்மைக் கதைகள்



# பொருளடக்கம்


1. கலைவாணரின் சமயோசிதம் 89
2. ஜேர்மனி நாய் 90
3. நாய்களை வளர்த்தால்..... 91
4. எமது மொழி படும்பாடு 92
5. எனது மாமாவின் பயணக்கதை! 93
6. நட்பை முறித்தால்.... 94
7. ஏன், அடி வாங்கவா?...... 95

# உண்மைக்கதைகள் -01

## "கலைவாணரின் சமயோசிதம்"

கலைவாணர் என்.எஸ்.கே. சிறந்த நடிகர் மட்டுமல்ல; சமயோசித புத்திசாலியும் கூட. உதாரணத்திற்கு ஒரு சுவை யான உண்மைச் சம்பவம்:

ஒருமுறை ஒரு சிறிய கிராமத்தில் ஓலைக் கூரை போட்ட நாடகக் கொட்டகையில் 'மகாபாரதம்' நாடகம் விடிய,விடிய நடைபெற்றது. மக்கள் மணற்தரையில் இருந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த பிரமாண்டமான நாடகத்தில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுக்கு விதூஷகன் பாத்திரம். துரியோ தனின் ஆதரவாளரான சகுனிமாமாவின் மோசடிச் சூழ்ச்சியால் பாண்டவர் ஐவரும் அனைத்துமிழந்து திரௌபதை ஆகியோருடன் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியிருக்கும் துன்பக்காட்சி. ஊர் நாயொன்று குரைத்தபடி மேடையில் ஏறிவிட்டது. நிலத்திலிருந்து நாடகம் பார்த்த மக்கள் கூட்டம் விசிலடித்து கூக்குரலிட்டது. பாண்டவர்களாக நடித்தவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றார்கள். மேடையிலிருந்த ஓரிரு நடிகர்கள் சிரிக்கவும் செய்தார்கள்.


நகைச்சுவைப் பாத்திரமேற்று விதூஷனாக நடித்த என்.எஸ்.கே. மாத்திரம் அசையவில்லை. "மன்னாதி மன்னர் களே, ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; இந்த நாயை இங்கே அனுப்பிவைத்ததும் எமது எதிரி சகுனி மாமாவின் சூழ்ச்சியாக இருக்கலாம்; இதோ இந்த நாயை அடித்து துரத்திவிட்டு வருகிறேன்" என்று சமயோசிதமாகக் கூறி நாயை அடித்து துரத்திவிட்டு மீண்டும் மேடைக்கு திரும்பி வந்தார்.

அதன் பின்னரே நாடக சபா உரிமையாளர்களும் பாண்டவராக நடித்தவர்களும் திரௌபதை உட்பட அனை

வரும் அமைதியடைந்தார்கள். கூக்குரலிட்டு விசிலடித்த சனக்கூட்டமும் கலைவாணரின் சமயோசித நடவடிக்கையைப் புரிந்து கொண்டு மெச்சி, கைதட்டியது!

## உண்மைக்கதைகள் -02

### "ஜேர்மனி நாய்"



எனது தம்பி பூபதி பாலவடிவேற்கரன் ஜேர்மனி நாட்டிற்குச் சென்ற புதிது. தனது நண்பர்கள் மூவருடன் தெருவில் சென்று கொண்டிருந்தார். திடீரென தம்பி பூபதியின் நண்பர் ஒருவருக்கு நாயொன்று கடித்துவிட்டது. கடித்த நாய் விசர் நாயோ, நல்ல நாயோ என்று தெரியாத நிலையில், விசர் நாய் கடித்தால் விசர் பிடிக்கும் என்ற பயத்தில் மொழி தெரியாத புதிய நகரில் வைத்தியர் ஒருவரைத் தேடித் திரிந்தார்கள். சிலமணி நேரத்தின் பின்னர் ஒரு வைத்தியரைக் கண்டு பிடித்தார்கள். அவரிடமும் பிரச்சனைதான்! அந்த டாக்டருக்கோ ஜேர்மனி மொழியைத் தவிர வேறு மொழி எதுவும் தெரியாது. எம்மவருக்கோ தமிழ், ஆங்கிலம் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது. கடிபட்டவரின் காயத்தை வைத்தியருக்குக் காட்டியபோது அவருக்கு விளங்கியதோ இல்லையோ அவர் தனது அலுமாரிகளில் அடுக்கி வைத்திருந்த நூல்கள் பலவற்றை நண்பர்களுக்குக் காட்டினார். ஏதேதோ கூறினார். நண்பர்கள் அலுமாரிக்கு அருகில் சென்று நூல்களைப் பார்த்தார்கள். அத்தனையும் 'டொச்' மொழியில் உள்ள நூல்கள். நண்பர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.

நாயால் கடிபட்டவனோ வலியால் துடித்தான். இறுதியாக தம்பி பூபதி தனது கைகளைப்பாவித்து நான்கு கால்களில் நிற்பது போல் நின்று ஒரு கையை வால்போல் ஆட்டி நாய் போல் குரைத்து டாக்டரின் கால்களைப் பதம்பார்ப்பது போல் கடித்துக் காட்டினார்.

டாக்டர் மிகுந்த வேதனையுடன் தனது தலையில் அடித்து ஊசி போட்டு தனது கட்டணத்தையும் பெற்றுக் கொண்டார். நண்பர்கள் கை கொடுத்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

நான்கைந்து ஆண்டுகள் கடந்த பின்னர் தான் நண்பர் களுக்கு ஒரு விடயம் புரிந்தது. ஜேர்மனியில் ஒருவரால் வளர்க்கப்படும் நாய் தெருவில் யாராவது ஒருவரைக் கடித் தால் இலட்சக்கணக்கில் நஷ்டஈடு கோரலாம் என்பது.

ஜேர்மன் டாக்டர் காட்டிய அத்தனை நூல்களும் சட்ட நூல்கள் என்பதும், நஷ்டஈடு கோரலாம் என்பதும் தான்.

இப்போது நண்பர்கள் ஜேர்மன் தெருக்களில் கடிக்கும் நாய்களைத் தேடித்திரிகிறார்களாம்!

நன்றி ; தாயகஒலி - 10- பங்குனி - சித்திரை -2014

## உண்மைக்கதைகள் -03

### “நாய்களை வளர்த்தால்.....”

அந்த நகரத்தின் பிரபல வங்கி ஒன்றினுள் மிக முக்கியமான வாடிக்கையாளர் ஒருவர் மிகுந்த கோபத்துடன் நுழைந்தார்.

“எனது மூத்த மகன் இலண்டனிலிருந்து பெரிய தொகை ஒன்றினையும், இரண்டாவது மகன் ஜேர்மனியிலிருந்து பெரிய தொகை ஒன்றினையும் இரண்டு வாரங்களுக்கு முன்பே எனது வங்கிக் கணக்கிற்கு அனுப்பியுள்ளதாக அறிவித்திருந் தார்கள். ஆனால் நீங்கள் அவற்றிற்கான அறிவுறுத்தல்களை

எனக்கு முறையாக அனுப்பவில்லை" என்று மிகுந்த ஆத்திரத்துடன் முகாமையாளரிடம் முறையிட்டார்.

கம்பியூட்டரைத் தட்டிப்பார்த்த முகாமையாளர் வாடிக்கையாளர் குறிப்பிட்ட தொகைகள் ஏற்கனவே அவரது வங்கிக் கணக்கிற்கு வந்திருப்பதையும், தவறு தங்கள் மேற்தான் என்பதையும் புரிந்துகொண்டார்.

எனினும் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல், "ஐயா, நீங்கள் உங்கள் வீட்டில் நாய் வளர்க்கிறீர்களா?" என்று அமைதியாகக் கேட்டார்.

வாடிக்கையாளருக்கு கோபம் தலைக்கேறியது. "ஓம்; இரண்டு பெரிய நாய்களை வளர்க்கிறேன்! உமக்கென்ன அதற்கு?" என்று அதட்டும் குரலில் கேட்டார்.

அனுபவம் மிக்க முகாமையாளர் மிகவும் சாதுவாக, "இப்போது எனக்கு ஏன் உமது வீட்டிற்கு தபால்காரன் வர வில்லை என்று தெரிகிறது. உமது இரண்டு பெரிய நாய்களுக்குப் பயந்து தான் அவன் உமது பணவரவு அறிவுறுத்தல்களைக் கொண்டுவரவில்லை" என்றார்.

கோபத்துடனிருந்த வாடிக்கையாளர் முகாமையாளரின் சமயோசிதமான பதிலைக் கேட்டு மனதிற்குள் அவரை மெச்சிக்கொண்டு தனக்குரிய பணத்தை எடுக்க கவுண்டரை நோக்கிப் போனார்!

## உண்மைக்கதைகள் -04

### "எமது மொழி பரும்பாரு"

அவன் செல்வந்த வீட்டுத் தனிப்பிள்ளை; தாய்மொழி தமிழே! ஆனாலும் ஆங்கிலத் தனியார் கல்லூரியில் கல்வி கற்பதால் ஆங்கிலம் தான் சரளமாகப் பேசவரும்; தமது தாய்மொழியாம் தமிழ் மொழி அப்படி; இப்படித்தான்! அவனது வீட்டில் ஒரு நாயை செல்லப்பிராணியாக வளர்த்தார்கள்.

ஒருமுறை அவன் தனது தாயார் தங்களது செல்லநாய்க்கு உணவு பரிமாறுவது பற்றி பின்வருமாறு கூறினான்:

“எங்க மம்மி அவருக்கு இறைச்சி, மீன் எல்லாம் சமச்சு வைக்கிறது; அவர் சாப்பிடுகிறார் இல்லை!”

எப்படி இருக்கிறது எமது மொழி படும்பாடு!

## உண்மைக்கதைகள் -05

### “எனது மாமாவின் பயணக்கதை!”

ஒருமுறை எனது மாமா ஒருவர் முதற் தடவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு வந்திருந்தார் கதிர் காமம் செல்வதற்காக. அவருக்கு சிங்களமொழி துப்பரவாகத் தெரியாது.

கதிர்காமம் செல்வதற்குமுன் அவரை ‘சொப்பிங்’ செய்வ தற்காக பஸ்ஸில் புறக்கோட்டைக்கு அழைத்துச் சென்றேன். சாமான்கள் வாங்கி முடிந்தாயிற்று. மீண்டும் எமது இருப்பிடத்திற்கு வெள்ளவத்தைக்கு பஸ்ஸில் திரும்பினோம். வெள்ளவத்தை பஸ்தரிப்பிடம் வந்தவுடன், “மாமா, இறங்கவேண்டும்” என்றேன். மாமாவும் தமது இருக்கையிலிருந்து எழுந்தார்.

பஸ் கண்டக்டர் அவரைப்பார்த்து, “பஹிணவத?” என்று தனது மொழியில் கேட்டார்.

எனது மாமாவும் அவசர அவசரமாக “ஓம்! ஓம்!!” என்று கூறிக் கொண்டே இறங்கினார்.

எனக்கோ ஆச்சிரியம் தாங்க முடியவில்லை!

“மாமா, உங்களுக்குத் தான் சிங்களம் தெரியாதே! பஸ்கண்டக்டர் கேட்டதற்கு “ஓம்,ஓம்” என்றீர்களே! எப்படி?” என்று கேட்டேன்.

சற்றும் அலட்டிக் கொள்ளாத மாமா, "கண்டக்டர் 'பயணமோ' என்று கேட்டார்; நான் ஓம், ஓம் என்றேன். அவ்வளவுதான்!" என்றாரே பார்க்கலாம்!

இரண்டு மொழிகளும் தெரிந்த நான் விக்கித்து நின்றேன்!

## உண்மைக்கதைகள் - 06

### "நட்பை முறித்தால்...."

மூர்த்தி, இரவி இரண்டு இணை பிரியா நண்பர்கள்; இளைஞர்கள்; ஒரே அறையில் வசித்து வந்தார்கள். இருவரும் நல்ல வேலையில் இருந்தார்கள். எங்கே சென்றாலும் ஒன்றாகவே செல்வார்கள். ஒன்றாகவே உணவருந்துவார்கள்; படம் பார்ப்பார்கள். ஒரே விதமான ஆடை வாங்கி அணிவார்கள். இத்யாதி; இத்யாதி!

ஆனால் துரதிஷ்டவசமாக ஒருநாள் மூர்த்தி ஒரு புதுப்படம் திரையிடப்பட்ட போது வேறுசில நண்பர்களுடன் படம் பார்க்கப் போய்விட்டார். இரவிக்கு கூறவுமில்லை. இதனை எப்படியோ அறிந்து கொண்ட இரவி மிகுந்த வேதனையும், கோபமும் அடைந்தார்.

அன்றிரவு அறைக்கு வந்த இரவி மூர்த்தியுடன் ஒன்றும் பேசாமல் தனியே உணவருந்தப்புறப்பட்டார். பின்னால் துரத்தி ஓடிவந்த மூர்த்தி, இரவியின் கைகளைப்பிடித்து மன்னிப்புக் கேட்டார். இரவி மூர்த்தியின் கைகளை உதறிவிட்டு தனியே உணவருந்தினார். இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசாமல் உறங்கச் சென்றனர்.

நாட்கள் நகர்ந்தன. இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளவில்லை. இருவருக்கும் மனதிற்குள் கவலைதான். மூர்த்திக்கு 'நண்பனை விட்டு விட்டு படம் பார்க்கப்போனது

தவறு' என்ற எண்ணம் தலைதூக்கியது. 'ஒரு படம் பார்த்ததற்கு வீணாகக் கோபித்துக் கொண்டோமோ' என்று இரவி நினைக்கத் தொடங்கினார். அதேவேளை இரண்டு பேரினதும் நெருங்கிய நண்பர்கள் இருவரையும் சேர்த்து வைக்கும் முயற்சியிலீடுபட்டார்கள்.

மூன்று வாரங்களின் பின்னர் இருவரும் சிறிது, சிறிதாகக் கதைக்கத் தொடங்கினார்கள். காலப்போக்கில் மீண்டும் நெருங்கிய நண்பர்களானார்கள்.

நாட்கள் கடந்து, வாரங்களாகி, மாதம் இரண்டு கடந்த பின்னர், இரவி கேட்டார், "மூர்த்தி, அன்று என்னை விட்டு விட்டு படம் பார்க்கச் சென்றாயே, படம் எப்படி?" என்று கேட்டார்.

மூர்த்தி சொன்னார், "அதை ஏன் கேட்கிறாய்? படத்தை எங்கே பார்த்தேன்? மேலே சுழன்று கொண்டிருந்த பழைய கறள் பிடித்த விசிறி எப்போது கழன்று என் தலை மேல் விழும் என்றல்லவா பார்த்துக் கொண்டிருந்தேன்! எல்லாம் உன்னை விட்டு விட்டுப் போனதால் வந்த வினை!" என்றாரே பார்க்கலாம்!

இரவி தனது அருமை நண்பனின் சாமர்த்தியமான பதிலால் விக்கித்து நின்றார்!

## உண்மைக்கதைகள் - 07

### "ஏன், அடிவாங்கவா?......"

மருதானையில் படம் ஒன்றை இரண்டாவது 'ஷோ' பார்த்து விட்டு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் வெள்ள வத்தை செல்வதற்காக நின்று கொண்டிருந்தேன். நேரம் நள்ளிரவு பன்னிரண்டு மணி.

எனக்கு அருகே 'டிப்டொப்பாக' உடைஉடுத்தி கையில் விலை உயர்ந்த கடிகாரத்துடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

அப்போது ஒரு சூட்கேசுடன் ஒருவர் அவசர அவசரமாக ஓடிவந்தார். அவர் போகுமிடத்திற்கு கடைசி பஸ் பிடிக்கும் அவசரம் போலும்! என்னருகே நின்றிருந்த 'ரிப்டொப்' ஆசாமியிடம் 'கொன்னை' தட்ட "நே..நே..ரம் எ..ன்....ன?" என்று கேட்டார். 'ரிப்டொப்' ஆசாமி ஒன்றும் பேசவில்லை! இரண்டு, மூன்று தடவை கேட்டுவிட்டு தாறுமாறாகக் கொன்னை தட்ட தூசணத்திலும் பேசிவிட்டு தனது கடைசி பஸ்ஸை பிடிக்கும் அவசரத்தில் ஓட்டமும் நடையுமாக ஓடிவிட்டார்.

அப்போது என்னிடம் கடிகாரம் இருக்கவில்லை; இருந்தி ருந்தால் அந்த அவசரக்காரருக்கு உதவி செய்திருப்பேன்.


இப்போது எனது முறை! 'ரிப்டொப்' ஆசாமியிடம், "ஐயா, உங்களிடம்தான் கடிகாரம் இருக்கிறதே! அந்த ஆளுக்கு நேரத்தைச் சொல்லியிருக்கலாமே!" என்று கேட்டு வைத்தேன்.

அவரது பதில் என்னை உறையவைத்தது!

"ஏ...ஏ...ன்? எ...ன...க்...கு அ...டி....வேண்டித்தரவா?" என்று 'கொன்னையில்' பதில் சொன்னார் கைக்கடிகார ஆசாமி!

# பகுதி - IV

# கணவன் மனைவி கதைகள்



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மனையாளும் முள்ளும் | 99 |
| 2. | காலாவதியாவது எப்போது?" | 100 |
| 3. | சந்தேகம் என்னும் ஒரு சரக்கு.... | 100 |
| 4. | கணவன் மனைவி தத்துவம் | 102 |
| 5. | வெள்ளிவிழா | 102 |
| 6. | எங்கே போய்த் தொலைந்தாய் அப்போது? | 103 |
| 7. | சோற்றுக்குள் கல்லு | 105 |
| 8. | நேர்த்திக்கடன் | 105 |
| 9. | மன்னிப்புக் கேட்டாலும் விடமாட்டேன்! | 105 |
| 10. | தொலைந்து போ! | 106 |
| 11. | அட்டகாசமான கணவர் | 108 |

# கணவன் மனைவி கதைகள் - 01

## "மனையாளும் முள்ளும்"

புதிதாகத் திருமணமான தம்பதிகள் நாட்கோயிலுக்குச் செல்வதற்குப் புறப்பட்டார்கள். கோயிலுக்குச் செல்லும் வழியில் சிறிய காடொன்று குறுக்கிட்டது. அப்போது புது மனைவியின் காலில் முள்ளொன்று தைத்துவிட்டது. கணவனுக்கு வந்ததே கோபம்! அப்படிக் கோபம்; குத்திய முள்ளை எடுத்தெறிந்துவிட்டு சரமாரியாக முள்ளைத் திட்டத் தொடங்கினான்.

"சனியனே, மூதேவி! என் மனைவி இந்த வழியில் வருவது உனக்குத் தெரியாதா? அவள் வரும் வழியில் நீ ஏன் கிடந்தாய்? அவளது அழகிய திருப்பாதத்தில் ஏன் குத்தினாய்? கொஞ்ச இரத்தமல்லவா வந்துவிட்டது! பிசாசே! இன்னுமொருமுறை இப்படிச் செய்தாய், தொலைத்து விடுவேன்; தொலைத்து! குரங்கே, அறுப்பானே! கவனமாயிரு" என்றெல்லாம் திட்டித் தொலைத்தான். மனைவிக்கு வலு சந்தோசம்; தன் கணவனுக்கு தன்மேல் எவ்வளவு பாசமென்று எண்ணி மகிழ்ந்தாள்! மகிழ்ச்சிப் பெருக்கில் கண்கள் கூட கலங்கின.

வருடமொன்று கடந்தது. அதே கணவனும், மனைவியும் அதே கோயிலுக்கு, அதே காட்டு வழியில் செல்ல நேர்ந்தது. முள்ளொன்று மனைவியின் காலைப் பதம்பார்த்தது. மனைவி வேதனையால் சிணுங்கினாள். தொடங்கினானே கணவன் மனைவியைத் திட்ட, "சனியனே, மூதேவி, பார்த்து வரத்தெரியாதா? முள்ளுக்குள்ளே கொண்டுபோய்த் தரித்திரக் காலை வைத்தாயே பிசாசு, உன்னைக் கட்டிக்கொண்டு அழவேண்டிக் கிடக்குதே! எல்லாம் என் தலையெழுத்து!"

பாவம் மனைவி இப்போதும் கண் கலங்கினாள்!

நன்றி : 'தாயக ஒலி' - 7

# கணவன் மனைவி கதைகள் - 02

## "காலாவதியாவது எப்போது?"

புதிதாகத் திருமணம் முடிந்த புதுமாப்பிள்ளை தனது திருமண சான்றிதழை அந்தப்பக்கமாகவும், இந்தப் பக்க மாகவும் புரட்டோ, புரட்டென்று புரட்டிப்புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இதை நீண்ட நேரமாக அவதானித்த அவரது புது மனைவி, "என்னங்க இது? நானும் காலையிலிருந்து பார்க்கிறேன்; எங்கடை திருமண சேர்ட்டிபிக்கேட்டை திருப்பித் திருப்பிப் பார்க்கிறீங்க! என்னப்பா விசயம்?" என்று கேட்டார்.

அதற்கு அவரது கணவர் சாவகாசமாக, "ஒன்றுமில்லை, இந்த சேர்டுபிக்கேட் காலாவதியாகும் திகதியைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றாரே பார்க்கலாம்.

புதுமனைவி விக்கித்து நின்றார்!

# கணவன் மனைவி கதைகள் - 03

## "சந்தேகம் என்னும் ஒரு சரக்கு...."

அந்த இருபத்தேழு வயது நிரம்பிய மனைவிக்கு தனது கணவன் மேல் ஒரே சந்தேகம். குறிப்பாக அவன் வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருப்பானோ என்ற சந்தேகம்.

தினமும் அவனது கைத்தொலைபேசியை எடுத்து அவன் அழைத்திருந்த தொலைபேசி எண்களையும், அவனுக்கு வந்திருந்த தொலைபேசி எண்களையும் அவதானித்து யார் அது எனக் கேட்டு சண்டைபிடிப்பாள். கணவன்

அலுவலகத்திற்குச் சென்ற பின் அவனது அலுவலகத்திற்கு அடிக்கடி 'கோல்' எடுத்து அவன் தனது இருக்கையில் தான் இருக்கிறானா அல்லது வேறு பெண்கள் யாருடனாவது போய்விட்டானா என்று கவனிப்பாள். போதாதற்கு அவனுடன் வேலை செய்பவர்களிடமும் அவனது நடவடிக்கைகள் பற்றி அடிக்கடி விசாரித்துக் கொள்வாள்.

கணவன் அலுவலகத்திலிருந்து வந்ததும் அவனது சட்டை, காற்சட்டை 'பொக்கற்' எல்லாம் ஆராய்வாள். யாராவது பெண்களுக்கு ஏதாவது பொருட்கள் வாங்கிக் கொடுத்த 'பில்' ஏதாவது இருக்கிறதா என ஆராய்வாள். சும்மா, சும்மா சண்டை பிடிப்பாள்.

கணவனோ அப்பாவி; இவளது இத்தனை இம்சைகளையும் அமைதியுடன் பொறுத்துக் கொள்ளுவான். அவன் பொறுமை சாதிக்க, சாதிக்க "இவர் கள்ளம் செய்துவிட்டு சாது போல் இருக்கிறார்" என்று அவள் எண்ணி மேலும், மேலும் சந்தேகப்படத் தொடங்கினாள்.

அவளது சந்தேகம் வர,வர உச்சக்கட்டத்தை அடையத் தொடங்கியது. அவன் அலுவலகம் சென்று வந்த பின் அவனது சட்டையைப் பார்த்து ஒரு முடி இருந்தால் கூட "நீங்கள் நீளத் தலைமயிர் உள்ள பெண்ணொருத்தியுடன் எங்கோ போய் வந்திருக்கிறீர்கள்" என்றும், "கட்டைத் தலைமயிர் உடைய பெண்ணுடன் சுற்றித்திருந்திருக்கிறீர்கள்" என்றும், "சுருட்டைத் தலைமயிர் உடைய பெண்ணுடன் படம் பார்க்கப் போயிருக்கிறீர்கள்" என்றும் சண்டை பிடிக்கத்தொடங்கினாள்.

அப்படித்தான் ஒருநாள். அவன் அலுவலகம் போய்த் திரும்பி வந்திருந்தான். தானே சட்டையைக் கழட்டி அணுவணுவாக ஆராயத்தொடங்கினாள். ஒரு தடயமும்

கிடைக்கவில்லை. அவன் தவறு செய்தால் தானே தடயம் கிடைப்பதற்கு?

அவள் பாவியோ ராட்சசியானாள்! "இன்று நீங்கள் ஒரு மொட்டைத் தலைக்காரியுடன் எங்கோ போய்வந்திருக்கி நீர்கள்! ஒரு முடியைக் கூட காணவில்லை" என்று கூறி கதறி அழத்தொடங்கினாள்!

## கணவன் மனைவி கதைகள் - 04

### "கணவன் மனைவி தத்துவம்"

திருமணமான பின்னர் முதலாவது வருடம் பூராவும் கண வன் சொன்னவற்றை மனைவி ஒழுங்காகக் கேட்பாள்; இரசித்து செயற்படுவார்.

இரண்டாம் வருடம் மனைவி சொன்னவற்றை கணவர் கேட்பார்; இரசிப்பார்!

மூன்றாம் வருடம் கணவன், மனைவி இருவரும் கதைப் பதை, சண்டைப் பிடிப்பதை அக்கம் பக்கத்தவர் கேட்பார்கள்; இரசிப்பார்கள்!

## கணவன் மனைவி கதைகள் - 05

### "வெள்ளிவிழா"

பரந்தமானுக்குத் திருமணமாகி 25 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. அந்த வெள்ளிவிழா நிகழ்ச்சியை விமர்சையாகக் கொண்டாட அவரது மூன்று பிள்ளைகளும் தீர்மானித்தார்கள். பரந்தாமன் முதலில் மறுப்புத் தெரிவித்தாலும் மனைவி கமலா, மக்களின் நச்சரிப்புத் தாங்காமல் ஒத்துக்கொண்டார்.

அந்த நாளும் விடிந்தது. அதிகாலையிலிருந்து வீட்டு அலங்காரம், மேளதாளம், சமையல், சாப்பாடு என வீடு

அல்லோலகல்லோலப்பட்டது. விருந்தினர்கள், உற்றார், உறவினர் வந்தபடி இருந்தார்கள். ஆனால் பரந்தாமனைக் காண வில்லை. இப்போது பிறிதொருவிதமான அல்லோல கல்லோலம்; வீடு முழுக்கப் பரந்தாமன் தேடப்பட்டார்.

பார்த்தால் வீட்டின் ஒதுக்குப்புறமான ஒரு சிறிய அறை யின் மூலையிலிருந்து பரந்தாமன் விக்கி விக்கி அழுது கொண்டிருந்தார். மனைவி, மக்கள், உறவினர் காரணம் புரியாது திகைத்து, "என்னவாயிற்று?" என்று வினாவினார்கள்.

கேவிக்கேவி அழுத பரந்தாமன் நீண்ட நேரத்தின்பின் காரணத்தை விளக்கினார். "இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நான் கமலாவைக் காதலித்தேன். சில பல காரணங் களினால் திருமணத்தை தள்ளிப்போட்டுக் கொண்டுவந்தேன். ஆனால், கமலாவின் தந்தை அப்போது ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர். என்னைச் சந்தித்து "டேய் பரந்தாமா, நீ என் மகள் கமலாவை திருமணம் செய்யாமல் ஏமாற்றப் பார்க்கிறாய்! உன்னைச் சுட்டுவிடுவேன்; அல்லது இருபத் தைந்து வருடங்கள் சிறைக்குள் தள்ளிவிடுவேன்" என மிரட்டினார். அதற்குப் பயந்து தான் கமலாவைத் திருமணம் செய்து கொண்டேன். அதற்குப் பதிலாக அப்போதே செத்தி ருக்கலாம்; அல்லது இருபத்தைந்து வருடம் சிறை வாசம் அனுபவித்திருக்கலாம். இப்போதாவது விடுதலையாகி வந்தி ருப்பேன். அதை எண்ணித்தான் அழுகிறேன்" என்றார் அந்த வெள்ளிவிழா நாயகர்!

## கணவன் மனைவி கதைகள் -06

### "எங்கே போய்த் தொலைந்தாய் அப்போது?"

புதிதாகத் திருமணம் செய்த சொர்ணலிங்கம் ஒருநாள் தனியே ஊருக்கு வெளியே ஒரு அலுவலாகச் சென்று கொண்டிருந்தான்.

திடீரென்று ஆகாயத்திலிருந்து அசரீரி வாக்கொன்று கேட்டது! “பெரிய பாறையொன்று உன் மீது விழுந்து, நீ சாகப்போகிறாய்; விலத்திக்கொள்” என்றது. அதன்படி அவன் பாதையிலிருந்து சற்று விலத்திக் கொண்டான். பெரிய பாறையொன்று மலைமீதிருந்து உருண்டு விழுந்தது. அவன் மயிரிழையில் தப்பினான்.

பிறிதொரு தடவை பெரிய நகரமொன்றில் ‘பிஸி’யான வீதியைக் கடக்க முயற்சித்தபோது, அதே அசரீரி கேட்டது! “ஒரு லாரி ஒன்று வெகுவேகமாக வந்து கொண்டிருக்கிறது; இப்போது றோட்டைக் கடக்காதே! அடிபட்டுச் சாவாய்!” என்றது. சொர்ணலிங்கமும் வீதியைக் கடப்பதைத் தவிர்த்தான்; உயிர்தப்பினான். பெரிய லாரி வெகுவேகமாக அவனைக் கடந்து சென்றது.

ஒருநாள் அவன் ஒரு பாலத்தைக் கடக்க நேர்ந்தது. கீழே காட்டாறு வெள்ளம் போல ஓடிக்கொண்டிருந்தது. மீண்டும் அதே அசரீரி! “ஏய்! கவனம்! பாலத்தை இப்போது கடவாதே! பாலம் உடைந்து நீ ஆற்றில் விழுந்து சாகப் போகிறாய்!” என்றது.சொர்ணலிங்கம் பாலத்தைக் கடக்கவில்லை. உயிர் தப்பினான்.

இந்த முறை அவன் வியப்பு மீதியால், “ஏய், நீ யார்? ஒவ்வொருமுறையும் என்னைக் காப்பாற்றுகிறாயே! நீ யார்?” என்று கூக்குரலிட்டான்.

உடனே அசரீரி சொன்னது! “நான் தான் கடவுள்!” என்றது. “ஒவ்வொரு முறையும் என்னைக் காப்பாற்றிய நீ ஏன் நான் திருமணம் செய்த போது காப்பாற்றவில்லை?” என்று அழுதான் சொர்ணலிங்கம்!

## கணவன் மனைவி கதைகள் - 07

### "சோற்றுக்குள் கல்லு"

கணவன் : என்னடி இது? சோற்றுக்குள் பெரிய, பெரிய கல்லாய் இருக்கிறதே! என்ன செய்யிறது?

மனைவி : பெரிய கல்லென்றால் தூக்கி எறிந்துவிட்டு சாப்பிடச் சுகந்தானே அத்தான்!

## கணவன் மனைவி கதைகள் - 08

### "நேர்த்திக்கடன்"

புதுமணத் தம்பதிகள் நாள்க்கோயிலுக்குச் சென்று கடவுள் தரிசனம் செய்து திரும்பிவந்து கொண்டிருந்தார்கள். பக்தி பூர்வமாக வணங்கி வீடு திரும்பிக் கொண்டிருந்த புது மனைவியைப் பார்த்து கணவன் கேட்டான், "கண்ணீர் மல்க மிகவும் பக்தியாகக் கும்பிட்டாயே? கடவுளிடம் அப்படி என்ன தான் கேட்டாய்?"

கண்கள் கலங்க மனைவி சொன்னாள், "அடுத்த ஜென்மத் திலும் நீங்கள் தான் எனக்கு கணவனாகக் கிடைக்க வேண்டும் என்று நேர்ந்து கொண்டேன்; அது சரி, கடவுளிடம் நீங்கள் என்ன கேட்டீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டாள்.

அவளின் கண்ணிறைந்த கணவன் கூலாகச் சொன்னான், "எனக்கு அடுத்த ஜென்மமே வேண்டாம் என நேர்ந்து கொண்டேன்!"

## கணவன் மனைவி கதைகள் - 09

### "மன்னிப்புக் கேட்டாலும் விடமாட்டேன்!"

கோயிற் திருவிழாவிற்கு புதுமணத்தம்பதிகளாகச் சென்றி ருந் தார்கள் சுந்தரம் - தேவி தம்பதியினர்.

சன நெரிசல்; ஒருவன் சுந்தரத்தின் செருப்பணியாத காலில் மிதித்து விட்டான். அவ்வளவாக வலிக்காவிட்டாலும் சுந்தரத்துக்கு வந்ததே கோபம்! காலில் மிதித்தவன் 'சாரி' சொன்னாலும் அழகியபுதுமனைவி அருகிலிருந்ததால் சுந்தரம் காலில் மிதித்தவனை தாறுமாறாகப் பேசத் தொடங்கினான். மனைவி தேவி, "சரி அப்பா விடுங்கள்! அவர் தெரியாமற்தானே செய்தார்; 'சாரி' கூடச் சொன்னாரே; விட்டுவிடுங்கள்" என்றாள். புது மனைவி சொன்னாளே என்று சுந்தரம் அத்துடன் பேசாமல் விட்டுவிட்டான்.

அவர்களின் திருவிழாப்பயணம் தொடர்ந்தது; மீண்டும் சன நெரிசலில் அகப்பட்டுக் கொண்டார்கள். மீண்டும் ஒருவன் சுந்தரத்தின் அதே காலில் தனது சப்பாத்துக்காலில் மிதித்து விட்டான். வலியோ வலி! "ஐயோ; அம்மா!" என்று கத்தியவன் மிதித்தவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுப் பேசாமலிருந்து விட்டான். மிதித்தவன் 'சாரி' சொல்லவுமில்லை.

மனைவி தேவிக்கு ஆச்சரியம்! முதலில் ஒருவன் மிதித்த போது 'குய்யோ, முறையோ' என்று கத்திக்கதறியவர் இப்போது ஒன்றும் பேசாமலிருக்கிறாரே, என்று யோசித்தவள் இம் முறை மிதித்தவனை நிமிர்ந்து பார்த்தாள். விசயம் விளங்கியது!

மிதித்தவன் ஆறடிக்கு மேல்; பெரிய கடாமீசை; ஆஜானு பவமானதோற்றம்; இரும்புச் சப்பாத்துவேறு அணிந்திருந்தான்.

சுந்தரம் கூச்சல் போடாததற்கு காரணத்தைப் புரிந்து கொண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்!

## கணவன் மனைவி கதைகள் - 10

### "தொலைந்து போ!"

ஒரு கணவனும், மனைவியும் ஒரு பூனையை வளர்த்தனர். அதுவும் சொற்பகாலமாக தம்பதியின் சொல்வழி கேட்டு வளர்ந்தது.

சிறிது காலத்தின் பூனை குழப்படி செய்யத் தொடங்கியது. படு சோம்பேறியாக மாறியது. வீட்டில் திரிந்த எலிகளைப் பிடிக்கவில்லை; துரத்தக்கூட இல்லை; கள்ளத்தனமாக சமய லறைக்குள் நுழைந்து உணவையும் களவாடத் தொடங்கியது.

ஆத்திரமடைந்த குடும்பத்தலைவி கணவனை அழைத்து, "இந்த கெட்ட பூனையை எங்காவது தூரதேசத்தில், அல்லது வனாந்தரத்தில் விட்டுவிட்டு வாருங்கள்!" என்று கட்டளையிட்டார்.

இல்லாளின் கட்டளையை சிரமேற்கொண்டு ஒருபையில் பூனையைப் போட்டுக் கொண்டு கணவர் பலதூரம் சென்றார். மலையைக் கடந்தார்; கடலைக் கடந்தார்; கடைவீதிகள், தெருக்கள், மாடமாளிகைகள், கோடகோபுரங்கள், சின்னஞ் சிறு குடிசைகள் என்று நடையோ நடை நடந்து களைப்புற்றார்.

அப்போது ஒரு சிறுபுதரைக் கண்டார். இந்தப் பொல்லாத பூனையை வீச இதுதான் தகுந்த இடம் என்று கருதி அப்புதருள் பூனையை வீசிவிட்டார். அதன் பின் தான் பெருத்த நிம்மதி அடைந்தார். பின்தான் அவருக்கு புரிந்தது தாம் வீட்டிலிருந்து நீண்ட தூரம் வந்துவிட்டோமென்பது. வழி தெரியாமல் தவித்தார். அலையோ அலை என்று அலைந்தார். புலம்போ, புலம்பென்று புலம்பித்தவித்தார்.

இறுதியாக ஒரு நகரை அடைந்தார். அங்கிருந்த தொலை பேசி நிலையத்துள் நுழைந்து வீட்டுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு விடுத்தார். அழைப்பினை மனைவிதான் எடுத்தார்.

"எணை நான் தானெணை! பூனையை ஒரு மாதிரி தொலைத்துவிட்டேன். மிக நீண்ட தூரம் வந்ததால் திரும்பிவர இடம் தெரியவில்லை" என்றார்.

தொலைபேசியில் மனைவி கூறினார், "எப்படியாவது வீட்டைத் தேடிப்பிடித்து வாருங்கள். நான் ஆவலுடன் காத்திருப்பேன்" என்று கூறித் தொலைபேசியை வைத்துவிட்டு, வீட்டில் ஒருவருமே இல்லாததால், "தொலைந்தது பூனை மட்டுமல்ல; நீரும் தான்!" என்று சந்தோசமாகக் கூக்குரலிட்டாள்!

## கணவன் மனைவி கதைகள் - 11

### "அட்டகாசமான கணவர்"

ஒரு கணவர் மனைவியை நையாண்டி செய்வதில்பேர் போனவர். ஒருநாள் அவர் மனைவி, "மெய்யேயப்பா, இன்றைக்கு நல்லநாள்; வெள்ளிக்கிழமை. கோயிலுக்குப் போவமா?" என்று கேட்டார்.

கணவரும், "அதற்கென்னப்பா, வெளிக்கிட்டு வாரும்; நல்ல சீலையை உடுமப்பா" என்றார்.


மனைவியும் தடபுட என்று குளித்து, அலங்கரித்து கணவர் கூறியபடியே அழகிய விலையுயர்ந்த சேலையும் அணிந்து கொண்டு கணவரிடத்தில் வந்து, "சரி அப்பா, நான் ரெடி, கோயிலுக்கு போவமே!"என்று கேட்டார்.

நாற்காலியில் அமர்ந்திருந்த அந்த பொல்லாத கணவர் நாற்காலியை ஒரு புறமாகத் தள்ளிவைத்துவிட்டு நடு வராலில் நின்றுகொண்டு மனைவியைப் பார்த்து, "என்னை மூன்றுதரம் சுற்றிக்கும்பிடு! எமது முன்னோர் கணவனே கண்கண்ட தெய்வம் என்று சொல்லியிருக்கினம்" என்று சொன்னாரே பார்க்கலாம்!

பாவம் மனைவி அழுதேவிட்டாள்!

பகுதி - V

# மிருகங்களின் கதைகள்



# பொருளடக்கம்


1. "முயலின் மூளை" 111

2. ஒரு கழுதையின் ஆசைக்கனவு 112

3. என்னை விட்டுவிட்டு..... 114

4. ஆயிரம் கால் சப்பாத்து 115

5. முடியுமா? 116

# மிருகங்களின் கதைகள் - 01

## "முயலின் மூளை"

ஒரு கஞ்சன் ஒரு அழகான முயலை வளர்த்து வந்தான். முயலுக்கு மிகவும் பிடித்தமான உணவு கரட் கிழங்கு என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்தானே! ஆனால் இந்த முயலின் உரிமையாளன் ஒருநாள் கூட முயலுக்கு ஒரு கரட்டையாவது கண்ணில் கூட காட்டவில்லை. மாறாக பழைய பாணும், கஞ்சியும் தான் கொடுப்பான். முயலுக்கோ ஒருநாளாவது ஒரு கரட் கிழங்கையாவது உண்ண வேண்டும் என்று கொள்ளை ஆசை! அதற்கான சந்தர்ப்பத்தையும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது.

ஒருநாள் அந்த கஞ்சப்பிரபு சற்றுக் கண்ணயர்ந்திருந்த வேளையில்தப்பிஓடி அண்மையில்இருந்தகடையொன்றுக்குச் சென்றது. கடையிலிருந்த முதலாளியைப்பார்த்து, "கரட் இருக்கிறதா?"என்று கேட்டது. முயலின் துரதிஷ்டம்! அது ஒரு இரும்பு பொருட்கள் விற்குமிடம். இரும்புக்கம்பிகள், சீமெந்து, மணல், கயிறு முதலியன விற்குமிடம். முதலாளி முயலைப் பரிதாபமாகப் பார்த்து "இங்கு கரட் இல்லை" என்று கூறினார். முயல் ஏமாற்றத்துடன் தனது இருப்பிடம் மீண்டது.

பிறிதொருநாள்; முயலுக்கு தப்பிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது; அதே கடை; முயலிடமிருந்து அதே கேள்வி; கடைக்காரனிடமிருந்து அதே பதில்; முயலுக்கோ ஏமாற்றம்!

இன்னுமொரு நாள். முயல் தப்பிச் சென்று கடைக் காரனிடம் கரட் கேட்டது. இந்தமுறை கடைக்காரனுக்கு வந்ததே கோபம்! மிகவும் கடுமையாக முயலை எச்சரித்தான். "சேட்டையா விடுகிறாய், அற்பமுயலே! அடுத்தமுறை கரட்

வேண்டும் என்று கேட்டு வந்தாயோ இதோ இங்கே இருக்கும் கயிற்றால் கட்டித்தூக்கி விட்டுவிடுவேன்; கவனம்!"என்றான். முயல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியது.

எனினும் கரட்டைச் சுவைக்கும் ஆசை விடவில்லை. தனது வீட்டிலிருந்து தப்பிக்கும் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்தது. அப்படி ஒருநாள் வந்தது. தப்பி ஓடிய முயல் கடை முதலாளியிடம் மிகவும் அன்பாக "முதலாளி, கயிறு இருக்கிறதா?" என்று கேட்டது.

முதலாளியும் முயல் கயிறு வாங்கத்தான் வந்துள்ளது என்றெண்ணி மிகவும் இரக்கத்துடன் "முயலாரே, கயிறு இப்போதுதான் விற்று முடிந்து விட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள்"என்றார்.

உடனே எமது முயலாரோ, "அப்போ, கரட் இருக்கா?" என்று கேட்டாரே பார்க்கலாம்! கடைமுதலாளிக்கு சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை!

## மிருகங்களின் கதைகள் -02

### "ஒரு கழுதையின் ஆசைக்கனவு"

ஒரு குடிகாரன் ஒரு கழுதையை வளர்த்து வந்தான். அந்த ஊரிலுள்ள அத்தனை குடிமக்களதும் அழுக்குத் துணிகளை அவன்தான் துவைப்பான். துணிகள் துவைப்பதற்கு உதவியாக, துணிகளை குளத்திற்கு எடுத்துச் செல்வது, துவைத்தபின் வீட்டிற்கு எடுத்து வந்து உலரவைப்பது அனைத்து வேலைகட்கும் அந்தக் கழுதை மிகவும் உதவியாக இருந்தது. என்றாலும் அந்தக் கஞ்சனோ அந்தக்

கழுதைக்கு சரியாக உணவு வைக்கமாட்டான். அடிக்கடி அடியும் போடுவான்.

அவனுக்கு ஒரு அழகான மகளொன்று இருந்தாள்; தாயில்லாப் பிள்ளை; கல்யாண வயது. அவன்பாவி குடித்துவிட்டு அவளுக்கும் அடிபோடுவதுண்டு!

இவனது கழுதை ஒருநாள் ஓய்வாக இருக்கும் போது வீட்டிலிருந்து வெளியேறி ஊரில் வீதியில் கட்டாக் காலிகளாகத் திரியும் ஏனைய கழுதைகளைச் சந்தித்தது. அவர்கள் அனைவரும் இந்தக் கழுதையின் நண்பர்கள். குடிகாரனின் கழுதை தனது துன்பம் அனைத்தையும் சொல்லி அழுதது. பொதிசுமப்பது, அடிவாங்குவது என்று அனைத்தையும் சொல்லி ஒப்பாரி வைத்தது.

அவனது நண்பர்கள் நீண்ட நேரம் யோசித்த பின்னர் தங்களது ஒருமித்த கருத்தை முன் வைத்தார்கள். "நீ அங்கிருந்து தப்பி ஓடிவந்து எங்களுடன் சேர்ந்துவிடு; ஊர், ஊராக வீதியெல்லாம் திரியலாம்; புல் மேயலாம்; சினிமா போஸ்ரர் உட்பட சுவரில் ஒட்டப்பட்ட பேப்பர் அனைத்தையும் உண்ணலாம். வா எங்களுடன்" என்றன.

குடிகாரனின் கழுதையும் சற்று யோசித்து விட்டு, "நல்ல யோசனைதான்! எனக்கும் விருப்பம் தான்! ஆனால் ஒரே ஒரு சின்னப் பிரச்சனை!" என்றது.

"என்ன பிரச்சனை?" ஏனைய கழுதைகள் ஒரே குரலில் கேட்டன. "எனது எஜமானுக்கு ஒரு அழகான மகளிருக்கு; அத்தனை சொத்துகளும் அவளுக்குத்தான். குடித்துவிட்டு தனது மகளை அடிக்கும் போது, 'உன்னை

இந்தக் கழுதைக்குத்தான் கல்யாணம் கட்டி வைப்பேன்' என்பான். நானும் அந்த நாளைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்"என்றது.

மற்றக் கழுதைகளுக்குப் புரிந்தது 'இவனைத் திருத்த முடியாது' என்று!

## மிருகங்களின் கதைகள் - 03

### "என்னை விட்டுவிடு....."

மூன்று ஆமைகள் வெளிநாடு ஒன்றில் ஒரு பெரிய விடுதியில் ஒரு அறை எடுத்து இருந்தன. முதல் ஆமை பெரிய வயது முதிர்ந்த ஆமை; மற்றது இடைவயதுடைய ஆமை; மூன்றாவதோ குட்டி சிறிய ஆமை. மிகவும் அமைதியான இன்பமான வாழ்க்கை. எனினும் என்ன வேலை என்றாலும் குட்டி ஆமையிடம் தான் மற்ற இரு ஆமைகளும் ஆணை பிறப்பிப்பதுண்டு! இது சின்னக் குட்டி ஆமைக்கு சற்று சங்கடமாக இருந்தபோதும் பொறுத்துக்கொண்டது! இருவர் களும் பெரியவர்களாயிற்றே! மூன்று ஆமைகளும் ஒருநாள் இரவு; நல்ல இரவு போசனம் அருந்திவிட்டு மூன்று பேரும் ஐஸ்கிறீம் சாப்பிட ஏகமனதாக விரும்பினார்கள். அவர்களது துரதிஷ்டம்! அவர்களது விடுதி லிப்ட் வேலை செய்யவில்லை! எனினும் ஐஸ்கிறீம் ஆசை விடவில்லை. 3வது மாடியாயிற்றே மெதுவாக, (ஆமைகள் தானே) ஒரு மாதிரி ஐஸ்கிறீம் கொடுக்குமிடத்தை வந்தடைந்து மூன்று ஐஸ்கிறீம் ஓடர் செய்தார்கள்.

சர்வர் சந்தோசத்துடன் ஓடரை எடுத்துக்கொண்டு போய்விட்டார். திடீரென அதிமூத்த ஆமை சத்தம் போட்டது!

"அறையைச் சாத்தினேனோ ஞாபகமில்லை, எடே சின்னப் பெடியா; ஒருக்கா ஓடிப் போய்ப் பார்த்துவிட்டுவா!" என்றது. மத்திய வயதுடைய ஆமையும் ஒத்துக்கொண்டு, "அப்பன், ஒருக்கா போய்விட்டு வாவேன்"என்றது.

சீற்றமும், சிணுக்கத்துடனும் குட்டி ஆமை 3வது மாடி அறையைப் பார்க்கப் புறப்பட்டது.

இந்த இடைவேளையில் சர்வர் மூன்று ஐஸ்கிறீமையும் கொண்டு வந்துவிட்டார். ஐஸ்கிறீமோ தமது வேலையை மெதுவாகத் தொடங்கியது. ஆமாம்! உருகத் தொடங்கியது. இதை அவதானித்த மூத்த ஆமை! "இவன் சின்ன குட்டி ஆமைதானே, லிப்டும் இல்லை, இவன் எப்போ போய் எப்போ வருவானோ, ஐஸ்கிறீமோ உருகுகிறது; நாம் ஐஸ்கிறீமைச் சாப்பிடுவோம்" என்றது. மத்திய வயதுடைய ஆமையும் ஒத்துக்கொண்டது.

இருவரும் தத்தமது ஐஸ்கிறீமைச் சுவைக்கத் தொடங்கினார்கள்.

ஐஸ்கிறீம் கடையின் கதவடியிலிருந்து ஒரு சத்தம் கேட்டது! "நீங்கள் இருவரும் ஐஸ்கிறீம் சாப்பிட்டீர்களானால் நான் அறைக்குப் போய் பூட்டியிருக்கோ, திறந்திருக்கோ என்று பார்க்க மாட்டேன்" மூன்றாவது குட்டி ஆமையின் குரல்! மூன்று ஐஸ்கிறீமும் உருகி வீணானது!

## மிருகங்களின் கதைகள் - 04

### "ஆயிரம் கால் சப்பாத்து"

ஒருவர் தனது செல்லப்பிராணியாக ஒரு ஆயிரங்கால் பூரானை வளர்த்து வந்தார். எங்குசென்றாலும் அதனை அழைத்துச் செல்வது அவரது வழக்கம். அவர் உறங்கும்

போது கூட அதனை அணைத்துக் கொண்டுதான் படுப்பார். அத்தனை அன்பு!

ஒருநாள் அவருக்கு ஒரு விருந்துக்கு அவசரமாகச் செல்லவேண்டியிருந்தது. எனினும் வழமை போல் தனது செல்லப்பிராணி பூரானையும் அழைத்துச் செல்லவேண்டும் தானே! உடனே பூரானை அழைத்து "சீக்கிரம் புறப்படு! ஒரு பெரிய பணக்கார கனவானின் இரவு விருந்துக்குச் செல்லவேண்டும்!" என்றார். பூரானோ, "என்னால் முடியாது; சீக்கிரம் புறப்பட, எனது ஆயிரம் காலுக்கும் ஆயிரம் சப்பாத்து அணிய எவ்வளவு நேரம் செல்லும், நீங்கள் போங்கள்" என்றதே பார்க்கலாம்!

அவர் செய்வதறியாது திகைத்தார்!

நன்றி : 'செங்கதிர்'- ஜனவரி - 2009

வீச்சு - 13


## முடியுமா?

1). நீங்கள் தும்மும் போது கண்களை மூடாமல் தும்ம முடியுமா?

2). ஒரு தீப்பெட்டியை நீங்கள் பிறிதொருவரிடமிருந்து வாங்கும் போது எப்போதாவது குலுக்கிப் பார்க்காமல் வாங்கியிருக்கிறீர்களா?

பகுதி - VI

# பைத்தியக்காரக் கதைகள்



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | செய்தி | 119 |
| 2. | குளியலறை | 120 |
| 3. | எண்ணிக்கை | 121 |
| 4. | ஓடிப்பிடித்தல் | 121 |
| 5. | முடியுமா | 122 |
| 6. | யார் அமைச்சர் | 123 |
| 7. | கண்டுபிடித்தார் | 124 |
| 8. | பிரதமர் பட்டபாடு | 124 |
| 9. | படத்தயாரிப்பாளர் | 126 |
| 10. | ஆணி அடிப்பது எப்படி? | 127 |
| 11. | 'கிட்னி' | 127 |
| 12. | பைத்தியக்காரப் பறவைகள் | 128 |
| 13. | வெளிச்சம் நின்றால்..... | 128 |
| 14. | இசை கேட்டால்..... | 129 |
| 15. | பள்ளத்தில் போகிறேன்............ | 129 |
| 16. | கனவு..... | 130 |
| 17. | கடவுள் | 130 |

# பைத்தியக்காரக் கதைகள் - 01

## "செய்தி"

அது ஒரு மனநோயாளர் வைத்தியசாலை; தலை நகரில் மிகவும் பிரசித்தமானது. நேரம் காலை ஒன்பது மணி. அந்த வைத்தியசாலையின் பிரபலமான புகழ்பெற்ற மனநோய் வைத்திய நிபுணர் சேகர் தமது அன்றாட கடமைகளுக்காக வைத்தியசாலைக்குள் நுழைந்தார்.

'ஹாலில்' ஒரு பைத்தியம் சுவரில் தனது காதை வைத்து எதையோ உற்றுக்கேட்பது போல் நிற்பதை அவதானிக்கிறார். 'பைத்தியம் தானே; இது மட்டுமா? இன்னும் என்னவெல்லாம் செய்யும்!' என்ற எண்ணத்துடன் தமக்கென ஒதுக்கப்பட்ட விசேட அறையுள் நுழைந்து தமது அன்றாட கடமைகளைச் செய்ய ஆரம்பித்தார்.

நேரம் காலை பத்து மணி; டாக்டர் சேகர் வைத்திய சாலையில் உள்ள வார்டுகளில் இருக்கும் நோயாளிகளைப் பார்க்கும் நேரம்.

'ஹாலை' தாண்டியபோது இன்னுமொரு மனநோயாளி தனது காதை சுவரில் வைத்துக் கொண்டு எதையோ கேட் பது போல் நிற்பதைக் கண்டார். 'பைத்தியம் தானே!' என்ற அலட்சியத்துடன் வார்டுகளைப் பார்க்கப் போனார். வார்டு களைப் பார்த்து விட்டு திரும்பிவந்த போது இன்னமும் மூன்று பைத்தியங்கள் தத்தமது காதுகளை சுவரில் வைத்து எதையோ அவதானமாகக் கேட்பதை அவதானித்தார். அப்போதும் சேகர் அதைக் கணக்கெடுக்கவில்லை.

மதியம் பன்னிரண்டு மணி; டாக்டர் சேகர் தமது மதிய போசனத்திற்காக வீட்டுக்குப் போகிறார். ஹாலில் இன்னும் பல பைத்தியங்கள் தத்தமது காதுகளை சுவரில் வைத்துக்

கொண்டு எதையோ கேட்டுக் கொண்டிருந்தன. சேகர் கண்டும் காணாததுபோல் தமது மதிய போசனத்திற்காக வீட்டிற்கு சென்று விட்டார்.

அவர் திரும்பி வந்த போது நிலைமை மோசமாகியிருந்தது; ஆம்! இன்னும் பல நோயாளர்கள் ஹாலின் ஆங்காங்கே தமது காதுகளை சுவரில் வைத்துக் கொண்டு நின்றார்கள்.

மாலை ஐந்து மணி; அலுவலக வேலை முடிந்து டாக்டர் வீடு திரும்பும் நேரம், ஹாலில் ஏறத்தாள முழுப் பைத்தியங்களுமே தத்தமது காதுகளை சுவர்களில் வைத்த படி நின்றுகொண்டிருந்தன.

இப்போது மனோதத்துவ நிபுணர் சேகரால் தமது ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை; காலையில் வரும் போது காதை சுவரில் வைத்துக் கொண்டிருந்ததே முதற் பைத்தியம்! அதைத் தேடிப்பிடித்து, "என்ன விடயம்?" என்று ஆவலுடன் கேட்டார்.

அது சொன்னது, "உமக்கென்ன பைத்தியமா? நாங்கள் காலையிலிருந்து காதுகளை வைத்துக் கொண்டி ருக்கிறோம்! ஒரு செய்தியும் வரவில்லை; நீர் இப்போது வந்து கேட்கிறீரே! உமக்கு வெட்கமாயில்லை?" என்றது.

நிபுணர் சேகர் விக்கித்து நின்றார்!

## பைத்தியக்காரக் கதைகள் - 02

### "குளியலறை"

அது ஒரு மனநோயாளர் வைத்தியசாலை; ஒரு பைத்தி யம் ஒரு குளியலறையுள் நுழைந்து குளிக்க ஆரம்பித்தது.

மற்றொரு பைத்தியம் குளியலறையை வெளியே பூட்டி விட்டது. அரைகுறையாகக் குளித்துக் கொண்டிருந்த முதலாவது பைத்தியத்திற்குக் கோபம் வந்து விட்டது.

குளியலறைக் கதவைத் தட்டிப்பார்த்தது. ஒருவரும் திறக்கவில்லை; மிகுந்த கோபத்துடன் அரை நிர்வாணமாக குளியலறை ஜன்னலை உடைத்தக் கொண்டு வெளியே வந்து அனைத்து மனநோயாளிகளையும் 'கன்னா, பின்னா' என்று திட்டித்தீர்த்தது.

பின்னர் குளியலறை வெளிக்கதவைத் திறந்தது. மீண்டும் தான் உடைத்த ஜன்னலால் ஏறிக் குதித்து குளிக்கத் தொடங்கியது!

## பைத்தியக்காரக் கதைகள் - 03

### "எண்ணிக்கை"

ஒரு பாழும் கிணத்தருகே ஒரு பைத்தியம் நின்று கொண்டு ஐம்பத்தொன்று, ஐம்பத்தி இரண்டு, ஐம்பத்தி மூன்று என்று சத்தம் போட்டு எண்ணிக் கொண்டு நின்றது.

அந்தக் கிணற்றைத் தாண்டிச் சென்ற ஒரு அப்பாவி நபர் அந்தப்பைத்தியத்திடம் "என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

பைத்தியம் அந்த நபரை பாழும் கிணற்றுள் தள்ளிவிட்டு "ஐம்பத்தி நான்கு"என்று எண்ணத் தொடங்கியது!

## பைத்தியக்காரக் கதைகள் - 04

### "ஓடிப் பிடித்தல்"

ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் வழியே நாராயணசாமி நடந்து போய்க் கொண்டிருந்தார்.

வைத்தியசாலையில் இருந்து தப்பித்துவந்த பைத்தியமொன்று நாராயணசாமியை துரத்தத் தொடங்கியது.

இயற்கையாகவே பயந்த சுபாவமுடைய நாராயண சாமி அச்சம் கொண்டவராக ஓடத் தொடங்கினார். பைத்திய மும் விடவில்லை; அப்பாவி நாராயணசாமியை துரத்தத் தொடங்கியது. நாராயணசாமி தலைதெறிக்க ஓடினார்!

நாராயணசாமி ஓடினார்; ஓடினார்; ஓடிக்கொண்டே இருந்தார்! பைத்தியமும் நாராயணசாமியை விடாமல் துரத்திக் கொண்டிருந்தது.

ஒரு கட்டத்தில் பைத்தியம் நாராயணசாமியை எட்டிப் பிடித்துவிட்டது. நாராயணசாமி பைத்தியத்தின் பிடியிலிருந்து தப்பிக்க முயற்சித்தார். எவ்வளவோ பாடுபட்டும் அவரால் தப்பிக்க முடியவில்லை.

பைத்தியமோ மிகவும் ஆறுதலாக அவரது உள்ளங் கையில் தட்டிவிட்டு, "நான் இப்போது உன்னைப்பிடித்து உனது கையில் அடித்து விட்டேன்; எங்கே, இனி நீ என்னைப் பிடி பார்க்கலாம்!" என்று கூறிவிட்டு வைத்தியசாலையை நோக்கி தலைதெறிக்க ஓடத் தொடங்கியது!

நாராயணசாமிக்கு நினைவு மீண்டுவர அதிக நேரம் எடுத்தது!

## பைத்தியக்காரக் கதைகள் - 05

### "முடியுமா?"

அந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் நடு இரவில் ஒரு பைத்தியம் விழிந்து எழுந்து கொண்டது. கையில் ஒரு 'டார்ச் லைட்'டையும் எடுத்துக் கொண்டு ஏனைய பைத்தியங்களை நித்திரையில் இருந்து எழுப்பியது. அனைத்துப் பைத்தியங் களும் எழுந்தபின்னர், சுவரில் டார்ச்சை அடித்த முதற்

பைத்தியம், "எங்கே இந்த வெளிச்சத்தில் ஏறுங்கள் பார்க்கலாம்!" என்றது. சில பைத்தியங்கள் மறுத்தன; ஒன்றிரண்டு ஏறமுயற்சித்து தோல்வியடைந்தன. ஒரு பைத்தியம் மட்டும், "நான் ஏறிவிடுவேன்; ஆனால் ஏறியபின் நீ டார்ச் லைற்றை அணைத்தால் நான் கீழே விழுந்து விடுவேனே! அதனால் ஏறமாட்டேன் என்றது!

## பைத்தியக்காரக் கதைகள் - 06

### "யார் அமைச்சர்?"

ஒரு நாட்டின் முக்கியமான அமைச்சர் ஒருவர் அந்த நாட்டின் பிரபல மனநோயாளர் வைத்தியசாலைக்கு அதிகாரபூர்வமாக விஜயம் செய்தார். ஒவ்வொரு பைத்திய மாகச் சந்தித்து குசலம் விசாரித்தார். உடுபுடவை, உணவு வகைகளை அன்பளிப்புச் செய்தார்.

இறுதியாக சற்று குணமாகத் தோற்றமளித்த ஒரு பைத்தியத்திடம், "நான் இந்நாட்டின் சுகாதார அமைச்சர்; உனக்கு என்ன வேண்டுமென்று சொல்; என்னாலியன்றதைச் செய்கிறேன்" என்று அன்புடன் கூறினார்.

அமைச்சரை அருகே அழைத்த பைத்தியம் இரகசியமாக அவரது காதுக்குள், "உஸ்...... சத்தம் போட்டுச் சொல்லாதீர்கள்! நான் இந்நாட்டின் பிரதமர். அதைச் சத்தம் போட்டுச் சொன்னதாற் தான் இங்கே வைத்துள்ளார்கள்" என்றது!

அமைச்சர் அசந்துவிட்டார்!

## பைத்தியக்காரக் கதைகள் - 07

### "கண்டுபிடித்தார்"

ஒரு மனநோயாளர் வைத்தியசாலையில் மாலைப் பொழுதில் பைத்தியங்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

திடீரென ஒரு பைத்தியம் அனைத்துப் பைத்தியங்களை யும் அழைத்து கொண்டு, "எனது கைகளுக்குள் என்ன இருக்கிறது என்று சொன்னால் ஒரு பரிசு தருவேன்" என்றது.

"தீப்பெட்டி" என்றது ஒரு பைத்தியம். "பிழை"- முதற் பைத்தியம்.

"சிகரட்" - "இல்லை"

"முருகன் படம்" - "தவறு"

இவ்வாறு பலவிதமான பதில்கள்! கேள்வி கேட்ட பைத்தியம் அனைத்தையும் நிராகரித்து விட்டது.

இறுதியாக ஒரு பைத்தியம், "யானைக்குட்டி!" என்றது. முதற்பைத்தியம், "சரியான பதில்தான்! ஆனால் நான் கைக்குள் வைத்து மூடும்போது நீ கண்டு விட்டாய்! எனவே பரிசு இல்லை!" என்றது.

## பைத்தியக்காரக் கதைகள் - 08

### பிரதமர் பட்டபாடு

அந்த நாட்டின் பிரதமர் ஒரு சமயம் அந்த நாட்டிலுள்ள பிரசித்திபெற்ற மனநோயாளர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்ய வேண்டி இருந்தது.

ஒவ்வொரு பைத்தியமாக அவர் பார்த்து அவர் களுக்குத் தேவையான உடுபுடவை, சிற்றூண்டி உணவு வகைகள் போன்றவற்றை அன்பளிப்பாக அளித்து வந்தார்.

ஆனால் ஒரு பைத்தியம் அதை ஏற்க மறுத்து, "ஐயா, பெரியவரே இவை ஒன்றும் எனக்கு வேண்டாம்; எனக்கு இப்போது சுகமாகிவிட்டது. ஆனால் என்னை வெளியில் வீட்டுக்குப் போக விடுகிறார்களில்லை. நீங்கள் தான் நான் வெளியில் செல்ல உதவ வேண்டும்" என்று மிகவும் பணிவுடன் கேட்டது. பிரதமருக்குப் பின்னால் அணிவகுத்து வந்த அமைச்சர்கள், பிரதானிகளிடமும் தனது விடயத்தைப்பற்றி பிரதமருக்கு ஞாபகப்படுத்தச் சொன்னது.

பிரதமர் டாக்டர் சேகரை அழைத்து, அந்த நபரின் நிலைமை பற்றி விசாரித்தார். டாக்டரும் "அவருக்கு சற்று குணமாகிவிட்டது, எனினும் முற்றிலும் குணமாக இன்னமும் நாட்கள் எடுக்கும்" என்று கூறினார். இதைச் செவிமடுத்த பைத்தியம் 'குய்யோ,முறையோ' என்று கூப்பாடு போட்டது. பைத்தியத்தை சமாளிக்க பிரதமருக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது.

பிரதமர் தமது ஆள், அம்பு படையுடன் புறப்படும் நேரம், பிரதமர் தமது சொகுசு வாகனத்தில் ஏறும்போது அவரின் தலையில் வந்து விழுந்தது ஒரு கல்; பலத்த காயம்! இரத்தம்! பிரதமர் நிமிர்ந்து பார்த்தார். தனக்கு சுகமென்றும், தன்னை வீட்டிற்கு அனுப்புமாறு கூறிய பைத்தியம், "ஐயா, நான் தான் கல்லை வீசியது; என்னை வீட்டிற்கு அனுப்ப ஞாபகப்படுத்தும் முகமாகவே கல்லை எறிந்து காயம் வைத்தேன்! இப்போது மறக்கமாட்டீர்கள் தானே! என்றது. தான் பட்ட காயத்தாலும், பீறிட்ட இரத்தத்தாலும் மயக்கமடையாத பிரதமர் தற்போது மயக்கமானார்!

# பைத்தியக்காரக் கதைகள் - 09

## "படத்தயாரிப்பாளர்"

திரு.சோமசுந்தரம் என்பவர் அந்த நகரத்தில் பிரபல செல்வந்தர். மேலும் தனது செல்வத்தைப் பெருக்கப் பேராசை கொண்டு திரைப்படத்தயாரிப்பில் இறங்கினார். தெரியாத, ஒன்றுமே புரியாத துறை. அவர் தயாரிப்பில் வெளிவந்த படங்கள் அடுத்தடுத்து தோல்வியைத் தழுவின. நடிக்க வந்த நடிகைகளும் தமது அழகைக் காட்டி அவரை ஏமாற்றி பணம் பறித்துச் சென்றனர். பல கோடிகளை இழந்தார்.

இதனால் சோமசுந்தரம் பைத்தியமானார். டாக்டர் சேகரின் நர்சிங் ஹோமில் சேர்க்கப்பட்டார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

சற்றுக் குணமானவர் போல் தென்பட்டதால் அவரை வீட்டிற்கு திரும்ப அனுப்பலாம் என்று தீர்மானித்த டாக்டர் அவரைப்பார்க்க அவரது அறைக்குச் சென்றார்.

திரு.சோமசுந்தரம் தமது அறையிலிருந்த மேசையில் தொலைபேசி அருகே அமர்ந்து கொண்டு ரெலிபோன் டிறக்ரியில் எம்.கலைச்செல்வி, என்.கலைச்செல்வி, பி.கலைச்செல்வி, எஸ்.கலைச்செல்வி என்று பார்த்து தொலைபேசி இலக்கங்களை சுழற்றிக்கொண்டிருந்தார்.

இதை அவதானித்த சேகர், "சோமசுந்தரம் அவர்களே, என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர் சொன்ன பதில் டாக்டரை தூக்கிவாரிப்போட்டது! "டாக்டர், எனது அடுத்த புதிய படத்திற்கு புதிய கதாநாயகி ஒருவரை தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிறேன்!"என்றாரே பார்க்கலாம்!

# பைத்தியக்காரக் கதைகள் - 10

## "ஆணி அடிப்பது எப்படி?

ஒரு பைத்தியம் தான் தங்கியிருந்த வைத்தியசாலை யின் சுவரில் ஒரு ஆணியை தலைகீழாகப் பிடித்து கூர்ப்பகுதியை சுத்தியலால் அடித்துக் கொண்டிருந்தது.

இதை அவதானித்த மற்றொரு பைத்தியம் முதற் பைத்தியத்திடமிருந்து ஆணியைப் பறித்து, "அடப் பைத்தியமே இப்படியா ஆணியை சுவரில் அடிப்பது? இதோபார்!" என்று கூறி, அதே ஆணியை எதிர்ப்புறச்சுவரில் அதேமாதிரி கூர்ப்பகுதியை சுத்தியலால் அடிக்கத் தொடங்கியது!

# பைத்தியக்காரக் கதைகள் - 11

## "கிட்னி"

டாக்டர் சேகரின் மனநோயாளர் வைத்தியசாலையில் நோயாளிகள் அதிகரித்து விட்டதால் சற்று குணமானவர்களை வீட்டிற்கு திருப்பி அனுப்பலாம் என அவர் தீர்மானித்தார்.

அதன்படி ஒவ்வொருவராக அழைத்து விசாரிக்கத் தொடங்கினார். தாறுமாறான பதில்கள் கிடைத்து டாக்டர் திகைத்து நின்றார்.

கடைசியாக ஒருவரை விசாரித்தார். பல கேள்விகள் கேட்டார். 'டாண்,டாண்' என்று சரியான பதில்கள் வந்தன.

மகிழ்ச்சியடைந்த சேகர், "மிகவும் சந்தோசம்; ஐயா எப்படி இத்தனை கேள்விகளுக்கும் சரியான பதில் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அவரும் துள்ளிக் குதித்துக் கொண்டு தனது தலையைத் தொட்டுக் காட்டி, "எல்லாம் இங்கே உள்ள கிட்னி செய்யும் வேலைதான்" என்றாரே பார்க்கலாம்!

டாக்டர் சேகர் செய்வதறியாது திகைத்து நின்றார்!

## பைத்தியக்காரக் கதைகள் - 12

### "பைத்தியகாரப் பறவைகள்"

ஒரு பைத்தியம் தனது இரண்டு கைகளையும் நீட்டிக் கொண்டு நின்றது. விபரமறியாத ஒருவர், "ஏன் இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு நிற்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு பைத்தியம் சொன்னது "பறவைகள் வந்து இருக்கட்டும் என்றுதான்." சற்று நேரத்தின் பின் பின்னையவர் கேட்டார் "என்ன பறவைகள் வரவில்லையா?" பைத்தியம் சொன்னது "பறவைகளுக்கு பைத்தியம்!"

## பைத்தியக்காரக் கதைகள் - 13

### "வெளிச்சம் நின்றால்....."

பைத்திய வைத்தியசாலையில் ஒரு பைத்தியம் மரம் சீவுவதுபோல் சீவிக்கொண்டிருந்தது. வைத்தியர் வந்து "என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று வினாவினார். பைத்தியம் "தெரியவில்லையா? மேசை ஒன்று செய்வதற்கு மரம் சீவிக்கொண்டிருக்கிறேன்!" என்றது. வைத்தியர் சற்று அப்பால் சென்றபோது இன்னுமொரு பைத்தியம் கூரையிலிருந்து தலைகீழாக தொங்கிக்கொண்டிருந்தது. வைத்தியர் அவனை நோக்கி "என்ன செய்கிறாய்? ஏன் இப்படி தொங்குகிறாய்?" என்று கேட்டார். "என்ன சேர் தெரியவில்லையா? நான் ரியூப்லைற் சேர்!" என்றது பைத்தியம். வைத்தியர் முதல் பைத்தியத்திடம் சென்று, "அவன் உனது நண்பன் தானே! நேரே இறங்கி நிற்கச் சொல்லக்கூடாதா?" என்று கேட்டார். அதற்கு முதற் பைத்தியம் சொன்னது, "அவன் நேரே இறங்கி நின்றால் வெளிச்சம் (லைற்) நின்று விடும். பின்பு நான் என்னென்று எனது மேசைக்கு மரம் சீவுவது?" வைத்தியர் திகைத்து நின்றார்!

## பைத்தியக்காரக் கதைகள் - 14

### "இசைகேட்டால்"

ஒரு பைத்திய ஆஸ்பத்திரியில் ஒரு பைத்தியம் மல்லாக்கப் படுத்திருந்தது. டாக்டர் அவ்வழியில்போகும்போது "பைத்தியம் தானே, மல்லாக்கப்படுத்திருக்கிறது!" என்று நினைத்து தனது வழியே போய்விட்டார். திரும்பி அதே வழியில் வரும்போது அதே பைத்தியம் நிமிர்ந்து படுத்திருந்தது. டாக்டர் "ஏன் அப்பன்! நான் போகும் போது மல்லாக்கப்படுத்திருந்தாய்! இப்போது நிமிர்ந்து படுத்திருக்கிறாய்?" என்று கேட்டார். "என்னைக் குழப்பாதீர்கள்; நான் பாட்டுக் கேட்கிறேன். முதலில், 'கசற்' (Cassette) இன் 'A' பக்கம், இப்போ 'கசற்றின்' 'B' பக்கம்" என்றாரே பார்க்கலாம்! டாக்டர் திகைத்துப்போனார்.

நன்றி : 'செங்கதிர்'- 2009 -வீச்சு - 18

## பைத்தியக்காரக் கதைகள் - 15

### "பள்ளத்தில் போகிறேன்"

பைத்தியங்கள் பூரண சுகமாகிவிட்டனவா என்று பரீட்சிக்க டாக்டர் சேகர் ஒரு Cycle Race வைத்தார். எல்லோரும் தாங்கள் குணமாகிவிட்டார்கள் என்பதை நிரூபிக்க வேகமாக ஓடினார்கள். ஒருவர் மட்டும் ஓடவேயில்லை. டாக்டர் "ஏன் நீ ஓடவில்லை உனக்கு சுகமாகிவிட்டதா?" எனக் கேட்டார். பைத்தியம் சொன்னது "ஏன் நான் ஓடவேண்டும்? இறக்கத்தில் எல்லா போய்க் கொண்டிருக்கிறேன்!" வைத்தியர் விக்கித்துப் போனார்.

நன்றி : 'செங்கதிர்' ஆனி 2009 வீச்சு - 18

## பைத்தியக்காரக் கதைகள் - 16

### "கனவு"

ஒரு பைத்தியம் டாக்டர் சேகரிடம் 'அப்பொயின்ட் மென்ட்' வைத்து காணவந்தது.

டாக்டர் சேகர் அவரைப்பார்த்து, "என்ன விடயம்?" என்று கேட்டார்.

பைத்தியம்: தினமும் கனவில் நான் 'பாட்மின்ரன்' விளையாடுவதாக கனவு காண்கிறேன்.

டாக்டர்: கவலைப்படாதீர்கள்! நான் மருந்து தருகிறேன்; இன்று படுக்கைக்குப் போகமுன் இதைக் குடித்துவிட்டுப் படுங்கள். நாளையே சுகமாகிவிடும்!

வந்தவர் : டாக்டர், நான் நாளை இரவிற்கு இந்த மருந்தைக் குடிக்கிறேனே, ப்ளீஸ்.

டாக்டர் : (வியப்படைந்தவராக) ஏன் அப்படி?

பைத்தியம் : ஏனென்றால் இன்றிரவு தான் சாம்பியன் 'மாட்ச்'!

டாக்டர் : ????

## பைத்தியக்காரக் கதைகள் - 17

### " கடவுள் "

ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் நள்ளிரவு நேரம் ஒரு பைத்தியம் திடீரென விழித்துக் கொண்டது. அவசர, அவசரமாகத் தனது துணிமணிகளை ஒரு பையில் அடைத்துக் கொண்டிருந்தது. இதை அவதானித்த பிறிதொரு பைத்தியம், "என்ன செய்கிறாய்?" ஏன் துணிமணிகளை அடுக்குகிறாய்? எங்கே போகப் போகிறாய்?" ஏன்று கேட்டது.

அதற்கு முதற் பைத்தியம், "கடவுள் கனவில் வந்து தன்னைச் சந்திக்கச் சொன்னார்" என்றது.

இரண்டாவது பைத்தியம் சற்று யோசித்துவிட்டு "நான் உன்னை வரும்படி சொல்லவில்லையே!" என்றது!

# பகுதி - VIII

# வயிற்றெரிச்சல் கதைகள்



www.ayurvedamaruthuvam.forumta.net

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கதாநாயகன் படும் பாடு..... | 133 |
| 2. | ‘பாஸ்ட்’ போலர் படும் அவஸ்தை! | 134 |
| 3. | ஒரு விதவையின் விசும்பல்! | 135 |
| 4. | ஒரு பண்டிதரின் வயிற்றெரிச்சல் | 137 |
| 5. | ஒரு வாத்தியாரின் வயிற்றெரிச்சல் | 138 |
| 6. | மாணவன் படும் மன அவஸ்தை | 139 |
| 7. | ஒரு அரசியல்வாதியின் அங்கலாய்ப்பு | 141 |
| 8. | ஒரு இளம் பெண்ணின் இதயக் குமுறல் | 142 |
| 9. | வெளிநாட்டுப் பணமாம்! | 143 |
| 10. | மரணப்படுக்கையில் நான்.... | 144 |
| 11. | கணவனே கண்கண்ட தெய்வம் | 145 |

# வயிற்றெரிச்சல் கதைகள் - 01

## " கதாநாயகன் படும் பாடு....."

நான் கோடிக்கணக்கில் சம்பாதிக்கின்றேனாம்; விதம் விதமாக ஆடை அணிகிறேனாம்; நேரத்திற்கொரு சங்கிலி, நாளுக்கொரு மோட்டார் வண்டி, ஒருநாள் சென்னையில், மறுநாள் பாரிசில், நிறைய நண்பர்கள், நண்பிகள், ஐந்து நட்சத்திர ஹோட்டல் விருந்து என்று திரிகிறேனாம். வயிற்றெரிச்சல் படுகிறார்கள்.

உண்மைதான்; நான் கோடான கோடி சம்பாதிப்பது உண்மைதான். விதம் விதமாக ஆடை அணிவது உண்மைதான். நண்பர்கள், நண்பிகள் மெய்தான்! ஆனால் எனது வேதனைகள், சோதனைகளை யாரிடம் கொட்டித்தீர்ப்பது?

நான் இரவு பகலாக இருப்பத்திநான்கு மணிநேரம் உழைக்கிறேன். ஆதிகாலை எழுந்து சென்னையில் 'சூட்டிங்' என்றால் நள்ளிரவு 'சூட்டிங்' இலண்டனில்; மீண்டும் அடுத்தநாள் பம்பாயில்! உறக்கமில்லாமல், நல்ல உணவு இல்லாமல் அங்கும் இங்கும் பறக்கிறேன்.

'வயிற்றெரிச்சல்' காரருக்கு இது உல்லாசப் பிரயாணம்! 'சூட்டிங்' என்றால் சும்மாவா? மழையில் நனைய வேண்டும், மலையில் ஏறவேண்டும். அங்கிருந்து குதிக்க வேண்டும்! வெயிலில் காயவேண்டும்; வில்லன் நடிகரிடம் அடி உதைவாங்க வேண்டும்; வில்லன் நடிகரிடம் மட்டுமா சிலவேளைகளில் காமெடி நடிகன் கூட அடிப்பான். ஏன்? கதாநாயகி கூட விளாசிவிடுவாள்! இவையெல்லாம் தெரியுமா அந்த வயிற்றெரிச்சல்காரர்களுக்கு?

வெளி உலகில் திரியும் போது நல்ல நாகரிக உடைகள் அணிவது உண்மைதான். நடிக்கும் போது நாற்றம் பிடித்த

கந்தல் உடைகள் அணியவேண்டியிருக்கும்; யாரோ எப்போதோ ஒட்டி நடித்த தாடி, மீசை ஒட்டவேண்டும், கிழிந்த சப்பாத்து அணியவேண்டும்; பைத்தியக்காரன் போல் பாடி, ஆடி நடிக்க வேண்டும்! அடிக்கடி கண்கள் எரிய 'கிளிசரின்' பூசி அழவேண்டும்!

இப்படி எத்தனை எத்தனை வேதனைகள்! சோதனைகள்! இவைதெரியுமா அந்த வயிற்றெரிச்சல் காரர்களுக்கு?

செங்கதிர் - ஆவணி - 2012 வீச்சு 56

## வயிற்றெரிச்சல் கதைகள் - 02

### " 'பாஸ்ட்' போலர் படும் அவஸ்தை!"

நான் உலகத்தின் முன்னணி கிரிக்கெட் அணி ஒன்றின் முன்னணி பாஸ்ட் போலர். 'டெஸ்ட்' போட்டிகளிலும் ஒரு நாள் போட்டிகளிலும் ஏன் அண்மையில் ஆரம்பித்த T20 போட்டிகளிலும் நூற்றுக்கணக்கான 'விக்கட்டு'க்களை வீழ்த்தியுள்ளேன். உலகெங்கிலுமுள்ள முன்னணி 'பாஸ்ட்மன்' மாரை எனது அதிரடிப்பந்து வீச்சினால் அதிர்ச்சியுறச் செய்துள்ளேன். எனது பந்து வீச்சில் காயப்பட்டு 'பவிலியன்' திரும்பியோர் பலர்.

ஆனால் நான் 'பட்டிங்' கொஞ்சம் 'வீக்' தான். கொஞ்சம் என்ன, ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம். என்றாலும் எனக்கு 'பட்டிங்' செய்ய கொள்ளை ஆசை! நீங்கள் மனதுக்குள்ளே உனக்கேன் உந்த நப்பாசை? என்று முணுமுணுப்பது கேட்கிறது! கடைசிப் 'பட்ஸ்மன்' ஆச்சே! எல்லாவற்றையும் விடக் கொடுமை என்னவென்றால் ஏழு, எட்டாவது பட்ஸ்மன் 'பட்' செய்து கொண்டிருக்கும் போது 'கப்டன்' என்னையும் தேவையான அணிகலன்கள் அணிந்து

துடுப்பாட்டத்திற்கு ஆயத்தமாகுமாறு பணிப்பார். அத்துடன் நின்றால் பரவாயில் லையே நான் 'கிளவ்ஸ்' பாட்ஸ் அணியும் போது 'விக்கட் கீப்பரை' அழைத்து என்ன செய்ய வேண்டும் எப்படி பந்து பிடிக்க வேண்டும் என்றெல்லாம் கதைக்கத் தொடங்கி விடுவார். மற்ற 'பீல்டேர்ஸ்' எங்கே நிற்கவேண்டும் எதிரணி 'பட்ஸ்மன்' அடிக்கும் பந்தை 'பவுண்டரி' போகாமல் எவ்வாறு பிடிக்க வேண்டும் என்றெல்லாம் 'டிஸ்கஸ்' பண்ணுவார்!

இதன் அர்த்தம் என்ன? நான் 'பட்' செய்யப் போனவுடனேயே அவுட்டாகித் திரும்பிப் போகிறேன் என்பதுதானே!

இதை யாரிடம் சொல்லி அழுவது?

நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருக்கும்! எப்போது நான் ஒழுங்காக 'பட்' பண்ணுவது?

எப்போது நான் சதம் அடிப்பது?

எல்லாம் என் தலை எழுத்து!

செங்கதிர் - ஆவணி - 2012 வீச்சு 56

## வயிற்றெரிச்சல் கதைகள் - 03

### "ஒரு விதவையின் விசும்பல்!"

நான் அழவில்லையாம்; எனது கணவர் இறந்து விட்டார்; நான் கதறிக் கதறி அழவில்லையாம்! ஒரு சொட்டுக் கண்ணீர் கூட நான் விடவில்லையாம்! என் காதுகளுக்குக் கேட்கக் கூடியதாகவே எனது உற்றார், உறவினர்கள் பேசிக் கொண்டார்கள். குறை சொன்னார்கள்!

உண்மைதான்;கணவரின் பிரேதப்பெட்டிக்கு அருகில் இருந்தும் எனக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரவில்லை!

எப்படி வரும்? அந்த வயிற்றெரிச்சலை உற்றார், உறவினருக்குக் கொட்ட முடியுமா? 'இணுவை இரகு' மூலமாக 'செங்கதிர்' வாசகர்களிடம் மட்டும் கொட்டித் தீர்க்கிறேன்.

நான் எனது பெற்றோருக்கு ஒரே ஒரு செல்ல மகள்! அப்பா, அம்மாவிடம் பணம் கொட்டிக்கிடந்தது; மாடமாளிகை; தோட்டம், துரவு; கார்கள், கூப்பிட்ட குரலுக்கு வேலையாட்கள்; இத்யாதி; இத்யாதி. எனது பெற்றோர், எனக்கு இருபது வயதான போது ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைத்துவிட்டாரென்று எனது படிப்பையும் குழப்பி, எனது விருப்பத்தையும் கேட்காமல் அந்த 'வரனு'க்கு கட்டி வைத்துவிட்டு கைலாசம் போய்விட்டார்கள்.

அவர்கள் போன ஒரு வாரத்திலேயே எனது கணவரின் கூத்துகள் ஆரம்பமாகின. குடியும், கூத்தும், சூதாட்டமும் தினமும். சொத்தும் கரைந்தது!

தவிர பெண்களின் தொடர்பு. போகப் போக தினமும் பெண்களை வீட்டிற்கே கூட்டி வரத் தொடங்கிவிட்டார். தட்டிக் கேட்ட எனக்கு அடி, உதை! தான் புகைத்த சிகரெட்டால் எனக்குச் சுட்ட வடுக்கள் எத்தனை? எத்தனை? எப்படி எனக்கு அழுகை வரும்?

கடைசியாக அவரின் கதை 'இரத்தக் கண்ணீர்' எம்.ஆர்.ராதாவின் கதைதான்! அப்படி இருந்தும் இறுதிவரை வைத்தியசாலையிலும், வீட்டிலுமாக வைத்துப் பார்த்தேன். பலன் ஏதுமில்லை!

தானாகவே தன் சாவைத் தேடிக்கொண்டவரைப் பார்த்து என்ன என்று அழுகை வரும்?

போலிக்காக, ஊருக்காக அழ விரும்பவில்லை!

எல்லாம் வல்ல இறைவனுக்கும், உங்களுக்கும் எனது 'வயிற்றெரிச்சல்' புரிந்தால் அது எனக்கு போதும்!

செங்கதிர் - புரட்டாதி - 2012 - வீச்சு 57

# வயிற்றெரிச்சல் கதைகள் - 04

## "ஒரு பண்டிதரின் வயிற்றெரிச்சல்"

நான் ஒரு தமிழ்ப்பண்டிதர்! ஆசிரியரும் கூட. வெறும் தமிழ்ப்பண்டிதர் இல்லை! தமிழ் இலக்கணம், இலக்கியம் முற்று முழுதாக கற்றுத் தெளிந்த பண்டிதர். நல்ல பேச்சாளர்; கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு முதலியனவும் செய்வதுண்டு.

மனைவி, ஆறு குழந்தைகள் உட்பட அம்மா இரண்டு தங்கைமாரும் எனது பராமரிப்பில் உள்ளார்கள். எனது குடும்பச் செலவிற்கு எனது ஆசிரியர் சம்பளம் பாதிமாதத்திற்குக் கூட போதாது. இந்தக் காலத்தில் தமிழ்ப்பாடத்திற்கென யார் 'ரியூசன்' வைத்துக்கொள்கிறார்கள்? அப்படியிருந்தும் ஏதோ இரண்டொரு ரியூசனுடனும், பாதி வயிற்றுடனும் காலம் ஒரு மாதிரி ஓடுகிறது.

இதுவெல்லாம் எனது தலையெழுத்து! ஆனால் எனது 'வயிற்றெரிச்சல்' இதுவல்ல; நாடு போற்றும் நல்ல பேச்சாளன் என உள்ளூரிலும், வெளியூருக்கும் அழைத்துச் செல்வார்கள். பல்வேறு வித தலைப்புகளிலும் மணித்தியாலக்கணக்காக தங்கு தடையின்றி உரையாற்றுவேன். அழைத்துப் போகும் போது காரில் அழைத்துச் செல்வார்கள். கூட்டம் முடிந்து வரும் போது பல சமயங்களில் அம்போ! நடைராஜாதான்!

கூட்டம் என்னவோ சிறப்பாகத்தான் நடைபெறும்! எனக்கு பொன்னாடை, பூமாலை; விருது கூடக் கிடைக்கும். புகைப்படம் எடுப்பார்கள். பத்திரிகைகளில் வரும். பேட்டி காணுவார்கள்; பத்திரிகைகள் பிரசுரிக்கும். சிலவேளைகளில் தொலைக்காட்சிகளில் கூட நான் வருவதுண்டு! கைதட்டலுக்குப் பஞ்சமில்லை!

இவையெல்லாம் எனக்கு சோறுபோடுமா? பூமாலை அன்றே கசங்கிவிடும்! பொன்னாடையை உடுக்க முடியுமா? விருதுகள் வைக்க வீட்டில் அலுமாரியில்லை; புகைப்படங்களைப் போட 'அல்பம்' வாங்கப் பணமில்லை!

புரிகிறதா எனது வயிற்றெரிச்சல்!

நன்றி: செங்கதிர்: ஐப்பசி 2012- வீச்சு 58

# வயிற்றெரிச்சல் கதைகள் - 05

## "ஒரு வாத்தியாரின் வயிற்றெரிச்சல்"

நான் ஒரு பிரபல கல்லூரியின் கணித ஆசிரியர், சும்மா வெறும் கணித ஆசிரியர் இல்லை; தலைநகரிலே பிரத்தியேக ரியூசன் மூலம் மட்டும் இலட்சக்கணக்கில் மாதாந்தம் உழைக் கின்றேன். என்னைப் போலவே பல கணித ஆசிரியர்களை உருவாக்கியுள்ளேன். அவர்களும் என்னைப் போலவே பல்வேறு கல்லூரிகளில் கணித ஆசிரியர்களாக உள்ளார்கள். ரியூசனும் கொடுக்கிறார்கள். ஆனால் ஒருவரும் என்னை விஞ்சவில்லை. இப்போதைக்கு விஞ்சவும் முடியாது!

தவிர பல கணித மேதைகளையும் நூற்றுக்கணக்கான பொறியியலாளர்களையும் உருவாக்கியுள்ளேன்.

இரவு பகலாக உழைக்கின்றேன். பாங்க் பலன்ஸ் தினமும் ஏறிக்கொண்டே போகின்றது. கார், பங்களா, நல்ல மனைவி, சிறந்த குழந்தைகள் எல்லாம் சரி.

நான் கல்வி கற்பித்த மாணவர்கள் நல்லாசிரியர்களாக, பொறியியலாளர்களாக என்னை மிகவும் மதிக்கிறார்கள். போற்றுகின்றார்கள். தமது வீடுகளிலே ஒரு நல்ல

காரிய மென்றால் என்னை, மனைவி சகிதம் அழைத்து கௌரவிக்கிறார்கள்.

இருந்தும் என்ன? இத்தனை என்ஜினியர்களை உருவாக்கிய நான் எப்போது என்ஜினியராவது? எட்டு மணிநேரம் மட்டும் வேலை செய்து கைநிறைய உழைப்பது? நான் ஒரு அதிபருக்கு கீழே அவர் கட்டளைப்படித்தான் வேலை செய்ய வேண்டி உள்ளது. நான் என்ஜினியராகி எனக்கு கீழே பத்து, இருபதுபேர், வேலை செய்வது எப்போது?

எப்போது தீரும் எனது வயிற்றெரிச்சல்?

செங்கதிர் - கார்த்திகை -2012 -வீச்சு 59

## வயிற்றெரிச்சல் கதைகள் - 06

## "மாணவன் படும் மன அவஸ்தை"

நான் ஒரு நல்ல மாணவன்; செல்வந்த பெற்றோருக்கு ஒரே வாரிசு. படிப்பிலும் படு சுட்டி. வகுப்பில் நம்பர் 'வண்'. இம்முறை 'ஓ லெவல்' எடுக்கப் போகிறேன். நிச்சயமாக எல்லாப் பாடங்களிலும் 'ஏ' சித்தி தான். விளையாட்டுத் துறையிலும் விண்ணன்.

இப்போது எனக்கிருக்கும் பிரச்சனை என்னவென்றால் நான் இன்னமும் 'ஓ லெவல்' எடுக்கவில்லை; மறுமொழியும் வரவில்லை; அதற்குள்ளாக "அப்பா டாக்டருக்குப் படி" என்றும் அம்மா "என்ஜினியருக்குப் படி" என்றும் மாமா "அக்கவுண்டனுக்குப்படி" என்றும் நச்சரிப்பு. சித்தப்பாவோ நான் வக்கிலாக வேண்டுமாம்!

இவர்கள், நான் ஒருவன் இருக்கிறேன்; எனக்கும் உள்ளம், உணர்வு, இலட்சியம் உள்ளது என்பதை உணர்கிறார் களில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக நான் ஒரு சிறந்த 'கிரிக்கெட்' பிளேயர். கல்லூரியின் சிறந்த 'பாட்ஸ்மன்'. இன்னும் சுருக்க மாகச் சொல்லப்போனால் இலங்கையிலுள்ள கல்லூரிகளில் உள்ள விளையாட்டு வீரர்களில் அதிசிறந்த பாட்ஸ்மனாகக் கருதப்படுபவன்.

ஆனால் அப்பா,அம்மா என்னை கிரிக்கெட் பயிற்சிக்கு ஒழுங்காக அனுப்புவதில்லை. மாமாவோ கண்ணில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு என்னையே சுற்றித்திரிவார். நானும் எப்படியோ 'சுழி' ஓடி கிரிக்கெட் பயிற்சி செய்து எனது முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளேன். நான் இலங்கை அணிக்கு விளையாடும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பது நிச்சயம்.

இது இப்படி இருக்க "படி படி" என்றால் என்ன செய்வது? நான் படித்துக் கொண்டு கிரிக்கெட் ஆட முடியாதா? என்னை என் பாட்டுக்கு விட்டால் நன்றாகப்படித்துக் கொண்டு கிரிக்கெட்டும் ஆடுவேன்தானே! இதை ஏன் இவர்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை?

முன்னாள் இந்திய அணித்தலைவர் கிருஷ்ணமாச்சர். ஸ்ரீகாந் என்ஜினியராக இருந்து கொண்டு கிரிக்கெட் சிறப்பாக ஆடவில்லையா? முத்தையா முரளிதரன், சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் ஆடி இலட்சக்கணக்கில் உழைக்கவில்லையா?

எனது இந்த மனத்தாங்கலை எனது பெற்றோருக்கும், மாமாவிற்கும் விளங்கப்படுத்தி என்னைப் படிக்கவும், அதே சமயம் கிரிக்கெட் விளையாடவும் உதவுவீர்களா?

# வயிற்றெரிச்சல் கதைகள் - 07

## "ஒரு அரசியல்வாதியின் அங்கலாய்ப்பு"

மூன்று பொதுத்தேர்தல்களின் படு தோல்வியடைந்து ஒருமாதிரி வாக்கு வித்தியாசத்துடன் (513 வாக்குகள்) வென்று எம்.பி. ஆகிவிட்டேன்.

சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுமுன்னரே "எனது பிள்ளைக்கு ஒரு வேலை எடுத்து தா!" என்று ஒருவர், "எனது மனைவியின் இடமாற்றத்தைக் கவனியுங்கள்!" என்று ஒரு கணவர், "எங்களது ஊர்க்கோயிலை திருத்த நிதி உதவி செய்யுங்கள்" என்று சில கனவான்கள். இப்படி ஒரே நச்சரிப்பு!

என் பாடு பெரும் பாடாக இருக்கிறது! கடந்த மூன்று தேர்தல்களிலும் செலவழித்த பணத்தை மீட்டெடுப்பது எப்படி? காணி, வீடு, நகைகள் அனைத்தும் அடைவில்! எல்லாப் பக்கமும் கடன்; அவற்றை எப்படியாவது அடைக்க வேண்டும்!

எனது கட்சியைச் சேர்ந்த 'சீனியர்' அமைச்சர் எனக்கு எப்படியாவது துணை அமைச்சர் பதவி எடுத்து தருவதாக உறுதியளித்தார். அவருக்கும் ஏதாவது செய்ய வேண்டும்!

இத்தனை பிரச்சனைகளும் தீர உழைக்க வேண்டும்; எப்படியாவது, எந்தவழியிலாவது உழைக்கவேண்டும்! அதுவும் ஐந்து வருடங்களில் உழைத்தாக வேண்டும். ஏனென்றால் அடுத்த தேர்தலில் மீண்டும் தோற்றுவிட்டாய்?. மற்றும் எனது ஆளும்கட்சி அடுத்த முறை ஆட்சிக்கு வராவிட்டால்?.

எனவே எப்படியாவது இந்த ஐந்து வருடங்களில் உழைத்தேயாக வேண்டும்!

அதற்கு ஒரே ஒரு வழி, எனது தொகுதிப் பக்கம் இப்போதைக்கு போகாமல் விடுவதே! சற்று உழைத்த பின்னர், கடன்களை அமைத்தபின்னர், துணை அமைச்சர் ஆன பின்னர் அடுத்த தேர்தல் நெருங்கும் போது ஊருக்குப் போவேன்! எனது அருமை மக்களை சந்திப்பேன்! இது உறுதி!!

# வயிற்றெரிச்சல் கதைகள் - 08

## "ஒரு இளம் பெண்ணின் இதயக் குமுறல்"

எனக்கு வயது இருபத்தெட்டாகிறது. திருமணமாகவில்லை. சுமாரான அழகு. பட்டதாரி; ஆனால் வேலை கிடைக்கவில்லை. அது எனது தவறா?

சகோதர, சகோதரிகள் என்று பிச்சுப் பிடுங்கல் இல்லை. பெற்றோர் மாப்பிள்ளை பார்க்கிறார்கள்.

ஊரில் வீடு, பணம், நகை எல்லாம் இருக்கிறது. ஆனாலும் என்ன? பெண்பார்க்க வரும் 'பையன்கள்' ஒவ்வொருவனும் ஒரு சாட்டைச் சொல்லித் தட்டிக் கழிக்கிறான்; நழுவி விடுகிறான்.

ஒருவன் நிறம் குறைவு என்கிறான்; மற்றொருவன் ஊரில் வீடு வேண்டாம், கொழும்பில் தான் வீடு வேண்டும் என்கிறான். பிறிதொருவன் கார் வாங்கித்தரச்சொல்கிறான். சீதனம் போதா தென்கிறான். அப்பா எல்லாவற்றுக்கும் சம்மதித்தால் எனக்கு வேலையில்லை என்கிறான் இன்னுமொருவன்.

விசாரித்துப்பார்த்தால் என்னை வந்து பார்த்த ஒருவனுக்கு அவனது அலுவலகத்திலேயே காதலி ஒருத்தி இருக்கிறாளாம். மற்றொருவனுக்கு வயதான அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள் எனப் பெரிய குடும்பப்பாரமாம்! அது தான் நான் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டானாம்!

இவ்வாறு என்னைப் பார்க்க வந்த ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு விதம் விதமான பிரச்சனை! எவனாவது என்னைப் பற்றி, எனது நிலைமைப்பற்றி நினைத்துப் பார்த்தானா?

இப்போது எனது இறுதியும், உறுதியுமான முடிவு "இனி திருமணம் செய்வதில்லை" என்பது தான்!

# வயிற்றெரிச்சல் கதைகள் - 09

## "வெளிநாட்டுப் பணமரம்!"

ஊருக்கு, வீட்டுக்கு "கோல்" எடுக்கவே அச்சமாகவுள்ளது. பத்து, பதினைந்து யூரோ போகுமென்பது ஒருபக்கம்; மறுபுறமிருந்து "காசு அனுப்பு; காசு அனுப்பு" என்ற நச்சரிப்பு வருமே என்பது மற்றப்பக்கம். காசு இங்கே ஜேர்மனியில் மரத்திலா காய்க்கிறது? பிடுங்கி அனுப்ப? நான் படும் பாடு எனக்கல்லவா தெரியும்! ஒரு நாளைக்கு பதினெட்டு மணிநேரம் உழைக்கிறேன். காலையில் ஒரு வேலை- தோட்டங்களில்; எட்டு மணிநேரம். இரவில் ஒரு வேலை ஹோட்டல்களில் - பத்து மணிநேரம். இரண்டு மணிநேரம் பிரயாணத்தில் போக ஆக நான்கு மணித்தியாலங்களே உறங்குகிறேன். இது தெரியுமா எனது உறவுகளுக்கு? இது தெரியுமா ஊருக்கு?

அதிகாலைக் குளிரில் ஓவர் கோட், சூட்டுடன், கால்களில் சொக்ஸ், சப்பாத்துடன் கையுறைகள் அணிந்து காய்கறிகள், கோவா, லீக்ஸ், அப்பிள், ஓரேஞ் பறிப்பது - அப்பப்பா - கையுறைகளுக்குள்ளால் குளிர் சென்று உயிரை எடுப்பது யாருக்குத் தெரியும்?

இரவில் ஹோட்டல்களில் மேசைகள் துடைத்து, மற்றவரின் ('வெள்ளைகளின்') சாப்பிட்ட கோப்பைகளைக் கழுவுவது யாருக்குப் புரியும்? ஜேர்மனிக்கு வந்த இந்த ஆறுவருடங்களில் கடுமையாக உழைத்து ஒருமாதிரியாக 'ஏஜென்சியில்' காசைக் கொடுத்து விட்டேன்; வீட்டுக்கடன்கள், அடைத்துவிட்டேன். நகைகள் அடைவு எடுக்கப்பணம் அனுப்பிவிட்டேன். இரண்டு 'குமர்களை' (அக்காக்களைத்தான் சொல்கிறேன்) கரை சேர்த்துவிட்டேன். தம்பிமாரின் படிப்புக்கு பணம் அனுப்பிக்கொண்டிருக்கிறேன். எதிர்காலத்திலும் அனுப்புவேன். அது உறுதி!

மேலும், மேலும் பணமென்றால் நான் என்ன செய்வது? எங்கே போவது?

நான் இனிமேலாவது எனக்காக வாழவேண்டாமா? எனது காதலி கல்யாணியை எப்போது இங்கே அழைப்பது? எப்போது நாங்கள் திருமணம் செய்வது?

ஐயோ! கடவுளே ஒரு வழி சொல்ல மாட்டாயா?

## வயிற்றெரிச்சல் கதைகள் – 10

### "மரணப்படுக்கையில் நான் ...."

சாகக்கிடக்கிறேன் நான்; நாட்கள் எண்ணப்படுகிற தாம்! நினைவு போய்ப் போய் வருகிறது.

நினைவு வரும் போதெல்லாம் சுற்றி நிற்பவர்களைப் பார்க்கிறேன். மனைவி அருகில் அழுதபடி இருக்கிறாள் - பாவம்; நான் போனால் அவள் கதி? எமக்கு இரண்டு மகன்மார்; இரண்டு மகள்மார். இருந்துமென்ன? நான் போன பின் அவளை ஒருவரும் கவனிக்கமாட்டார்கள்.

நல்லகாலம் என் 'பென்சன்' அவளுக்குத்தான். ஆனால் அதையும் படிப்பறிவில்லாத அவளிடமிருந்து மகன்மார் பறித்துக் கொண்டு போய்விடுவார்களோ?

வீட்டைத் தமக்கு எழுதித்தருமாறு மகன்மாரும், தோட்டக் காணியை தமக்கு எழுதி வைக்கும்படி மகள்மாரும் வலியுறுத்தி வருகிறார்கள். ஒருமாதிரி இதுவரை கடத்தி வந்துவிட்டேன். இனி............

இத்தனைக்கும் நான் 'போன' பின் அவளை வைத்துக் காப்பாற்றுவோம் என்று ஒருவரும் இருவரை சொன்னதில்லை!

நினைவு போய் மீண்டும் நினைவு வந்தபோது மனையாள் அருகில் இரண்டு பத்திரங்களுடன், "இந்தாருங்கோப்பா, இதுகளில் கையெழுத்துப் போடுங்கோ. வீடு மகன்மாருக்கு; தோட்டங்காணிகள் இரண்டு மகள்மாருக்கு. நான் பின்னாலிருக்கும் குடிசையில் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு இருந்துவிட்டு, கொஞ்ச நாட்களில் உங்களிட்டை வந்திடுவன்" என்றாள் அழுதபடி.

எனது தெய்வம் கேட்டுக் கொண்டபடி நடுங்கும் கரங்களினால் பத்திரங்களில் கையெழுத்திட்டேன்.

மகன்மார், மகள்மார் முகங்களில் மகிழ்ச்சி!

மனைவியோ அழுதுகொண்டிருக்கிறாள்!

நான் போய்க் கொண்டிருக்கிறேன்!

நன்றி:'ஞானம்' -194 -ஜீலை 2016

## வயிற்றெரிச்சல் கதைகள் - 11

### "கணவனே கண்கண்ட தெய்வம்"

எனக்குத் தெரியாதென்று நினைக்கிறார் போலும்; அவரது ஒவ்வொரு அசைவையும் அறிந்திருக்கும் மனைவி நான்! எனக்கா தெரியாது அவர் அந்த மீனாவை வைத்திருப்பது?

'எங்களிருவரினதும் திருமணத்திற்கு முன்பேயே மீனாவுடன் தொடர்பா அல்லது அதன் பிறகா?' என்பது எனக்குத் தெரியாது தான். ஆனால் மீனாவுக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதும் அவர்களை இவர் நன்றாகக் கவனிப்பதும் எனக்குத் தெரியும்.

'வெளியூரில் வேலை' என்று கூறிவிட்டு மீனாவீட்டில் இரண்டொரு இரவுகள் இவர் தங்குவதும் எனக்குத்தெரியும். தான் தெரிந்தே செய்யும் தவறுக்காக கோயில் கோயிலாகப் போய் மனம் வருந்தி வணங்குவதும், பிறகும் அதே தவறைச் செய்வதும் நான் அறியாததா?

ஆனால் எனக்கும், எனது குழந்தைகளுக்கும் ஒரு குறையும் வைக்கவில்லை.


என்றாலும் எனக்கு ஒரு விசயம் தான் புரியவில்லை; இவர் என்னில் என்ன குறையைக் கண்டார்? என்னிடம் இல்லாத எதனை அந்த மீனாவிடம் கண்டார்? நான் என்ன குறை வைத்தேன் இவருக்கு? அவர் காலாலிட்ட வேலை எல்லாம் தலையால் செய்தேனே? அறுசுவை உணவு சமைத்துக் கொடுத்தது தான் நான் செய்த பிழையா? குழந்தைகளை நன்றாகப் பார்க்கவில்லையா?

இறைவா எனக்கு ஏன் இந்த சோதனை?

ஏதோ அவர் நல்லா இருந்தால் சரி!

# பகுதி – VIII

# ஒரு பக்கக் கதைகள்



# பொருளடக்கம்


1. சமயோசிதமும் சாமர்த்தியமும் 149
2. மொட்டை 150
3. உள்ளம் கவர் கள்வன் 151
4. பாசம் 152
5. நண்பனுடன் ஒரு அழகுப் பெண் 154

# ஒரு பக்கக் கதைகள் - 01

## "சமயோசிதமும் சாமர்த்தியமும்"

அன்றாட சாமான்கள் வாங்குவதற்காக வெள்ளவத்தை மார்க்கற்றுக்கு சென்று கொண்டிருந்தேன். உருத்திரா மாவத்தை காலி வீதியைச் சந்திக்குமிடத்தில் எனது நீண்டநாள் பழைய நண்பன் ஒருவனைச் சந்திக்க நேர்ந்தது. உழைப்பால் உயர்ந்தவன்; கெட்டிக்காரன்; சமயோசிதமாகப்பேசி காரியங்களைச் சாதிப்பதில் வல்லவன்; பணக்காரன். நீண்ட நாட்களின் பின்னர் சந்திப்பு நிகழ்ந்ததால் பல விடயங்கள் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தோம்.

எமது இன்னுமொரு நண்பன் காலிவீதியின் மறுபுறத்திலிருந்து வீதியைக்கடந்து எம்மை நோக்கி கையசைத்தபடி வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும்தான் தாமதம் என்னுடன் கதைத்துக் கொண்டிருந்த நண்பன், "மச்சான் ஒரு நூறுரூபா தா! அவசரமாகத் தேவைப்படுகிறது" என்றான். எனக்கோ அதிர்ச்சி! 'அவனிடமில்லாத பணமா? அதுவும் இவ்வளவு நேரமாகக் கதைத்துக் கொண்டிருந்தவன் திடீரெனப்பணம் கேட்கிறானே! அதுவும் நூறு ரூபா!' என்றெண்ணிக்கொண்டு சாமான்கள் வாங்க வைத்திருந்தபணத்தில் நூறு ரூபாவை எடுத்துக் கொடுத்தேன்.

வந்த நண்பன், "ஹலோ மச்சான் எப்படி இருக்கீங்க, சுகமா?" என்று கேட்டபடி எனது நண்பனிடம், "மச்சான் உன்னைத்தான் தேடிவந்தேன். ஒரு ஆயிரம் ரூபா கொடு; அவசரமாகத் தேவைப்படுகிறது; அடுத்த வாரம் தருகிறேன்" என்றான். எனது நண்பன் தலையைத் தொங்க விட்டபடி, "சொறி மச்சான், இப்போ என்னிடம் ஆயிரம் ரூபா இல்லை; இந்தா நூறு ரூபா" எனக் கூறி நான் கொடுத்த நூறு ரூபாவை அவனிடம் கொடுத்து அவனை அனுப்பி வைத்தான்.

பின் என்னிடம் திரும்பி "சொறி மச்சான்; அவன் கொஞ்சம் அப்படி, இப்படி; அதுதான் உன்னிடம் நூறுரூபா வாங்கி அவனிடம் கொடுத்து அனுப்பிவைத்தேன். போனால் நூறுரூபாவுடன் போகட்டும்; இல்லையென்றிருந்தால் நம்பவும் மாட்டான்; நட்பும் கெட்டுவிடும்" என்றான் அந்த சாமர்த்தியசாலி! நான் கொடுத்த நூறு ரூபாவையும் திருப்பித்தந்தான்.

அவனது சமயோசிதத்தையும், சாமர்த்தியத்தையும் எண்ணி மனதுள் மெச்சிக் கொண்டேன்!

நன்றி: ஞானம் 195 - ஆகஸ்ட் 2016

## ஒரு பக்கக் கதைகள் - 02

### "மொட்டை"

சுவர்ணாவிற்கு பெண்பார்க்கும் படலம். வெள்ள வத்தை சம்மாங்கோடு பிள்ளையார் கோயிலில் நடந்து முடிந்திருந்தது. சுவர்ணாவிடம் அழகு, பணம் என அனைத்தும் இருந்ததினால் கனடாவிலிருந்து வந்திருந்த மாப்பிள்ளை வீட்டார் உடனேயே கோயிலிலேயே வைத்து "ஓகே!" சொல்லி விட்டார்கள்.

வெளிநாட்டு மாப்பிள்ளை கேட்டுக் கொண்ட படி சில நிமிடங்கள் சுவர்ணாவிடமும் கதைத்ததன் பின் சுவர்ணா நாணிக் கோணியபடி வந்ததிலிருந்து சுவர்ணாவிற்கும் சம்மத மென்பது அனைவர்க்கும் புரிந்தது.

வீட்டிற்கு வந்ததும் தான் பிரச்சனை வெடித்தது. கோவிலிற்கு வராத சுவர்ணாவின் ஒன்றுவிட்ட அண்ணன் வீட்டிற்கு வந்து 'காள், பூள்' என்று கத்திக் கொண்டிருந்தான்.

"உவன் தீபனே உவளுக்கு மாப்பிள்ளை? ஐயோ என்ன கொடுமை! முழு மொட்டை அவனுக்கு! 'விக்' போட்டுக் கொண்டு வந்து இந்த அருமையான பிள்ளையை ஏமாத்திப்

போட்டான்! நான் இதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன்". அவன் போட்ட சத்தத்தில் அயல் வீட்டாரும் எட்டிப்பார்க்கத் தொடங்கினார்கள்.

சுவர்ணாவின் பெற்றோருக்கும், சகோதரர்கட்கும், சம்பந்தத்தைக் கொண்டுவந்த தாய் மாமனுக்கும் கூட சற்று மனம் மாறத் தொடங்கியது. "இன்னமும் இறுதி முடிவெடுக்கவில்லைத் தானே! நிறுத்தி விடலாம்" என்று எண்ணத் தொடங்கினார்கள்.

கோயிலிலிருந்து வந்து ஆடைகளைக் களைந்து கொண் டிருந்த சுவர்ணா தனது அறையிலிருந்து வெளிப்பட்டாள். "எல்லாம் அவர் என்னோட தனியக் கதைக்கேக்க சொன்னவர்; வெளிப்படையான அவரை எனக்குப் பிடிச்சுக்கொண்டுது; கல்யாணம் முடிச்சு இரண்டு கிழமையில் முடி உதிர்ந்தால் என்ன செய்கிறது? எனக்கு கல்யாணமென்றால் அவரோட தான்" என்றாள் உறுதியாக!

கூச்சலிட்டுக் கொண்டிருந்த அண்ணன் உட்பட அனை வரும் வியப்பில் உறைந்தனர்.

## ஒரு பக்கக் கதைகள் - 03

### "உள்ளம் கவர் கள்வன்"

புதிதாகக் காதல் திருமணம் புரிந்த வசீகரன் தனது அழகிய இளம் மனைவியுடன், மனைவிக்கு சில பொருட்கள் வாங்குவதற்காக கடைவீதிக்குச் சென்றான். சனிக்கிழமை மாலை நேரமாதலால் சனக் கூட்டம் திருவிழாக்கூட்டம் போலி ருந்தது.

ஒருமாதிரியாக 'ஷொப்பிங்'கை முடித்த வசீகரன் கடைக்கு வெளியே வந்து மனைவியுடன் 'ஆட்டோ'வுக்காக காத்திருந்தான். ஒரு ஆட்டோவும் நிற்பாட்டுவதாக இல்லை.

எதிர்ப்பக்கத்திலும் சாலைக்கப்பாலும் சனக்கூட்டம். அந்தக் கூட்டத்தில் ஒரு இளைஞன் தனது மனைவியை உற்றுப் பார்ப்பதை வசீகரன் அவதானித்தான். மனைவியும் அந்த இளைஞனைப் பார்ப்பதுபோல் தெரிந்தது. புத்தம் புதிய கணவர்களுக்கே உரித்தான சந்தேகம் அவனிடம் தொற்றிக் கொண்டது.

போதாதற்கு மனைவி தனது 'காலர்' வைத்த சட்டையால் தனது கழுத்தில் இருந்த புத்தம் புதிய தங்கத் தாலியை மறைப்பதையும் வசீகரன் தனது கடைக் கண்ணால் கவனித்தான். "ஓகோ, அந்தப் பக்கம் நிற்கும் இளைஞனுக்கு தான் மணம் முடிக்காத இளம் கன்னி என்று காட்ட முனைகிறாளோ" என்று எண்ணினான்.

தான் எண்ணியதை தனது காதல் மனைவியிடம் கேட்டும் விட்டான். "ஏன் தாலியை மறைக்கிறீர்?" மனையாள் அளித்த பதில் அவனது சந்தேகத்தையும் போக்கி அவள் மேல் மேலும் மதிப்பையும் உயர்த்தியது.

"என்னப்பா சின்னப்பிள்ளை போல் கேட்கிறியள். அங்க பாருங்கோ, எதிர்புறத்தில் ஒரு பையன் என் கழுத்து தாலியையே உற்றுப் பார்க்கிறான். கள்ளன் போலத் தெரிகிறது; பேப்பரிலும் 'தேடப்படுகிறான்' என்ற தலைப்பில் அவன் படத்தையும் பார்த்ததாக ஞாபகம்" என்றாள்.

வசீகரன் வெட்கித் தலைகுனிந்தான்!

## ஒரு பக்கக் கதைகள் - 04

### "பாசம்"

அந்த பிரபல பாடசாலையின் காவற்காரன் நான். காலை ஆறு மணியிலிருந்து மதியம் இரண்டு மணிநேரம் வரைதான் வேலை. பெயருக்குத்தான் அப்படியே தவிர, எனக்கு கல் யாணமாகாததாலும், பாடசாலையிலேயே தங்குவதாலும்

மாலை ஐந்து, ஆறு மணிவரை பாடசாலை வளவிலேயே எனது பொழுதுபோகும். அதன் பின்னர் தான் கோயில் ஆனாலும் சரி; சினிமா, 'பார்ட்டி' ஆனாலும் சரி.

ஆறாம் வகுப்புவரை மட்டுமேயுள்ள சிறுவர் பாட சாலை என்பதால் நான் காலை ஆறுமணியிலிருந்து பாட சாலை முடிந்து மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் செல்லும் வரை மிகவும் அவதானமாக இருப்பேன். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் தவிர ஈ, எறும்பைக்கூட பாடசாலைக்குள் விடமாட்டேன். சந்தேகமானவர்கள் யாரா வது நடமாடினால் அதிபருக்கும், பொலிசுக்கும் அறிவித்து விடுவேன்.

கடலை விற்பவர்கள், வடை, ஐஸ்கிறீம், குளிர்பானம் விற்பவர்களைக் கூட பாடசாலை வாசலிலிருந்தும், மதிற் கரையிலிருந்தும் சற்று எட்ட நின்றே விற்பனை செய்யச் சொல்வேன்; மிகவும் கண்டிப்பாயிருப்பேன்.

அந்த வியாபாரிகளில் ஒரு வியாபாரி எனது கண் ணையும், கருத்தையும் கவர்ந்தான். அவன் ஐஸ்கிறீம் விற்பவன். வாட்டசாட்டமாக இருந்த அவன் சிறுவர்களிடம் அன்பும், ஆதரவுமாக இருந்தாலும் பண விடயத்தில் மிகவும் கறாராக இருந்தான். ஒரு பிள்ளைக்கு ஒரு ஐஸ்கிறீமிற்கு மேல் கொடுக்க மாட்டான். "உடம்பிற்கு ஆகாது" என்று அன்புடன் அறிவுரை கூறி திருப்பி அனுப்பிவிடுவான். ஆனால் பணமில்லாமல் ஐஸ்கிறீமிற்காக தூரத்தில் நின்று ஏங்கிக் கொண்டிருக்கும் ஒரு சிறுவனை மட்டும் கடைசியில் அழைத்து இலவசமாக ஐஸ்கிறீம் கொடுப்பான். இது தினமும் நடைபெற்றது. அந்தச் சிறுவன் பாடசாலைக்கு வராத நாட்களில் ஏனையசிறுவர்களை அழைத்து அந்தக் குறிப்பிட்ட சிறுவன் "ஏன் வரவில்லை?"

என்று ஆதரவுடன் கேட்பான்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நான் மனம் கேளாமல் அதுபற்றி ஐஸ்கிறீம்காரனிடமே கேட்டுவிட்டேன் "ஏன் அந்தச் சிறுவன் மேல் மட்டும் அத்தனை பரிவு?" என்று.

அவன் சொன்ன பதில் என்னையும் ஏங்க வைத்து விட்டது.

"அவன் என் பேரன் ஐயா; மகளின் மகன். ஒரே மகள்; எமது சொல்வழி கேட்காமல் வேறு ஜாதி ஏழைப்பையனை காதலித்து அவனுடன் ஓடிப்போய்விட்டாள். அவளுக்குப் பிறந்தது தான் இது! ஊர் உலகத்துக்குப் பயந்து அவர்களை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. ஆனால் கேடுகெட்ட பாசம் மனதை அலைக்கழிக்கிறது. அதுதான் இப்படி ஐஸ்கிறீம் கொடுத்து ஆறிக் கொள்கிறேன்" என்றான் கண்கலங்க!

எனது மனதில் பாரத்தை ஏற்றிவிட்டு அவன் போய்விட்டான்!

## ஒரு பக்கக் கதைகள் - 05

### "நண்பனுடன் ஒரு அழகுப் பெண்"

என் நெருங்கிய நண்பனை நீண்ட நாட்களுக்கு பின்பு சந்தித்தேன். அவனுடன் ஒரு பெண்ணும் இருந்தார். அவரை தன்னுடைய மனைவி என்று எனக்கு அறிமுகப்படுத்தினான்.

அதை கேட்ட நான் ஆச்சரியப்பட்டேன். அவன் மனைவி கறுப்பு நிறம் கொண்டவர். எனது நண்பனோ அம்சமாக இருப்பான். சுருட்டையான தலைமுடியும், சிவப்பு மேனியும், கம்பீரமான தோற்றமும் கொண்டவன். படித்தவன், வசதி படைத்தவனும் கூட!

“இருவருக்கும் ஜோடிப்பொருத்தம் இல்லையே!” என்ற கோணத்தில் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

எனது எண்ண ஓட்டத்தை புரிந்து கொண்டவன் கண் ஜாடை காட்டி தனியே அழைத்து சென்று, பேசினான். அவன் கூறிய தகவல் மெய்சிலிர்க்க வைத்தது.

“எனது குடும்பத்தை பற்றி உனக்குத்தான் நன்றாக தெரியுமே. எனது அப்பா அதிக வரதட்சணைக்காக கறுப்பு நிறமுடைய எனது அம்மாவை திருமணம் செய்து கொண்டு, பின்பு நிறத்தை குத்திக்காட்டி பேசி கொடுமைப்படுத்தி வந்தார். அதனால் மனமுடைந்த எனது அம்மா தற்கொலை செய்து கொண்டார். அதற்குத்தான் இந்த பிராயசித்தம் என்றான்.

அவனும், அவன் மனைவியும் மிகுந்த மனப்பொருத்தம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள். அழகு தோல் நிறத்தில் இல்லை. மனதில் இருக்கிறது என்பதை புரிந்துகொண்டேன்.

நன்றி: தினத்தந்தி குடும்ப மலர் - 7.2.2016

(பரிசாக இந்தியரூபா 250/= கிடைத்தது)

**இந்த ஒருபக்கக் கதை ஜேர்மனியில் “கறுப்பி” என்ற தலைப்பில் எனது தம்பி திரு.ஆ.பூபதிபாலவடிவேற்கரனால் குறும்படமாகத் தயாரிக்கப்பட்டு அதில் அவரது மகள் திருமதி.காயத்திரி கதாநாயகியாக நடித்து வெற்றிகரமாக வெளியிடப்பட்டது,**

# இணைப்புகள்

# இணைப்பு - 01

**நூல் : மறைந்தும் மறையாதவர்கள்**
ஆசிரியர்: **இணுவையூர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்**
வெளியீடு: **சுமதி பதிப்பகம்** விலை : **ரூபா 500/=**

இந்நூலில் 51 கட்டுரைகள் அடங்கியுள்ளன. சமயப் பெரியார்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், அரசியல்வாதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலதரப்பட்ட ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள் இந் நூலில் அடங்கியுள்ளன. இவ் வகையில் ஆளுமைகள் பற்றி ஆர்வம் உடையோருக்கும் மாணவர்களுக்கும் பயனுள்ள நூலாக இது அமைந்துள்ளது. இந்த ஆளுமைகள் பற்றி வாசித்து அறிந்து கொள்வோர் தாமும் அந்நிலையை எய்த வேண்டும் என ஆற்றுப்படுத்தும் செயற்பாடாகவும் இந் நூல் அமைந்துள்ளது விதந்துரைக்கப்பட வேண்டியதாகும். வாசகர்கள் தமது மனங்களை வளம்படுத்திக் கொள்ளவும் செம்மையுறச் செய்வதற்கும் இக்கட்டுரைகள் வழிவகுக்கின்றன. மேலும் குறிப்பிட்ட தினங்களை நினைவு கூரவைக்கும் எழுத்துக்களாகவும் சில கட்டுரைகள் அமைந்துள்ளன. பயன்மிக்க இந்நூலை எழுதிய ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.




நன்றி - ஞானம் - 182 -ஜூலை -2015

## இணைப்பு - 02

### மறைந்தும் மறையாதவர்கள்

அரசியல் தலைவர்கள், கவிஞர்கள், நாட்டுக்கு உழைத்த உத்தமர்கள், மேல்நாட்டு சாதனையாளர்கள் வாழ்க்கை வரலாற்றை கூறும் நூல்.





நேதாஜி, இந்திரா காந்தி, "கப்பலோட்டிய தமிழன்" வ.உ.சிதம்பரனார், மகாகவி பாரதியார், மறைமலையடிகள், பேரறிஞர் அண்ணா, கிருபானந்தவாரியார், எம்.கே.தியாகராஜபாகவதர், மு.வரதராசனார் உள்பட 49 பேர்களின் வரலாறுகள் இடம் பெற்றுள்ளன. அதிகமாக வளர்த்தாமலும், மிகவும் சுருக்கி விடாமலும் மிகத் திறமையாக வரலாறுகளை சுவைபட எழுதியுள்ளார் இலங்கைத் தமிழரான ஏ.ஆர்.பாலஸ்ரீதரன்.

(வெளியிட்டோர்: சுமதி பதிப்பகம், கொழும்பு-6; தமிழ்நாட்டில் கிடைக்கும் இடம்: ஏ.ஆர்.பாலஸ்ரீதரன் மேற்பார்வை எஸ்.பர்வதநாதன், 11ஏ, முதல் மெயின் ரோடு, ஷெனாய் நகர் மேற்கு, சென்னை-30; விலை: இலங்கையில் ரூ.500; தமிழ்நாட்டில் ரூ.250)


நன்றி தினத்தந்தி (தமிழ்நாடு)5.10.2016

## இணைப்பு - 03



# இணைப்பு - 04





தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை, தமிழ்நாடு அமைப்புக்களின் கூட்டமைப்பு 13.02.2016, 14.02.2016 ஆகிய நாட்களில் இணைந்து நடத்திய உலகத்தமிழர் படைப்பாளர்கள் மாநாட்டில், 13.02.2016 சனிக்கிழமை உலக அளவில் சிறந்த தமிழ்ச்சங்கத்திற்கான விருதைக் கொழும்புத் தமிழ்ச்சங்கமும், 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற விழாவில் இணுவையூர்.ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன் எழுதி வெளியிட்ட "மறைந்தும் மறையாதவர்கள்" நூலுக்காக 2015ஆம் ஆண்டின் சிறந்த தொகுப்பு நூலாசிரியரான விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# இணைப்பு - 05



தமிழ்த்தாய் அறக்கட்டளை-தஞ்சாவூர்.

தமிழ்நாடு தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு

இணைந்து நடத்தும்

உலகத் தமிழ்ப் படைப்பாளர்கள் மாநாடு - 2016

சிறப்பு விருது

தஞ்சாவூர்-தமிழ்ப்பல்கலைக்கழக கரிகாற்சோழன் கலையரங்கத்தில்
13.02.2016 சனிக்கிழமை மற்றும் 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை
ஆகிய இருதினங்கள் நடைபெற்ற மாநாட்டில்

**2015 ஆம் ஆண்டின் சிறந்த தொகுப்பு நூலாசிரியருக்கான
சிறப்பு விருது பெறுதல்**

**திரு ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்**

இலங்கை.

சிறந்த தமிழ்ப் பணிக்கான இவ்விருதை

தஞ்சாவூர். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

**திருமதி இர.திருவளர்செல்வி அவர்கள் தலைமையில்**


தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர்

திரு தெ.விஞ்ஞானம் அவர்கள்

வழங்கிச் சிறப்பித்தார்கள்.


தலைவர்
முனைவர் வி.முத்து
மாநாட்டுத் தலைவர்(ம)
முதுவைத் தமிழ்ச்சங்கம்,
பல்லவன் கல்வி நிறுவனங்கள்,
காஞ்சிபுரம்.

கவிஞர் உடையார்கோயில்குணா
பொதுச்செயலாளர்,
தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன்கோயில்
தஞ்சாவூர்-613501.



நூல் ஆசிரியர்

## நூலாசிரியர் பற்றி...




கலாபூஷணம் ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன் அவர்களை நான் கொழும்பு நகைச்சுவைமன்றத் தலைவராக இருந்த காலத்திலிருந்து நன்கறிவேன். எப்போதும் மலர்ந்த முகத்துடனும், நகைச்சுவைப் பேச்சுடனும், மாறாத அன்புடனும் பழகுபவர். அன்னாரது நகைச் சுவைப் பேச்சே எங்களது நட்பை இறுகச் செய்தது என்றால் அது சற்றும் மிகையல்ல.

அவர் நகைச்சுவைத் துணுக்குகளை பல்வேறு சஞ்சிகைகளிலும் எழுதிவந்தார். அவை வாசகரிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் அவரது நகைச்சுவைத் துணுக்குகளையும், ஒருபக்கக் கதைகளையும் ஆவணப்படுத்தி நூலாக வெளியிடும்படி கேட்பதுண்டு. 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று கர்மவீரர் காமராஜர் பாணியில் கூறுவார்.

எதற்கும் ஒரு நேரம் வரவேண்டுமல்லவா? இன்று அது கைகூடி உங்களின் கைகளில் தவழ்கிறது! வாசித்து மகிழுங்கள். இந்நூல் நூலாசிரியரின் மூன்றாவது நூல். ஏனைய இரண்டு நூல்களுக்கு நீங்கள் அளித்த பேராதரவை இந்நூலுக்கும் வழங்க வேண்டும். நூலாசிரியரின் எழுத்துப் பணிகள் தொடரவும், வளரவும் எமது இனிய வாழ்த்துக்கள்.



க.அரசரட்ணம்
B.A. Dip.in.Human Rights
(சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர்)

ISBN - 978-955-43909-0-4